127

வசந்தம்



சர்வசித், சித்திரை

ஏப்ரல், 1947

JL
ma11, N42vm
N47.6.1
197252

எல்லா விதமான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கும்

ஆயுள், நெருப்பு, கப்பல், விபத்து

மோட்டார்கார் பிறர் மீது ஏறி விபத்தேற்பட்டாலும், மோட்டார்களுக்கு ஏற்படும் சகல விபத்துக்களுக்கும், நம்பிக்கைக்கு உத்திரவாதம், தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதும், ரெயில், தபால், விமானம் முதலிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களும் அடங்கியுள்ள,

நியூ இந்தியா

அஷ்யூரன்ஸ் கம்பனி லிமிடெட்டில்

இன்ஷ்யூர் செய்யுங்கள்.

இந்தியாவிலேயே, சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் செய்யும் பெரிய கம்பனி. டாடா குடும்பத்தினரால் துவக்கப்பட்டது.

மொத்த ஆஸ்தி சுமார் 9 கோடி ரூபாய்.

சேர்மென்: எ. டி. ஷராப் எஸ்குயர்.

வைஸ் சேர்மென்: ஜே. ஆர். டி. டாடா எஸ்குயர்.

தலைமை ஆபீஸ்:

மஹாத்மா காந்தி ரோடு,

கோட்டை - பம்பாய்.

மதராஸ் கிளை:

4-5 முதல் லைன் பீச்.



நம் நாட்டுத்தொழிலை ஆதரியுங்கள்

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

நூற்றல்:

20 நெ. முதல் **44** நெ. வரை ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்ட்டிங், மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. **116** நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.



வசந்தா மில்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர்: போன்: நெ. 25.

சுளுக்கு, வாயுப்பிடிப்பு, நரம்பு
வலி, கால்-கை மரத்துப் போதல், பார்ச
வாயு, அல்லது பல்வலி எதுவானாலும்

நிச்சயமாக:
குணமடைய இதை
உபயோகியுங்கள்.

பாதிக்கப்பட்ட இடத்தில் சிறிது ஒத்தடம் கொடுத்து அங்கு தினம்மும்முறை 10-15 நிமிஷம் விட்டில்ஸ் ஓரியண்டல் பாமைத் தேயுங்கள், விரைவில் வலி நீங்கக் காண்பீர்கள்.

LITTLE'S
ORIENTAL BALM

இந்தியா முழுதும் மிகவும் பிரபலமான சிறந்த ஔஷதம். D.J.K.18

வாயுவால் இடுப்புப் பிடிப்பு, நரம்புநோய் தலைவலி, வாயு, உபத்திரவங்கள் பூச்சிக்கடி மூக்குவலி, ஜலதோஷம், மார்ச்சளி, ஆஸ்துமா, தொண்டைக் கட்டு, இருமல் ஆகிய வைக்கும்:

கை கண்ட
ஔஷதம்

துணி உற்பத்தியாளர் கவனிக்க

நீங்கள் உற்பத்தி செய்யும் சட்டைத் துணிகள் கோட்டுத் துணிகள், சேலைகள், வேஷ்டிகள், முதலிய சகலவிதத் துணிகளிலும், பளபளப்பும் கண் கவர்வனப்பும் உண்டாக்க 'காலண்டர்' செய்யுங்கள்.

குறைந்த சார்ஜில் நிறைந்த அழகுடன் 'காலண்டர்' செய்து தரப்படும்.

வெளியூரிலிருந்து வரும் துணிகள் உடனே கவனித்து 'காலண்டர்' செய்து அனுப்பப்படும்.

விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Calendering Department)

CANNANORE : : NORTH MALABAR.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP" Coimbatore.

Telegrams :- "UMAYAL". **Telephone :- 56 A.**

UMAYAL WEAVING ESTT., LTD.,

Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

சந்தாதாரர்களுக்கு

'வசந்த'த்திற்கு அனுப்பும் செக்குகள், மணியார்டர், போஸ்டல் ஆர்டர் முதலியவைகளில் 'மானேஜர், வசந்தம்' என்று குறிப்பிடவேண்டும்.

மானேஜர் :

வசந்தம், 4/12A திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

ஆடை அணிவகுப்பில் இப்பொழுது அதிகம் அடிபடுவது

காலத்துக்கு தகுந்த பாஷனுக எல்லா நெம்பர் நூல், நிறம், பாட்டர்ன், அதிக நேர்த்தியாய் நெசவு செய்த துணிகள் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கத்தாரால் மதருஸ் மாகாணம் பூராவும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜாஸ்தி சக்தியால் ஓட்டப்படும் யந்திரங்களைக் கொண்டு, பெருவாரியாக உண்டாக்கும் மில் துணிகளைவிட, கைத்றி சரக்குகளுக்கு பலம் நீடித்த உழைப்பு அழகு நேர்த்தி, உபயோகம் மென்மை மிகவும் அதிகம்.

மதருஸ் கூட்டுறவு கைத்துணிகள், சங்கத்தின், மதருஸ் மற்ற ஊர்களிலிருந்து நேராக குறிப்பிட்ட கருர் விலையில் விற்பனை செய்யப்படுவதால், நடுவிலிருக்கும் வியாபாரிகளின் லாபத்தை அகற்ற சாத்தியமாகிறது. ஆகவே, எங்களிடம் சாமான்கள் வாங்குவதால், உங்கள் பணம் மீதமடையும், கஷ்டமுமில்லை

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரிண்ட்ஸ், சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்கத் துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசுவலைகள், க்வில்ட்ஸ், தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ்
கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரோவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A உட்ஸ் ரோடு, மௌண்ட் ரோடு, மதராஸ்.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மஸி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனி மலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரியமலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான

டாடா ஓ-டி-கொலோன்

உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா :

நெ. 4/117 திருச்சி ரோடு : : கோயமுத்தூர்.

2000 வருஷங்களுக்குமுன்
முனனோர்கள் சந்தணத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தணத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தணத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.
ஸ்ரீ
மைசூர்
சந்தண சோப்
சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே
B-3 TM

வசந்தம்

பொருளடக்கம்

மலர் 6 சர்வஜித்து ஸு சித்திரை மீ இதழ் 1

மலர் மணம் 1

ஏன் முடியாது ?
ரா. நா 2

தன்வினை
கோமதி சுப்பிரமணியம் 4

தன்னால்
அ. கிருஷ்ணமூர்த்தி 9

எனது மாமா
"சுபி" 11

தீபாவளிப் பண்டிகை
ஜெயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன் 16

தேவைக்குத் தக்க எஃகு
டி. பி. நவநீத கிருஷ்ணன் ... ... ?7

பிலிப்பைன் தீவுகள்
அ. சிங்காரவேலு ... ... ?5

பொறுமை தேவை
கோமதி சுவாமிநாதன் 38

வாலிபருக்கு...
ப. தனுஷ்கோடி 42

நண்பருக்கு ..
வி. கிருஷ்ணன் 48

கைதியின் காதலி
அரு. பாபநாசம் 51

புத்தக ஆராய்ச்சி
கே. சி. எஸ். ஏ 60

மல்லிகை மொக்கு
தா. நாகலிங்கம் 51

மஹா சுவேதை
கே. சி, எஸ். அருணாசலம் 66

புனர் ஜென்மம்
எச். விஜயகுமார் 72

அம்மா !
கே. ஸ்ரீனிவாசன் 80

தர்ம போதனை
கு. ப. சேது அம்மாள் 81

பாராட்டு
டி. சி. ராமசாமி 87



வெஸ்ட் எண்ட் வாட்சு கோ.,

பம்பாய் : : கல்கத்தா

April 1947.

வசந்தம்

கௌரவ ஆசிரியர்கள்:
டி. கே. சிதம்பரநாத முதலியார் : சர். ஆர். கே. சண்முகம் செட்டியா[ர்]

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

ஆசிரியர்

சித்திரை மலருகிறது. இளமலர்கள் இளங்காற்றில் அழகாக அசைந்தாடிச் சிரிக்கின்றன. வையமே ஒரு புதுக் கனவில் திளைத்து புத்தாடை பூண்டு மோகனக் காட்சி தருகிறது. எங்கும் பச்சையும், பசுமையும் நெஞ்சை நெகிழ்விக்கின்றன.

இயற்கை, உலகுக்கு ஊட்டும் இன்பங்கள் பல. வாழ்விலும் எண்ணற்ற புதுமையும், பொலிவும் பூரிக்கின்றன.

புத்தாண்டில் "வசந்தம்" சகல அம்சங்களிலும் எழில் நிறைந்து விளங்கும். ஒவ்வொரு வீட்டையும் மணக்கச் செய்யும் ஒயில் ததும்பி "வசந்தம்" மென்மையாக வீசும். 'வசந்த'த்தின் வனப்பும், கனிவும் எல்லோருடைய வாழ்விலும் இலங்கும் வழிகளிலே திறம்பட முயல்வோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஏன் முடியாது?

[ரா. நா]

"எழுத்தாளன்தான் உலகத்துக்கு முதல்வன்; அவன்தான் உலகத்தை உருவாக்குபவனும், உருப்படி யில்லாமற் செய்யக் கூடியவனும்" இவ்வாறெல்லாம் எழுத்தாளர் கூடிப் பேசுமிடங்களில் முழக்கம் செய்கிறார்கள். இது வெறும் புகழ்ச்சியல்ல, உண்மை. எழுத்தாளர் யாவரும் இவ்விதப் புகழ்ச்சிக் குரியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. எழுத்துக்களைப் படித்து ரஸிப்பவர்களும் ஆசிரியனை மகா பெரியவன் என்றுதான் மதிக்கிறார்கள். ஆனல் எழுத்தாளர்களிலேயே சிலர் சந்தேகப் பிரகிருதிகளாய் இருக்கின்றனர்.

"எழுத்தாளர் ஒன்றுபட முடியுமா? ஒவ்வொருவரும் ஒரு லட்சியத்தைக் கைக் கொண்டவர்களாகையால் அவர்கள் சுய லட்சியங்களைத் துறந்து ஐக்கியமாக வேலை செய்வது சாத்தியமா? வேண்டுமானல் பத்து பத்துப் பேராகக் கூடி இலக்கிய சர்ச்சை செய்யலாமே ஒழிய ஒரே திட்டம் வகுத்து அதன் கீழ் வேலை செய்வதென்பது எப்படி இயலும்" என்றெல்லாம் எழுத்தாளர்களிலேயே ஒரு சிலர் கேட்கிறார்கள்.

இம்மாதிரி சந்தேகங்களைக் கிளப்புகிறவர்கள் தன்னம்பிக்கையற்றவர்கள்; உள்ளம் சுருங்கியவர்கள்; பிறரைச் சந்தேகிப்பவர்கள்.

அரசியலில் அடிப்படையான வித்தியாசங்கள் இருக்கலாம். மாறுபட்ட அரசியல் கருத்துக்களை வன்மையாக வற்புறுத்தும் எழுத்தாளர்கள் இருக்கலாம். சமூக விஷயங்களிலும் பல்வேறு எண்ணங்களைக் கொண்ட பலவகை எழுத்தாளர் இருக்கலாம். ஆனல் ஒவ்வொரு எழுத்தாளனும் தத்தம் கருத்துக்களைத் தாராளமாக வெளியிடும் உரிமையைப் பாதுகாக்க எழுத்தாளர்கள் யாவரும் ஒன்றுகூட முடியாதா?

எழுத்தாளன், பதிப்பாசிரியன் என்ற பாகுபாடு உள்ளவரையில் எழுத்தாளனின் உரிமையைப் பாதுகாக்க ஆசிரியர்கள் இனம் ஒன்றுபட முடியாதா?

அந்நியநாட்டு இலக்கியங்கள் முன்னேறியுள்ள வகைகளை ஆராய்ந்து அதே வகையில் நம்முடைய இலக்கியங்கள் வளம் பெற எழுத்தாளர்கள் ஒன்று கூடி திட்டம் வகுக்க முடியாதா?

எழுத்தாளர்கள் ஸ்தாபனத்தில் சேர்ந்துள்ளவர்களைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் மேதை

157252

யுள்ளவர்கள் அந்தப் பகுதிக் குட்பட்ட இலக்கியத்தை மேன்மையுறச் செய்வதற்கு வழி தேடலாகாதா ?

புது இலக்கியங்களை ஒன்று கூட்டி விமர்சனம் செய்தால் தவரு ? விமர்சனத்தல் ஏகோபித்த அபிப்பிராயத்தை வெளியிட வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஒரு புஸ்தகத்தைப்பற்றி எட்டு விதமான அபிப்பிராயமிருந்தாலும் அத்தனை அபிப்பிராயங்களையும் விமர்சிக்கப்பட்ட நூலின் ஆசிரியர் அறிந்தால் அவர் எழுத்து அபிவிருத்தியடைய உபயோகமாயிருக்காதா ?

எதைப்பற்றி புஸ்தகம் எழுதலாம்; புஸ்தகத்தின் அச்சு, அமைப்பு முதலிய விஷயங்களில் அபிவிருத்தியடைய எழுத்தாளர் சங்கங்கள் உருவான யோசனைகளைக் கூற முடியாதா ?

உலகமெல்லாம் ஒன்று கூடும்படி தினந்தோறும் எழுதிவரும் எழுத்தாளர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையாக இருக்க முடியாது என்ருல் அது நகைப்புக்கிடமான விஷயமாகாதா ?

தனிப்பட்டவர் உரிமை என்பதற்கும் ஓர் எல்லை உண்டு, எல்லை இருக்க வேண்டும். தனிப்பட்டவர் உரிமைக்குப் பங்கம் ஏற்படாமல் ஸ்தாபனத்தை வளர்ப்பது சாத்தியம் என்பதை உலகத்தில் நிலவிவரும் ஸ்தாபனங்களின் சரித்திரங்களை ஆராய்ந்து பார்த்தால் தெளிவாகத் தெரியும்.

பாஷை வளர்ச்சி விஷயத்தில் எழுத்தாளர்கள் தலையிடலாகாது, அகராதி விஷயத்தில் அவர்கள் அக்கறை செலுத்தலாகாது என்ற அபிப்பிராயம் உதவியாகச் சில எழுத்தாளர்களிடையே இருந்து வருகிறது. பாஷையின் தன்மை எழுத்தாளனுக்குத் தெரிந்த அளவு பிறருக்குத் தெரியாது. பாஷையைக் காலப் போக்குக்கேற்ப, அதன் தனித் தன்மைக்குப் பங்கமில்லாமல் பண்படுத்த எழுத்தாளனைத் தவிர வேறு யாருக்கும் யோக்யதை இல்லை.

உலகம் பல வகைகளில் நிபுணர்கள் கைகளில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறது. எழுத்தாளன் தன் மொழி வளத்தை மேன்மைப்படுத்தும் வகையைப் பிறர் கையில் ஒப்படைத்தால் அதைப் போல் கேடு விளைவிக்கும் விஷயம் வேறு எதுவுமில்லை.

எழுத்தாளன் பாஷையை அழகு படுத்தலாம்; கற்பனையை வளர்க்கலாம்; சமூகத்தை ஊக்குவிக்கலாம்; உருப்படச் செய்யலாம். ஒற்றுமைக்கு வழி காட்டலாம்; கனவு உலகத்திற்கு அழைத்துச் செல்லலாம்; அவன் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. அவன் லட்சியத்திற்கு வேலி கட்டுவது மடமை. இதை எல்லோரையும்விட எழுத்தாளர் உணர வேண்டியது அவசியம், அவசரமும் கூட.

தன் வினை

[கோமதி சுப்ரமண்யம்]

சாலை ரோட்டின் வழியாக வேகமாகச் சென்று கொண்டிருந்தது வண்டி. அதைவிட வேகமாகச் சென்று கொண்டிருந்தது சாரதாவின் மனம். அவள் இப்பொழுது எங்கே போகிருள்? எதற்காகப் போகிருள். இதை நினைக்கும் பொழுது அவளது உள்ளத்தி லெழுந்த சலனத்தின் சாயை முகத்தில் படர்ந்தது. அவளுக்கு விவாகம் நடக்கும் பொழுது இம்மாதிரி நிகழ்ச்சிகள் தன் வாழ்க்கையில் நேரிடுமென எதிர்பார்த்திருந்தாளா? இல்லை. அவள் புதுப் பெண்ணுக புக்ககம் வரும் பொழுது எவ்வளவு ஆனந்தத்துடன் வந்து சேர்ந்தாள்.

இப்பொழுதும் தானென்ன? அவர்கள் தாம்பத்ய வாழ்க்கையில் ஏதாவது பங்க மேற் பட்டதா? அதுவுமில்லை.

சாரதாவிற்கு மணமாகி ஐந்தாறு வருஷங்களாகியும் புத்திர பாக்கியம் இல்லை. அதற்காக அவளது கணவரும், மாமியும் 'மலடி' என்ற சொல்லம்பினல் எத்தனை தடவை தாக்கியிருக்கிருர்கள். அதை யெல்லாம் எவ்வளவோ பொறுமையுடன் சகித்து வந்திருக்கிருள். ஆனல் அவளது மலட்டுவிதி கணவனது மறுமணத்தில் கொண்டு விடுமென எதிர்பார்க்கவில்லை. அப்பொழுதும் சாரதா தனது துக்கத்தை வெளிக் காட்டிக்கொள்ள வில்லை. உனது மனதிற்குப் பிடித்த பெண்ணுகவே மணந்து கொள்ளுகிறேன் என்ற கணவனின் வேண்டு கோளுக்காகவே, பெண்ணைப் பார்த்துவர, அவளும், அவளது மாமியாரும் புறப்பட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

புதிய ஊரின் இரு புறங்களிலுமுள்ள காக்ஷிகளை பார்த்து ரஸிப்பதோடு, வண்டிக்காரனின் வர்ண ஜாலங்களும் சேர்ந்து பாதை நெடுக சென்று கொண்டிருந்தது.

வீடு வந்து சேர்ந்ததும் பெண் வீட்டாரின் வரவேற்பு உபசாரமும் முடிந்தன. நாடக ஜோடனை போல் பெண்ணைத் தயாராக அலங்கரித்து வைத்திருந்த அறைக்கு இருவரையும் அழைத்துச் சென்ருர்கள். பெண் நல்ல சிவப்பு, கவர்ச்சி மிக்க களைபொருந்திய முகம். துள்ளித்திரியும் கண்கள். சாந்தமான பார்வை. அலையலையாகப் புரண்டு நெளியும் கூந்தலை பின்னி வாரிக் கட்டியிருந்தது. அதைச் சுற்றிலும் செருகி யிருந்த மணங்கமழும் ரோஜா மலர் பார்ப்பவர்களுக்கு பிறைச் சந்திரனை நினைப்பூட்டுவது போலிருந்தது. இயற்கை யழகுடன் செயற்கை யழகும் சேர்ந்து பொலிந்து கொண்டிருந்த அப்பெண்ணைப் பார்க்கும் பொழுது சாரதாவிற்கு ஒரு, விதமான வாஞ்சை யெழுந்தது. உள்ளத்தில் உவகை பொங்க 'பெயரென்னம்மா' என்று கேட்டாள் பக்கத்திலிருந்த பெண்ணிடம்.

"மங்களம்"

ஆஹா! மங்களம் எவ்வளவு அருமையான பெயர். இவளாவது

என்னைப்போல் இராமல் மங்கள மாய் பெத்துப் பெருகி பெரிய வீட்டுக்காரியாக இருக்கட்டு மென்று மனதிற்குள்ளேயே நினைத்துக் கொண்டாள். இன்னும் சற்று ஆசையுடன் அருகில் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். இதற்குள் பக்கத்து வீட்டில் ஏதோ கூக்குரலெழுந்தது. "அது என்ன சத்தம்" என்று சாரதா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஊ...ம், இதுவா. எந்நேரமும் உண்டானதுதான். பக்கத்து வீட்டில் ஒரு அம்மா இருக்கிறாள். பொல்லாத ராக்ஷஸி. அவளுக்கு சக்களத்தி பெண் ஒன்று இருக்கிறது. அதைப் படுத்துகிறபாடு அப்பா...... அந்தப்பெண்ணைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. மலடிக்குக் கூட இரக்கம் இருக்கும் அவள் படுகிற அவஸ்தை..."

சாரதாவின் முகம் கருத்தது. 'மலடி' என்ற சொல் அவள் செவியில் நாராசமாய்ப் பாய்ந்தது 'மலடி' என்றால் அவ்வளவு கொடுமை நிறைந்தவளா? ஈவு இரக்கமற்றவளா? 'மலடி' என்ற சொல் அந்த இடத்தில் வரவேண்டிய தாத்பரியம் என்ன?

ஒருகணம் தன்நிலையைச் சிந்தித்தும் பார்த்தாள். தன் கணவரும் மங்களமும் சேர்ந்து கொண்டு அவள் 'மலடி' என்ற கொடுமைக்காக இழிவாக நடத்துவது போன்ற கனவு—ஆம், பகற் கனவு கண்டு கலங்கினாள்.

வந்த களைப்புத் தீர சற்று கண்ணயர்ந்தாள் மாமியார். பெண்ணின் தாயார் விருந்து தயாராவதை மேற்பார்வையிட சமையலறைக்குச் சென்றாள். பக்கத்திலுள்ளவர்கள் அந்தியை வரவேற்கத் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர். சாரதாவும் பெண்ணுமே அவ்வறையில் தனித்துவிடப் பட்டனர். அறையில் நிலவிய மௌனத்தைக் கலைப்பது போல் நீண்ட பெருமூச்சுடன் வெளியே எட்டிப்பார்த்தாள் சாரதா. மாலை மயங்கிக் கொண்டிருந்தது. அவளது மனமும் சிந்தனையில் சுழன்று கொண்டிருந்தது. மெதுவாக நடந்து வெளியே வந்தாள். அவளைத் தடுப்பதற்கு மங்களத்தைத் தவிர அவ்வறையில் ஒருவருமில்லை. மங்களமோ புது மணப்பெண் என்ற சம்பிரதாய முறையில் பேசாதிருந்து விட்டாள்.

சுற்றிலுமொருமுறை பார்த்து விட்டு நடக்க ஆரம்பித்தாள். இருள் சூழ்ந்துவரும் இவ்வந்தி நேரத்தில் எங்கே செல்கிறாள்? மனம் நோக்கிய இடத்திற்கு, கால்போன திக்கிற்கு ஒருவித மான யோசனையும் முடியாமல் சென்று கொண்டிருந்தாள். கண் சிமிட்டும் நேரத்தில் அவளது உள்ளத்தில் ஒரு யோசனை உதித்தது.

மத்தியானம் அவர்கள் ஸ்டேஷனிலிருந்து வண்டியில் வரும் வழியில் ஆறு ஒன்று குறுக்கிட்டது. அந்த ஆற்றைச் சுற்றியே வண்டிகள் ஊருக்குள் வரவேண்டும்.

ஆற்றின் ஜில்லென்ற குளிர் காற்று அவளது வாடிய வதனத்திற்கு இன்பம் அளித்தது. 'ஆற்றின் பெயரென்னப்பா' என்று வண்டிக்குள்ளிருந்தே மாமியார் கேட்டாள்.

"இந்த ஆத்துக்கு 'பாலாறு' ன்னு பேருங்க. இதன் தண்ணி அசல் பாலு மாதிரியே இருக்குமுங்க. ஆனா அந்தா, அந்த வட பாரிசத்திலே மட்டும் ஒருகசம் இருக்குதுங்க அதிலே தெரியாதவங்க காலை வச்சிட்டா அப்புறம் பொழைக்கிறது கடினம்"

அந்த வார்த்தைகள் மீண்டும் எதிரொலித்தது. ஒருவிதமான முடிவுக்கு வந்தவளாய் அத்திக்கை நோக்கி நடந்தாள்.

அளவு கடந்த துயரத்தில் அதிகத்துணிவு ஏற்படுகிறது. இல்லையானால் இயற்கையிலேயே பயந்த சுபாவமுள்ள சாரதா தெரியாத ஊரில் அதுவும் கன்னங்கரிய இம்மை யிருட்டில் வெளிக்கிளம்ப முடியுமா? பலவித சிந்தனையுடன் சாந்தியை நாடிப் போய்க்கொண்டிருந்தாள். எப்படியோ தட்டுத் தடுமாறி குறித்த இடத்தை – அது தான் அந்த வடபாரிசத்தை – அடைந்து விட்டாள்.

பாலாறு பொங்கிப் பெருகி ஓடிக் கொண்டிருந்தது. 'ஓ' வென்று ஓலமிட்டோடும் நதியின் பேரிரைச்சலில் 'மலடி' 'மலடி' என்று ஒலிப்பது போன்ற பிரமை தூரத்தில் எங்கிருந்தோ ஐயோ... அம்...மா...என்ற வேதனைக் குரலெழுந்தது. குரல்வந்த திசையை நோக்கினாள். சீ......இதென்ன பிரமை எங்கிருந்து சத்தம் வந்தால் நமக்கென்ன என்று ஒரு யோசனை. அடுத்த கணம் மலடிக்குக்கூட இரக்கம் இருக்குமே' என்ற வார்த்தைகள் நினைவு வட்டத்தில் அலைமோதின. அப்படியானால் எனக்கு இரக்கமில்லையா?

மறுபடியும் அதே முனகல் சப்தம். தூரத்தில் லேசாக விளக்கு வெளிச்சம் தெரிந்தது. சத்தம்

வந்த திசையை நோக்கி நடந்தாள் வெளிச்சம் தெரிந்த இடத்தில் ஒரு சிறிய மண்குடில் இருந்தது. குடிசைக் குள்ளிருந்துதான் முனகல் சப்தமெழுந்தது. உள்ளே எட்டிப் பார்த்தாள். ஒருகுடியானவப் பெண் பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். அவளது முந்திய குழந்தை தரையில் விரித்த பாயில் படுத்திருந்தது. அதற்கும் மூத்தபிள்ளை — அதுதான் நாலைந்து வயது — பையன் ஒரு டம்ளரில் கஞ்சியோ எதையோ ஊற்றிக் குடித்துக் கொண்டிருந்தது. இது தான் அவள் அந்தக் குடிசையில் கண்ட காட்சி. இதைத் தவிர அங்கு வேறுமனிதர்களோ அல்லது அக்கம் பக்கத்திலோ வேறு ஒருவரையும் காணவில்லை.

வெகு பிரியத்துடன் அவளருகில் சென்று ஆறுதல் சொல்லி ஆசுவாசப் படுத்தினாள். அந்தப் பெண்ணின் புருஷன் ஒரு படகோட்டி. அன்றுமாலை எதிர்க் கரைக்குப் படகு கொண்டுபோயிருக்கிறான். அங்குதான் அவளது தாயாரிருக்கிறாள். அவளையும் அழைத்துக் கொண்டு காலையில் வந்து சேருவான். இந்த விபரங்கள் அந்தப் பெண்ணுக்கு வலி நின்றிருக்கும் சமயத்தில் கூறியதைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். விடியும்வரை தான் அங்கேயே இருப்பதாக தைரியம் சொன்னாள்.

சாரதாவின் அதிர்ஷ்டமோ அல்லது அந்தப்பெண்ணின் நல் மனமோ விடிவதற்குள் சுகப் பிரஸவமாகிவிட்டது. குழந்தையின் அழுகுரலைக் கேட்டு சாரதா தன்னையே மறந்த நிலையிலிருந்தாள்.

மனித அரவம் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். பொழுதுபுலர்ந்துவிட்ட தென்பதை வெளியே தெரிந்த வெளிச்சத்தில் அறிந்து கொண்டாள். படகோட்டியும் அவனது மாமியும் வந்து கொண்டிருந்தனர். குழந்தையின் அழுகுரலையும், யாரோ ஒரு புதிய அம்மாள் அங்கிருப்பதையும் கண்டு திகைத்தனர். நடந்த விபரத்தை அந்தப்பெண் பூராவும் கூறினாள்.

அவர்கள் யாவரும் சாரதாவை தெய்வமாக நினைத்து நன்றி செலுத்தினார்கள்.

"எம்மா நீங்கதான் கிராம முனிசீபு ஐயா வூட்டுக்கு பெண் பாக்க வந்தவங்களா?" என்று படகோட்டி கேட்ட பின்னரே அவளது நிலை நினைவில் வந்தது. அவள் வந்த காரியம் என்ன? இப்பொழுது நடந்த தென்ன? ஒரு சிறு குழந்தையால் ஒருஉயிர் காப்பாற்றப்பட்டது என்பது சாரதாவைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்?

"ஜோஸ்யம் தெரிந்தவன்போல் கேட்கிறாயே? உனக்கெப்படித் தெரியும்"

"படகிலிருந்து இறங்கும் பொழுது கிராம முனிசீப்பு வீட்டு ஆட்கள் கரையில் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் பேசியதிலிருந்து நீங்களாக இருக்கலாமோ என்று கேட்டேன்."

இதற்குள் அவளது ஆட்களே அங்கு வந்து சேர்ந்து விட்டனர். சாரதா அவர்களுடன் புறப்படும் போது "உங்களது பெயரென்னம்மா?" என்று தயக்கத்துடன் கேட்டாள் அக்குடியானவப் பெண்.

"என்னுடைய பெயரா?"

"ஆமா அம்மா உங்கபேருதான் நீங்செய்த புண்ணியத்துக்கு மகாலெக்ஷிமி மாதிரி உங்கபேரைச்

சுமந்துகிட்டு உங்களைப்போல ஆயு சோட இருக்கணு மின்னு குழந்தையை ஆசீர் வதிச்சுட்டு போங்கம்மா......''

யாருக்கு யார் நன்றி செலுத்த வேண்டும். என்னுடைய உயிரைக் காப்பாற்றியதற்கு நானல்லவா அக்குழந்தைக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று மனதிற்குள்ளாகவே நினைத்துக் கொண்டாள் சாரதா.

தன்னைக் காப்பாற்றிய நன்றியுடன் அக்குழந்தையை ஒரு முறை நோக்கிவிட்டு வந்தவர்களுடன் வழிநடந்தாள்.

வீட்டிற்கு வந்தவுடன் முதல் வரவேற்பளித்தது மங்களம்தான்.

"அக்கா உங்களைச் சந்தித்தது மே உங்கள் முக வாட்டத்திலிருந்தே விஷயங்களை ஊகித்தறிந்து கொண்டேன். உங்களுடைய வாழ்வுக்கு எதிரியாக உங்களுடைய வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்ள நான் துணியவில்லை. ஒருக்காலும் இந்தக் கலியாணத்திற்கு நான் சம்மதிக்க மாட்டேன்'' என்று கூறிவிட்டாள்.

வாசலில் வண்டி வந்து நின்றது. சாரதாவும் மாமியாரும் ஏறிக் கொண்ட பின்னர் வண்டி புறப்பட்டது.

அவளது வாழ்க்கைச் சக்கரம் மீண்டும் பழைய பாதையிலேயே சென்று கொண்டிருந்தது.

★

நல்ல உவமை

விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். பருந்தும் கொக்கும் விலங்கினங்களில் நோஞ்சானையும் வியாதி பிடித்தவைகளையும் கொன்று அந்த விலங்கினத்திற்கே நன்மை செய்கின்றன அதாவது மனிதனுக்கு டாக்டர் மாதிரி, இந்தப் பருந்தும் கொக்கும்!

பிராணி நூல்

நன்னூல்

[அ. கிருஷ்ணமூர்த்தி]

தமிழில் எல்லோராலும் பாராட்டப்படும் இலக்கணங்களில் தொல்காப்பியம், நன்னூல் இரண்டும் முக்கியமானவை. நன்னூல் தோன்றுவதற்கு முன்னும், அது தோன்றிய பிறகு சில காலம் வரையிலும் தொல்காப்பியம் தமிழ் உலகத்தில் மிகவும் அதிகமாகப் பரவியிருந்தது. பிற்பாடு நன்னூல்தான் அதிகமாகக் கையாளப்பட்டு வருகிறது. ஆயினும் சென்ற இருபதாண்டுகளாகத் தொல்காப்பியமும், அதன் உரைகளும் அச்சாகி வெளிவந்ததிலிருந்து, தொல்காப்பியத்தின் அருமையை எல்லாரும் இன்னும் விரிவாக உணர ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது நன்னூல், தொல்காப்பியம் இரண்டும் தமிழ் உலகத்தில் நன்கு பரவியிருக்கிறது. ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், நன்னூல் பள்ளிக்கூடங்களிலும், தொல்காப்பியம் பள்ளிக்கூடத்துக்கு வெளியிலும் அதிக உபயோகத்தில் இருக்கின்றன.

நன்னூல் 650 ஆண்டுகளுக்கு முன்பு மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தில் எழுதப்பட்டது. அதாவது தொல்காப்பியம் எழுதப்பட்டு 1800 அல்லது 2000 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழில் பலவகை மாறுதல்கள் ஏற்பட்டன. காலப் போக்கில் இந்த மாறுதல்கள் இயற்கை. இப்படி ஏற்பட்ட முக்கியமான பல மாறுதல்களை நன்னூலில் காணலாம். தம்முடைய காலத்தில் ஏற்பட்டிருந்த மாறுதல்களையும் அமைத்து நன்னூலின் ஆசிரியர் தமிழ் இலக்கணத்தை எழுதியிருக்கிறார்.

நன்னூல் ஆசிரியர் பெயர் பவணந்தி முனிவர். இவர் சன்மதி முனிவரின் பிள்ளை. சமணமதத் துறவியாக வாழ்ந்தவர். இவருக்கு ஆதரவாக இருந்த அரசன், சீயகங்கன் என்ற கங்க தேசத்துச் சிற்றரசன். (கங்கதேசம் என்பது மைசூரின் கீழ்பாகத்தில் இருந்தது)

சமணர்கள் தமிழுக்குச் செய்திருக்கும் தொண்டு கொஞ்ச நஞ்சமல்ல. தமிழின் முக்கியமான பல பெரிய இலக்கணங்களையும், இலக்கியங்களையும் சமணர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய தர்க்க நூலாராய்ச்சி மொழியின் இலக்கணத்தை எழுதப் பெரிதும் உதவியாயிருந்தது. இவ்வாறு எழுதப்பட்ட நூல்களில் நன்னூல் ஒன்று. இந்த நன்னூலும், இதற்கு முன்னால் தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய ஆசிரியர் இளம்பூரணர் கருத்துக்களைத் தழுவியே எழுதப்பட்டது. இளம்பூரணர் ஒரு சமணத்துறவி. நன்னூலுக்கு முதல் முதல் உரை எழுதியவரும் சமணர். அவர் பெயர் மயிலைநாதர். இது பற்றிய மற்ற விவரங்களைப் பின்னால் பார்ப்போம்.

நன்னூல், தொல்காப்பியத்தைப்போல எழுத்துக்களின் இலக்கணத்தையும், சொல்லின் இலக்கணத்தையும், வாக்கிய அமைப்பையும் பற்றிக் கூறுகிறது. ஆனால் தொல்காப்பியத்திலிருக்கிற பொருளதிகாரப் பகுதி நன்னூலில் இல்லை. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டு மட்டுந்தான் உண்டு. [அது பற்றிய பல

திறக் கருத்துக்களை இங்கு விவரிக்க வேண்டாம்]

தொல்காப்பியம் இலக்கண விதிகளை அழகான வார்த்தைகளால் விளக்கமாகவும், இனிமையாகவும் எடுத்துச் சொல்லுகிறது. நன்னூலார் கரடுமுரடான செய்யுளில் இலக்கண விதிகளைத் திணித்துப் புத்தகத்தைச் சுருக்கமாக எழுதியிருக்கிறார். இருந்தாலும், மொழியாராய்ச்சி உண்மைகளை ஒட்டி நன்னூலில் நாம் மெச்சிக் கொள்ளுவதற்குப் பல சிறந்த பகுதிகள் இருக்கின்றன.

நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர், சமணராக இருந்ததால், அவருடைய உரையின் போக்கும், எடுத்துக் காட்டும் உதாரணங்களும், சமணமதச் சித்தாந்தங்களை ஒட்டி இருந்தன. உரை ஒரு பக்கமிருந்தாலும், நன்னூல் புத்தகமே அங்கங்குச் சமண மதக் கொள்கைகளைக் காட்டி இலக்கணமாக எழுதியிருக்கிறது. ஆனல், அந்த இடங்களை எளிதாக மறுத்துவிட முடியாது. இவையெல்லாம் பின்னல் தோன்றிய சைவசமயப் புலவர்களுக்குப் பிடிக்கவில்லை.

எனவே, சங்கர நமச்சிவாயர்' சிவஞான முனிவர் போன்ற பெரிய சைவஞானிகள் நன்னூலுக்குப் புதிய உரைகள் எழுதினர்கள். இவர்களுடைய தமிழ்ப் புலமையின் ஆழம் ஒருவரைவிட ஒருவருக்கு அதிகமானது. இவர்கள் எழுதிய உரைகள் விரிவான உரைகள். சைவ சமய சித்தாந்தங்களை இலக்கணத்தில் எந்தவிதமாகப் பரப்பலாமோ, அவ்விதமெல்லாம் செய்திருக்கிறார்கள். இந்த உரைகள் தமிழில் நிரம்பிய படிப்புள்ளவருக்கே புரியும். ஆகவே, மேலோட்டமாக நன்னூலின் பொருளைத் தெரிந்து கொள்வதற்கு மட்டும் 'காண்டிகையுரை' என்ற சுருக்கமான எளியவுரை சென்ற நூற்றுண்டில் ஆறுமுக நாவலர் அவர்களால் யாழ்ப்பாணத்தில் எழுதப் பட்டது. மாணவர் படிக்கும் நன்னூல் உரை அதுதான். ஆறுமுக நாவலர் சைவரானதால், அவருக்கு முன்னல் விரிவுரை எழுதிய சைவப் புலவர்களைப் போலவே, சைவசமயச் செய்திகளை ஆங்காங்குக் காட்டியிருக்கிறார். இப்பொழுது நன்னூலுக்கு இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும் சடகோபராமாநுசாச்சாரியார் எழுதியுள்ள உரையும் நன்கு பரவியிருக்கிறது.

நிற்க, நன்னூலுக்குப் பிறகு சென்ற 650 ஆண்டுகளில் தமிழில் வேறு பல இலக்கண நூல்கள் தோன்றியிருந்தாலும், அவைகள் புலவர்களிடத்தில் மட்டுந்தான் பரவியிருந்தனவே தவிர, வேறு அதிகமாக வழக்கத்தில் இல்லை.

நன்னூல், தொல்காப்பியம் — இரண்டும் இப்பொழுது நமக்குப் பழைய இலக்கணமாக இருந்தாலும், அவற்றின் பெரும்பாலான இலக்கண விதிகள் இவ்வளவு காலத்துக்குப் பிறகுகூட அதிகம் மாறவில்லை. இப்பொழுது மாறியுள்ள விதங்களையும், புதிய அமைப்புகளையும் கொடுத்து, சேர்க்கை, திருத்தம், விளக்கம் முதலான விரிவுகளுடன் புதிய இலக்கணம் எழுதப்பட வேண்டும். அது முன் காலம் போலப் பாட்டில் இருக்க வேண்டியதில்லை. ஒருவரே எழுத வேண்டியதுமில்லை. மொழியை விஞ்ஞானத் துறையில் ஆராயக்கூடிய அறிஞர் பலர் கூடிச் செய்ய வேண்டும். இன்று மொழியின் தேவைகளில் இது ஒன்று.

எனது மாமா

"சுகி"

என் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தேன். ஆள் முன் பின் தெரியாத ஆள்.

"என்னைத் தெரியவில்லையா?"

தெரியவில்லை. முகத்தில் அடித் தாற் போல எப்படிச் சொல்லு கிறது?

"நான்தான். உன்னுடைய மாமனுருக்கு, அவர் மைத்துன னுக்கு, சித்தப்பா... அண் ணுச்சி..."

எனக்கு எப்படி மாமன் என்ற முறையை அவர் சொல்லி முடிக் கும் முன், நான் வில்லிப்புத்தூ ரார் பாரதம் படித்திருக்கலாம், ஓட்டலுக்குள் சென்று டிபன் கூடச் சாப்பிட்டிருக்கலாம். நாலு மைல் நடக்கலாம். அவ்வ ளவு சிக்கலும் குளறுபடியும் நிறைந்திருந்தது எங்கள் பந்துத் வத்தின் தொந்தம்.

"திவான் பகதூர் சொக்கலிங் கம் இருக்கார் இல்லியா அவர் வீட்டுக்கு வருவதாகச் சொல்லி யிருந்தேன். அங்கே கலெக்டருக் குப் பார்ட்டி."

மாமா மேலே பேசு முன் என் சிந்தனை சுழன்றது. திவான் பக தூர் பெரிய கை. அவரைப் போய் இவர் பார்க்கிறதா? கொல்லன் உலையில் ஈக்கு என்ன அலுவல்?

"அங்கே ஸர் பச்சையா முதலி யார் அதான் மிந்திரிக் கொட்டை ஜமீந்தார் வந்திருக்கிறுர். ஜமீந் தார் Express Telegram அடித்தி ருந்தார்."

அட ராம ராமா, இவருக்கு எப் படி பெரிய இடத்துப் பழக்கம் ஏற்பட்டது? என் சிந்தனை சுழலு முன்பாக அவர் பேச்சு சுழன் றது.

"ஒரு பயலுக்கு சிபார்சு செய்ய வேண்டும். ரயில் வேலை. நான் சொன்ன இடத்தில் ஏஜண்டு தோப்புக்கர்ணம் போடு வான். போன மாசம் நம்ம சுப்புசாமியை ரயிலில் தள்ளி விட் டேன்."

இப்படி யார்யாரை, எங்கெங்கு தள்ளி விடணுமோ அந்தப்படி தள்ளி விடுவார் என் மாமா. அவரிடம் பெட்ரோல் கூப்பன் கிடையாது. ஆனுல் நிமிஷத்துக்கு நிமிஷம் மோட்டாரில் போவார். மாசக் கடைசியில் பெட்ரோல் ஆகி விட்டால், உயர்ந்த ஜாதிக் குதிரைகள் டக்டக் என தாளம் போடும் பெட்டி வண்டி சவாரி. மாமா வைதீகமா லௌகீகமா என்று அறிய முடியாது. பூட்சு, உண்டு. செருப்பு உண்டு. தலை யில் முன்புறம் வாரிவிடும் கிராப்பு. ஆசாரத்துக்கு அரையணு சவுக்கத் திற்கு சின்னஞ் சிறிய குடுமி. கிராப்புக்குக் கிராப்பு, குடுமிக்குக் குடுமி!

பெரிய இடங்களின் அவர் போக்கே அலாதி. பெரிய மனி தர் வீடுகளிலே போனுல் இவர் எல்லாருமாக மாறிவிடுவார்.

"ஒகோ சார்...... தண்ணீரா? நமச்சிவாயம் எங்கேயோ போயி

ருப்பான். நானே தண்ணீர் கொண்டு வருகிறேன்.''

பிறருக்குத் தண்ணீர் தவிப்பது எப்படித்தான் தெரியுமோ? அதே போல சமயமறிந்து காரியங்களைச் செய்வதில் சமர்த்தர்.

''என்ன ஸ்டாம்பு தானே? நானே வாங்கி ஆர். எம். எஸ். ஆபீஸில் போட்டு விடுகிறேன். உங்களைப் பார்த்தால் ராத் தூக்கம் இல்லாதவர்களைப் போலத் தோன்றுகிறது. கொசுக் கடியா? கொசுவலை வேண்டுமா? சர்க்கரை சரியாக கிடைக்கிறதா? இல்லை ஒரு மணு எங்காவது ஏற்பாடு செய்யட்டுமா? தலைவலியா. இருங்கள் தலைவலிக்கு ஒரு மாத்திரை தருகிறேன். சுறைத்துப் போடுங்கள்.'

இம்மாதிரி மாத்திரை மனதிற்கும், வியாதிக்கும் இழைப்பதில் சமர்த்தர். பெரிய மனிதர்களுடைய சட்டைப் பொத்தான்கள் திறந்திருந்தால், வித்தியாசம் பாராட்டாமல் மாட்டி விடுவார். கிழிந்த சட்டை போட்டிருந்தால் வெகு நயமாக தைப்பார். பெரிய மனிதர்களிடம் மலர்ந்த முகத்தைக் காட்டுவது போலவே அவர்களுடைய சிப்பந்திகளிடமும் மலர் முகத்தோடு பேசுவார். வேலைக்காரன், சமையற்காரன், மோட்டார் ஓட்டி எல்லோரையும் பெயர் சொல்லி அந்யோந்யமாக அழைப்பதில் பிரீதி.

''என்னடா வேலாயுதம் இப்படி முழிக்கிறே? வெத்திலை பாக்கா. வா இப்படி. நாலாவது வேணுமாடா. ஓ பரமேச்வரனு எந்தா சௌக்கியம்? எலுமிச்சம் பழம் சாதம் எந்தா ரீகார்...... உன்னைப் பற்றி ஐயாவிடம் சொல்லுகிறேன். சம்பளம் கவனிப்பாரடா.''

இப்படி நாலு பேருக்கும் உபகாரி. தராதரமின்றி உதவி விஷயங்களைச் செய்வதில் கர்ணனுக்குத் தம்பி என் மாமா. இவர் எனக்கு மாமாவாக இருப்பது போலவே எங்களூரில் பலருக்கும் அண்ணன், தம்பி, மச்சான், சித்தப்பா, பெரியப்பா......... தாத்தா... இப்படியாயிருப்பார்.

அவர் நாலு பேருக்கும் வேண்டியவர். ஒரு பாங்கி டைரக்டர் இவர் வீட்டில் வந்து கையைப் பிசைவார். சங்கீத வித்வான் முகாரி போல விளிப்பார். வரனுக்காக வந்தவர்கள் அநேகர்; பெண் இருக்கும் விபரம் தெரிவிக்க வருகிறவர் கூட்டம் வேறு. வரன் வதுக்களை பொட்டில் அடித்த மாதிரி 'டாண் டாண்' என்று முடி போடுவார்.

பெண் வேண்டுமானல், இன்ன இடம் போ; மாப்பிள்ளை வேண்டுமா இந்த இடத்தைப் பார் என்று அவர் சொல்லி விட்டால் பிரம்ம முடிச்சாவது தவறும். இவர் முடிச்சு தவருது! இம்மாதிரி அந்தந்த அந்தஸ்திலுள்ளவர்களுக்கு கிரகஸ்தாஸ்ரமம் முடிப்பது போலவே கிரகங்களின் கோளாறையும் சொல்லுவார்.

''உங்க வீட்டம்மாவுக்கு என்ன சார் வியாதி? நம்ம படாதி லிங்கம்மா டாக்டர்? அவன் என்ன ஸார் டாக்டர். வீரம்பூரம் வெங்கடேசன் இருக்கான். ஆம், எமப்பயல். மூணு நேரம்; வெறும் மிளகு—ஏதோ எழு ஒதி நாலு துளசியும் கொடுத்தால் மண்டை பிடி முதல் கோர்ட்டு தாவா வரை ஐயம். இதற்கு அஞ்சு ரூபா செலவு.''

வியாதிக்காரர்கள் கட்சிக்காரர்கள் எல்லோரும் வீரம் பூரம் வெங்கடேசன் முன்னுல் கை கட்டி நிற்பார்கள். சம்சார சகிதம் போய் நமஸ்காரம் செய்வார்கள். எப்படியோ குணமாகி விடும்; கேஸ் ஜயித்து விடும். அந்த வெற்றியைக் கண்டவர்களும், வீரம் பூரம் வெங்கடேசனும் தங்கள் தோலைச் செருப்பாகத் தைத்துப் போடத் தயாராக இருக்கிருர்கள். சரி, சிபார்சு வேண்டும், எந்த உத்தியோகத்திற்கு வேண்டும்?

"என்னய்யா பாங்கி வேலைக்கு மனுவை ஏஜண்டு கோபாலசாமியிடமா கொண்டு போனீர்கள்? அட ராம ராம சிவன் கோவில் மடப்புளிக்கு வேண்டுமானுல் அந்த ஏஜண்டு கோபாலசாமி சிபார்சு செல்லும். பாங்கி வேலைக்கு, ரயில்வே சூப்ரண்டைப் பாருங்கள். அந்த சாக்ஷாத் சூப்ரண்டிங் பெரியப்பாதான் பிக்ஷாதிபதியின் பாங்கியின் முக்கிய பங்குதார். மடப்புளிக்கு வேண்டுமானுல்,......

மாமா இப்படிக் கையைக் காட்டினுல் வந்த ஆசாமி தம் மைத்துனனை மடப்புளியிலும், தம் தம்பியைப் பாங்கியிலும் நுழைத்து விடுவார்.

அவர் பரோபகாரி. அவருக்குத் தலையை வலிக்காத ஜலதோஷத்தால் தும்ம மாட்டாரா என்று ந. நிருபர்கள் கவலை. எங்காவது மக்காச் சோள கமிட்டிவரை இவர் பேசுவார். ஊரில் நடக்கிற தேநீர் விருந்துகளில் முங்கு மூழ்குவார். பத்திரிகைகளில் குரூப் போட்டோ வந்தால் இவர் தலை கண்டிப்பாக இருக்கும். இவ்வளவு சக்திவாய்ந்தவர் என்னை ஒரு நாள் வழியில் பிடித்துக் கொண்டார்.

கையிலுள்ள டிபனைப் பார்த்தவர், "என்னடா குடும்பம். பெண்சாதியை நடத்துகிற விதத்தில் அவள் தயிர் சாதம் நாரத்தங்காய் ஊறுகாய் வைப்பாளா? நீயும் ஒரு பயல் வெட்கம் மானத்தைவிட்டுப் போய், தயிர்ச் சாதம் நாரத்தங்காய் காணத்துவையல் எடுத்து வரலாமா? நானுக இருந்தால் மூஞ்சியில் அபிஷேகம் செய்து விட்டு வருவேன். நம்மைக் கண்டால் கிடுகிடென நடுங்க வேண்டாமா?"

மாமாவின் குடும்பம் எப்படி நடக்கிறது? அறிய ஆசை பிறக்கவே அவர் வீட்டுக்கும் போனேன்.

தண்ணீர் இறைப்பதும் அவரே. பெரிய பையனுக்கு எண்ணெய் தேய்த்து நாலு சொம்பு கொட்டுகிருர். சித்து வேலைகள் மனைவிக்கு உதவியாகச் செய்கிருர். முறுக்குச் சுற்றும் விபரத்தை மனைவிக்குப் பாடமாகச் சொல்லுகிருர். எல்லோருக்கும் சமபந்தி போஜனம். தன் கையே தனக்குதவி என்பது இவரது இல்லற ரகஸியம்.

இவர் எப்படி இல்லறம் நடத்துகிருர்? அதுதான் சிதம்பர ரகஸியம். அவர் ரயிலில் இருப்பார்; மோட்டாருக்குத் தாவுவார். போர்ட்டர்கள் அவர் மூட்டை முடிச்சுகளை காசு இன்றியே சுமப்பார்கள். ரயிலில் காசு உண்டா? முதல் கிளாஸ் பிரயாணம். டிக்கட் பரிசோதகன், "டிக்கெட் எங்கே?" என்பதற்குப் பதில் "சோடா அனுப்பட்டுமா?" என்று கேட்பான்.

தெரியாத அப்பாவி கேட்டு விட்டால் அவன் பாடு ஆபத்து.

"யாரப்பா டி. டி. எஸ். தம்பு சாமி சலூன் மாட்டி இருக்கிறதா. இந்த மெயிலுக்கு வரேன் என்றானே. நீ யார்? உன் பெயர் என்ன? இங்கே யேன் பசும் பால் இல்லே? 505 லே வி. டி. ஜே வரைக்கும் தம்புசாமி வரேன்னான். ஒருக்கால் 745 ல் வந்து சேரலாம். கொஞ்சம்பார் 745 வண்டி வந்து தான்னா......"

இப்படிச் சொன்னால் பரிசோதகன் என் நிற்கிறான்? மாமாவைக் கண்டதுமே டாக்ஸிக்காரர்கள், வண்டிக்காரர்கள், என் கடன் வசூலிக்க வரும் கணக்கர்கள் யாரும் பைஸா வாங்குவது இல்லே!

"என்னய்யா, நீ மளிகைப் பாக்கி ஆளா?"

"ஆமாங்க. பாக்கி 79 ரூ. 11 அணா 7 தம்பிடி."

"20ரூ. 4 அணா 5 தம்பிடி எடு."

"முழு நோட்டுக்குச் சில்லரையா?"

"எடும் சொல்லுகிறேன்."

அவ்வளவுதான். எடுத்துக் கொடுக்கிறான். "சரி உமக்கும் சௌகரியம்; எனக்கும் சௌகரியம் வடிவாக ரூபாய் நூறு. இந்தாரும் என் கைப் படவே சீட்டு. உம் முதலாளியிடம் சொல்லும். இன்கம் டாக்ஸ் கவனிக்கிறேன்" என்பார்.

கடன் வாங்க வந்தவன், மேல் கொண்டு ரொக்கம் கொடுக்கிறான்! அவருக்குக் கடன் கொடுக்க மளிகைகள், ஷாப்புகள், பாங்குகள், ஓட்டல்கள் இருக்கின்றன. அவர் வெளியே புறப்படுமுன் பெரிய கெடுபிடி.

"இதோ பொடி டப்பி" என்பாள் அவர் சம்சாரம்.

"என்ன வெள்ளியா? தங்க முலாம் பூசிய டப்பியை எடு. ஜரிகைக் குல்லாவிலே அரைக்கால் அங்குலந்தானே இருக்கு. அரை அங்குலம் வேண்டும்."

"எடுத்துக் கொள்ளுங்கள்."

"இந்தப் பளங் கைத்தடி வேண்டாம். தந்தப் பூணில் நாய் இருக்கும் கைத்தடி கொண்டுவா."

"சரி, சரி."

அவர் ஆள் பாதி ஆடை பாதி என்ற வர்க்கத்தைச் சார்ந்தவரன்று. ஆடை முக்கால் ஆள் கால். எந்தந்த விழாவிற்கு, சந்தர்ப்பத்திற்கு என்னென்ன ஆடை, உடை, கைத்தடி எனக் குறிப்பாக எடுத்துக் காட்டாக விளங்குவார். அவர் உடை நடை போலவே தளுக்கும் குலுக்கும். கும்பிடு வகைகளில் எவ்வளவோ. கூழைக் கும்பிடு, ஏழை கும்பிடு, பெரிய கும்பிடு, கோடாவிக் கும்பிடு, கும்பிடும் – புன்முறுவலும், புன்முறுவலும் கூழைக் கும்பிடும், நமஸ்காரமும் – அசட்டுச் சிரிப்பும், வெறும் சல்யூட், உதட்டில் கோணல், முகத்தில் கோணல், உடம்பே கோணல் செக்கபிக்கே சிரிப்பு, அவுட்டு வானச் சிரிப்பு அப்படி இடமறிந்து எல்லாம் பிரயோகமாகும்.

சுருங்கச் சொன்னால், அதாவது அவர் இருக்குமிடமே தெரியாதபடி ஒரு சபையில் இருப்பார்; வியாபகமாச் சொன்னால், அப்படியே எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பார். அவர் சாணக்கிய சூத்திரம் இதுவே.

"அடேய்ப் பயலே ஆளுக்குத் தகுந்தாற் போல குல்லாய்த் தைக்கணும். வினைய பாவம் முக்கியம். ஆளைக் குளிப்பாட்டினுல், காரியம் ஆகிறவனைக் குளிப்பாட்டிக் கிடத்த வேண்டும். முகஸ்துதிப் பிரியன் என்றுல், கரி மூஞ்சில் சுண்ணும்பை அடிக்கிற மாதிரி நம்ப அடிக்க வேண்டும். என்னை மந்திரி என்ன சொன்னுர் தெரியுமா? 'போடா முட்டாள்' என்றுர். 'நான் சரி தாண்டா மந்திரி' என்றேன். எங்களுக்குள் அவ்வளவு நெருக்கம். காக்காப் பிடிக்கிற நேரத்தில் குல்லாய் தூக்காதே. குல்லாய் தூக்கிற நேரத்திலே கரி குளிப்பாட்டாதே......" இப்படி இன்னேரன்ன...

இவர்தான் எனது மாமா. அவர் போக்கு எனக்குத் தெரியாது. பின்பற்ற முடியவில்லை. என் ஜாதகம் தயிர்ச் சாதம், நாரத்தங்காய், காணத் துவையல்.

என் மாமா அதிசயப் பிறவி. அபூர்வ சிருஷ்டி. உலகிலே குறிப்பான மனுஷர். உலகத்தை தராசில் வைத்து நிறுத்து விடுகிறவர்.

எனக்கு உலகத்தைத் தெரியும். அதன் போக்கிலே போகத் தெரியவில்லை. எதிராறு நீஞ்சுகிறேன். உலகம் என்னைத் தராசில் வைத்து நிறுத்து விடுகிறது.

என் மாமா......... அவர்???

★

லாட் ஜிங்

ஒரு நாள் முழுவதும் போர்டிங் — லாட்ஜிங் வாசியாக இருந்த ஒருவர், தாம் இந்த ஓட்டல் நிர்வாகியைப் பார்க்க விரும்புவதாகப் பரிசாரகனிடம் சொன்னுர்.

"ஏன் சார்?"

"எனக்கு வயிற்றுவலி"

"வயிற்று வலியா? இது என்ன ஆஸ்பத்திரியா? இது போர்ட்டிங் — லாட்ஜிங்." என்றுன்.

டிட்—பிட்ஸ்

தீபாவளிப் பண்டிகை

[ஜெயலக்ஷ்மி ஆர். சீனிவாசன்]

அம்மையா, ரங்கப்பாவின் தங்கை. அவளுக்கு ஏழெட்டு வயதிருக்கலாம். சிறுசாக இருந்தாலும் ரொம்ப சமர்த்து. அவளுக்குக் கலியாணம் ஆன பொழுது கணவனுக்கு ரொம்ப வேலை வைப்பாள்; எனக்குத் தெரியும். அவன் பேச வைத்தால் இவள் பேசாமலே இருப்பது, அவன் இருக்குமிடத்தில் இவள் நிற்காமல் ஓடுவது, அல்லது பேசினாலும் குதர்க்கமாக பேசுவது; இதனாலெல்லாம் அவனுக்குக் கொஞ்சம் தொந்திரவுதான். சத்தியமாக நான் சின்னவனாக இல்லாமல் இருப்பது எனக்குச் சந்தோஷம். சின்னவனாக இருந்திருந்தால், அவளைக் கலியாணம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்திருக்குமோ இருக்காதோ யார் கண்டார்கள்?

நான் ரங்கப்பாவின் தீபாவளி விஷயமாக எழுத ஆரம்பித்து விட்டு அம்மையாவை வர்ணிப்பதற்குக் காரணம் என்னவென்றால், ரங்கப்பாவின் தீபாவளியைப் பற்றி எனக்குச் சொன்னவள் அம்மையாதான். இவர்கள் எல்லோரும் அப்போது போயிருந்தார்கள். நடந்த சமாசாரங்களை எல்லாம் நான் அறிவது எப்படி? ரங்கப்பன் என்னவோ சொல்லப் போதில்லை; அவன் செய்தது அவ்வளவாக ஒன்றும் பெருமை அடித்துக் கொள்ளும்படியான விஷயமில்லை. ரத்தினம்மாள் சொல்லமாட்டாள்; கண-
னின் தண்டாவையும், தன் ௨-

யாமையையும், இன்னும் சின்னப் பெண், இப்பொழுதே எல்லோரிடமும் சொல்வாளா? ரங்கனின் தாயார் நிதானமாக உட்கார்ந்து என்னுடன் இதைப்பற்றியெல்லாம் பேசுபவளல்ல; அம்மையாவிடமிருந்துதான் அறிந்தேன். ஆதலால்தான், அவளைப்பற்றி முதலில் சொல்ல வாரம்பித்தேன்.

இத்தகைய சமாசாரங்களில், பாருங்கள், குழந்தைகளுக்கு ரொம்ப புத்தி. அவர்கள் பார்த்ததை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுகிறார்கள். இதைப் படிக்கும் உங்களுக்குச் சொல்லுகிறேன்; கேளுங்கள்; நீங்கள் உங்கள் மனைவிமார்களை உற்சாகத்துடனோ, உற்சாகமின்றியோ முத்தமிடும் பொழுது அருகில் யாராவது குழந்தைகள் இருந்தால் “இவர்கள் இருந்தால் என்ன” என்று மாத்திரம் அலக்ஷியமாக இருந்து விடாதீர்கள். அவர்கள் வீட்டில் எல்லோரிடத்திலும் சொல்லி விடுவார்கள். அவர்களுடைய வார்த்தையில் எல்லோருக்கும் நம்பிக்கை — ஒன்றும் அறியாத குழந்தை அல்லவா? ஆகையால் உங்களுக்கு மானம் போய் விடும். இளம் வயது வாசகர்களுக்கே இந்த வார்த்தை என்றால் கொஞ்சம் வயதானவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வயதானவர்கள் அப்படி செய்ததை செவியுற்றால் எல்லோரும் அதிக ஆச்சரியத்துடன், “இதென்ன இத்தனை வயதான பிறகும் இந்த அவிவேகமா?”

என்பார்கள். ரொம்ப பரிகாசத்துக்கு ஆளாவீர்கள், பத்திரம்! சொல்லி விட்டேன்.

அம்மையா ஒரு தடவை எனக்கு இவ்விதம் வேலை வைத்தாள். நான் அம்மையாவை அவ்வப்பொழுது எங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்வேன். எங்கள் பேரக் குழந்தைகள் ஊரில் இருக்கும் பொழுது எங்களுக்குப் பொழுது போவது சிரமமில்லை. இல்லா விட்டால்தான் சங்கடமாகவிருக்கும். யாராவது குழந்தைகளை அழைத்துக் கொண்டு போய் உட்கார்ந்து விட்டால், வேடிக்கையாகக் கொஞ்சம் நேரம் போக்கின மாதிரி இருக்கும்; நம் குழந்தைகளே வீட்டில் இருப்பதாக எண்ணிக் கொள்ளலாம். என் வீட்டுக்காரிக்குக் குழந்தைகளைக் கண்டால் வெகு பிரியம். யாராவது குழந்தைகள் காலை வளைந்து வந்து கொண்டு, "அம்மா!" என்று விஷமம் செய்கையில் அவள் செய்யும் அளவு காரியத்தை ஒண்டியாக இருக்கும் பொழுது செய்ய மாட்டாள். பல குழந்தைகளை வளர்த்தவள். பதினாறும் வயதில் தன் மூத்த குழந்தையை வளர்க்கத் தொடங்கி, இது வரைக்கும் குழந்தைகளையோ பேரக் குழந்தைகளையோ வளர்த்து சீராட்டுவது வழக்கம். குழந்தைகள் யாராவது வீட்டில் விஷமம் செய்யா விட்டால் அவளுக்கு உல்லாசக் குறைவு.

ஒருநாள் அம்மையாவை எங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தேன். பகல் மூன்று மணி. பாயில் நெடுகப் படுத்திருந்தேன். என் வீட்டுக்காரி அங்கே வந்து உட்கார்ந்தாள். தலை வாரிக் கொண்டு உட்கார்ந்தாள். "என் தலையையும் வாரப் படாதா" என்று கேட்டேன். "உங்கள் தலையை வாரி சிங்காரம் செய்யாமல் போனால் ரொம்ப மோசமாக்கும்" என்று அவள் கேட்டாள்.

"நீ எனக்கு முதல் மனைவி. எனக்கு வயது ஆக ஆக உனக்கும் ஆகிறது. உனக்கு என்னைக் கண்டால் லக்ஷியமில்லை. நான் இரண்டாம் கலியாணமோ, மூன்றும் கலியாணமோ, செய்து கொண்டிருந்தால், அவள் என்னை இத்தனை அசட்டை செய்திருக்க மாட்டாள்" என்று நான் சொன்னேன். "அதற்கென்ன, இன்று தலை வாரிக் கொள்வோம் என்று தோன்றிற்று. நாளைக்கு யாரை யாவது கலியாணம் செய்து கொள்வோம் என்று தோன்றலாம்" என்று அவள் சொல்லி விட்டுச் சிரித்தாள். எனக்கு அவள் அச்சமயம் ரொம்ப அழகாகத் தோன்றினாள். எங்கம்மா வயதான பொழுது எப்படியிருந்தாள் என்பது எனக்கு நினைவு இருக்கிறது. என் வீட்டுக்காரி இடத்திலும் எங்கள் தாயாரிடத்திலிருந்த அதே காம்பீர்யம் இருக்கிறது. அந்த காம்பீர்யத்துடன் கூட பதினாறு வயதுப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய அழகும் இருக்கிறது. அவள் அந்தப் பேச்சைச் சொன்ன பொழுது நான் "நம்ம வீட்டில் அவ்வப்பொழுது சண்டை போடும் பூனைகளின் சண்டையை விலக்குவதே போதும் போதுமென்றாகி விடுகிறது. உன் துணைக்கு இன்னொருவளை அழைத்து வந்து நீங்கள் போராடுவதைக் கண்டு நான் பிழைத்த மாதிரி தான்" என்று சொன்னேன். என் வீட்டுக்காரியை நோக்கினேன், வெகுஅழகாக இருந்தாள். அருகில் சென்று முத்தமிட்டேன்.

அம்மையார் அங்கேயே உட்கார்ந்திருந்தவள் நான் வீட்டுக் காரியை முத்தமிடப் போனதைக் கண்டு அவளைக் கடிப்பதற்கோ, அடிப்பதற்கோ போனேன் என எண்ணி, "ஏய், ஏய், பாட்டியின் தண்டாவுக்குப் போகிறாயா?" என்று என்னைத் துரத்துவதற்காக கையை ஓங்கிக்கொண்டு வந்தாள். நான் கடிக்கவுமில்லை; அடிக்கவுமில்லை; என்பதைக் கண்டு ஒரு வேளை தனது பிரபாவத்தினால்தான் "பாட்டீ" பிழைத்தாள் என்று அறிந்து நிம்மதியுடன் அங்கேயே உட்கார்ந்திருந்தாள்.

இதெல்லாம் எதற்கென்கிறீர்களா? கடைசியில் புரியும், கொஞ்சம் பொறுங்கள்.

தீபாவளி பண்டிகை நிஜமான பண்டிகை. நீங்கள் விவாகமானவர்களாக இருந்தால் நீங்களே ஆலோசித்துப் பாருங்கள்; உங்கள் அனுபவத்தில் தீபாவளிப் பண்டிகையைப் போன்ற பண்டிகை வேறு ஏதாவது உண்டா? உண்டு என்று நிரூபித்தால் நான் இங்கே எழுதி இருப்பதை மாற்றி விடுகிறேன். அதைப் போன்ற பண்டிகையே கிடையாது; அதிலும் நீங்கள் முதல் தடவை வேட்டகத்துக்கு போன தலை தீபாவளி போன்ற நல்ல பண்டிகை வேறெதுவும் இல்லை. பற்பல காரணங்களால் அது அப்படித்தான். மாமியார் வீட்டில் மாப்பிள்ளை ஜோர் செய்வது ஒரு காரணம். மனைவியின் முன்னால் ரொம்ப பெரிய மனிதனைப் போல் இருப்பது இரண்டாவது காரணம். கொஞ்சம் சாகசக்காரனாக இருந்தால், அவளுடன் பேசுவதோ அல்லது எங்கேயாவது ஒரு இடத்தில் தடுத்துப் பேச யத்தனிப்பதோ போன்ற ஆசை வேறு.

இந்தக் காலத்தினரைப் பற்றி நான் சொல்ல முடியாது; ரொம்ப நாஜூக்கான காலம். கலியாணத்துக்கு முன்பே பிள்ளையும் பெண்ணும் பேசிக் கொண்டிருப்பதும் உண்டு. அதுவும், பிள்ளை பேசாமல் சும்மா இருந்தாலும் பெண்ணே பேச வைப்பாள். அல்லாமல் எக்காரணத்தாலோ மாப்பிள்ளை முறுக்கு தற்சமயம் குறைந்து போய் விட்டிருக்கிறது. அல்லாமல் வேறென்னவாம்? மாப்பிள்ளை போய் மாமனாரின் வீட்டில் வருஷக் கணக்காக தங்கினால், வீட்டில் ஜோக் செய்வதெப்படியாம்? என்னவென்றாலும், மாமியாரைக் கொஞ்சம் பயமுறுத்தலாம், அவ்வளவுதான். நம பிள்ளையாண்டான்கள் அவர்களுடைய மனைவி மார்களின் பேச்சைக் கேட்டால், இத்தகைய அவிவேகத்துக்கு ஆளாகாமல் இருக்கலாம். கலியாணத்தில் பெண்கள் "அத்தகாரிண்டிகீ அல்லுடை ஒஸ்தேனு குச்சடக உண்டேதி மூடுநாள்ளு" என்று சொல்கிறார்கள். அதாவது "மூடு நாள்ளு" போய் "மூடு வருஷம்" அத்தகா (மாமியா) ரின் அகத்தில் தங்கினால் முச்சடையோ கிச்சடையோ?

ரங்கப்பா என்னவோ தீபாவளிக்கு முன்பு மனைவியுடன் கூட பேசி இருக்கவில்லை. அவன் கலியாணத்தன்றைக்கு பூஜை அறையில் சுவாமிக்கு நமஸ்காரம் செய்வதற்காக ரத்தினாவின் கையைப் பிடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்த பொழுது அவளுடன் பேசுவதற்கு முயன்றான் என்று தோன்றுகிறது. மணையில் உட்கார்ந்திருந்த [பொழுது பேச்சில்லை; ஆகக்கூடி, பாவம், பெண் ஒண்டியாக அகப்பட்டால் அல்லவா, அதன் உயிரை

வாங்கலாம்? சுவாமி அறையில் போகும் பொழுது ரங்கப்பனின் வாய் அசங்கிக் கொண்டிருந்தது. ஆனால் ரத்தினவின் வாய் மாத்திரம் கல்லில் கடைந்த பொம்மையின் வாய் போல் இருந்தது. நான் ரங்கப்பனைப் பிறகு, "என்னப்பா ரங்கப்பா? உன் மனைவிக்குச் சொல்லிக் கொண்டிருந்தது?" என்று கேட்டேன்.

"எப்போ?"

"சுவாமி வீட்டுக்குள் போகும் பொழுது நீ என்னவோ சொல்லிக் கொண்டிருந்த மாதிரி இருந்தது?"

"நான் என்ன சொல்லக் கிடக்கு? இந்தப் பெண்களுக்கு—உமக்கு முன்பே சொல்லி இருக்கிறேனே? நாம் என்னத்தையாவது சொன்னல், அவர்களுக்கு புரியும் வகை எப்படி?"

"சரி, சரி, ரத்தன சகுந்தலாவைப் போல் வயது வந்த பெண் இல்லை என்று?"

"ஆமாம்" என்று ரங்கப்பன் சொன்னன். அவன் சும்மா இருந்தான் என்பதை நான் நம்பவில்லை.

தீபாவளிக்கு போகும் பொழுது ரங்கப்பாவுக்கு ரொம்ப உற்சாகம். இவர்கள் எல்லாம் ரத்தினவின் சிறிய தகப்பனர் வீட்டுக்குப் போகும் வேளைக்கு ரத்தின அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் நின்றிருந்தாள். இளம் பெண்ணுக்குச் சப்தம் கேட்டதுமே மார்பு பட படத்தது. அன்ெருரு நாள்தான் "கிருஷ்ண மூர்த்தி கண்ண முந்தே" என்று (கன்னட பாட்டு) பாடிக் கொண்டிருக்கும் பொழுது ரங்கப்பாவை ஒரு தடவை பார்த்திருந்தாள். கலியாணத்தில் மணை மீது உட்கார்ந்திருக்கும் பொழுது ஒவ்வொரு தடவை யாரும் பார்க்கா வண்ணம் பார்த்திருந்தாள். கணவனை நினைக்கையில் கலியாண ஞாபகம் எல்லாம் வந்தது. எதிரும் புதுருமாக உட்கார்ந்து பந்து விளையாடினது, தன் கணவன், "அத்தை மகளே" (மாமியார் மகளே) என்று வாத்தியார் சொன்ன பொழுது தன் தாயார் பேச்சைக் கேட்டு தாயார் தமாஷ் பண்ணியது, அதற்கு தனக்குக் கோபம் வந்தது, அதற்குத் தான் கோண மூணவென்று பாடினது, எல்லாம் நினைவுக்கு வந்தது. கலியாணம் ஆனவர்கள் எல்லாருக்கும் இது அனுபவம் ஆகி இருக்க வேண்டும். பெண் எங்கேயாவது இருக்கலாம்; பிள்ளைக்குக் கலியாண வீட்டில் பெண்தான் வீடு முழுவதும் நிறைந்திருப்பது இருக்கும். பிள்ளை எங்கேயாவது போல் இருக்கலாம்; பெண்ணுக்கு அப்படியே! ரத்தினவுக்கும் கலியாண வீடு முழுவதும் ரங்கனல் நிறைந்திருப்பது போல் பாவனை! கொஞ்சம் கஸ்தூரியை ஒரு அறையில் வையுங்கள்; வீடு முழுவதும் கம கம வென்றிருக்கும் – வாசனை அறிந்தவருக்கு. கணவனைப் பற்றி மனைவிக்கு அப்படித்தான்.

யார் வந்தார்கள் என்று தெரிந்திருந்தும் ஒன்றும் தெரியாதவள் போல் ரத்தின தோட்டத்திலிருந்து வாசற் புரம் வந்தாள். வண்டியிலிருந்து மாமியார் முதலில் இறங்கினர். பிறகு ரங்கப்பா அதன் பிறகு எல்லாரும். யார் வந்தார்கள் என்று பார்க்க வந்த பெண் மாமியார் இறங்கினதுமே இன்னர் என்று அறிந்து, வீட்டினுள் போக வேண்டுமோ இல்லையோ? ரங்கப்பா இறங்கும் வரைக்கும் அங்கேயே இருந்து



வண்டியிலே இருந்து இறங்கி..............

விட்டு, அதன் பிறகு உள்ளே சென்றான். அவள் தோட்டத்தில் இருந்த பொழுதே அவளை ரங்கப்பா பார்த்தான். அங்கேஒரு திராக்ஷ பந்தல்; கொடி நன்றாகப் படர்ந்து வேண்டிய மட்டும் கொடி விட்டிருந்தது. பந்தலிலிருந்து கீழேயும் படர்ந்து வீசிக் கொண்டிருந்தது. காற்று வீசும் பொழுது கொத்தும் மெதுவாக அசைந்தாடிக் கொண்டிருந்தது அங்கே. அழகு காட்டுவது போல் இருக்குப் ரத்தினா அங்கிருந்து வந்து வாசற் கதவருகில் நின்றாளா! ரங்கப்பன் இறங்கும் பொழுது அங்கே நின்று கொண்டிருப்பவளைப் பார்த்தான். என்னவாவது செய்து இந்தத் தடவை அவளுடன் பேசியே ஆகவேண்டுமென்று நிச்சயம் செய்து கொண்டான்.

சாயந்திரம் மணையில் உட்கார்ந்த பொழுது ரத்தினா கொஞ்சம் கூட அருகில் அமரவில்லை. மணை

யின் நுனியில் உட்கார்ந்து கொண்டாள். அவளுடைய சித்தி, அத்தை, இன்னும் அங்கே கூடியிருந்த பெண்கள் எல்லோரும் என்னென்வெல்லாமோ சொன்னார்கள். அவள் கேட்கவில்லை. அவளுக்கு என் அருகில் உட்காருவதற்கு இஷ்டம் இல்லையாக்கும்? நான் எழுந்து போகிறேன்" என்று ரங்கன் எழுந்திருந்தான். அப்பொழுது அவள் கொஞ்சம் அருகில் நகர்ந்தாள். கணவன் எழுந்து செல்லாமல் இருக்கட்டும் என்று நகர்ந்தாளோ, எழுந்து சென்றால் எல்லோரும் தன்னை நிஷ்டூரம் செய்வார்களே, என நகர்ந்தாளோ நான் அறியேன். ஒரு வேளை அவன் போகாமல் அங்கேயே இருக்கட்டும், என்ற இஷ்டத்துடன்தான் நகர்ந்திருக்கலாம். அப்படியும் இப்படியுமாக எண்ணெய் விற்பவனிடம் கொசறு கேட்பது போல் கொஞ்சம் கொஞ்சமாக அருகில் வந்தாள்.

ரங்கனுக்கு ரொம்ப கோபம் வந்தது. எழுந்து சென்றே விடலாம் என்று யோசித்தான். ஆனால் சென்று விடவில்லை. ஏன் என்பீர்களா?

ராமனும் பீமனும் பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ராமனின் சட்டைப் பை நிறைய பொறி கடலை, பீமனின் சட்டைப் பை காலி.

"அதென்னடா, ராமு?"

"ஒன்றும் இல்லைடா, பொறி கடலை."

"டேய், வேறு யாருக்கும் கொடுக்கப்படாது. நாம் இருவருமே சாப்பிடலாம்."

"நான் அதை எச்சில் பண்ணி விட்டிருக்கிறேன்."

"எச்சில் ஆனால் என்ன, தேவலை."

"டேய், நான் உனக்குக் கொடுக்க மாட்டேன் பார்."

"அப்படியானால், உன்னுடன் டு விட்டு விடுகிறேன் பார்.

"விட்டுவிடேன்."

ராமன் விட்டுவிடு என்றாலும் பீமன் விடுவதில்லை. கூடவே இருக்கிறான். கொஞ்சம் தொலைவிலோ, கொஞ்சம் அருகிலோ இருந்து ராமனைப் பின் தொடர்கிறான். ஏன்?—பொறி கடலை மீது ஆசை.

ரங்கப்பன் எழுந்து செல்லவில்லை. என்னென்றால், ரத்தினை பொறி கடலை வைத்துக் கொண்டிருக்கும் பையனைப் போல, ரங்கப்பாவுக்கோ நாக்கில் ஜலம் ஊருகிறது — சட்டைப் பை மாத்திரம் காலி.

வெகு நாழிகை இப்படியே உட்கார்ந்திருந்து எல்லாம் முடிந்த பிறகு, ரங்கப்பா அலுப்புடன் ஆரத்தி முடியாதா என்று காத்திருந்து, எழுந்து சென்றான். போய் அறையில் உட்கார்ந்து யோசிக்கலானான். என்னய்யா நியாயம் இது? ரொம்ப உற்சாகத்துடன் ஊரிலிருந்து இங்கே வந்தால், இவள் இப்படிச் செய்வது சரியா? நான் யாருக்காக வந்தது? இவளுக்காக அல்லவா? இவளைப் பார்ப்பதற்காக, இவளுடன் பேசுவதற்காக, என்று அல்லவா? எனக்கு இவளிடத்தில் இருந்த அக்கரை இவளுக்கு என்னிடத்தில் இல்லையே? நான் எண்ணிக் கொண்டிருந்தபடியே ஒரு கன்னம் பால், ஒரு கன்னம் ஜலம் என்ற சமாசாரத்துக்கு வந்து விட்டது என்று எண்ணிக் கொண்டான். ஆனாலும் என்ன?

வந்ததென்னமோ வந்தாயிற்று; அவளை என்னவாவது செய்து பேச வைத்தே விடுவது என்ற தீர்மானத்துக்கு வந்தான்.

சிப்பாய் மீசையை முறுக்கிக் கொள்வது போல் ரங்கப்பா தன் மனதைத் திடம் செய்துகொண்டு அங்கிருந்து வெளியே வந்து ரத்தினு தன் நகைகளைக் கழற்றி வைப்பதற் கென்று போயிருந்த அறைக்குச் சென்றுன். 'போய் பேச வைப்பது. பேசாமலிருந் தால், நன்ருகத் திட்டி விட்டு வந்து விடுவது' என்று போனுன். அவ்வளவாக வெளிச்சம் இருக்க வில்லை. அங்கே ஜன்னல் அருகில் ரத்தினு நின்றிருந்தாள். காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பினுள். திரும்பிப் பார்த்தால், ரங்கப்பா!

பசுவின் கதையில் – அது நிஜ மானதோ பொய்யானதோ — புலி என்ன வெல்லாமோ முயன்ற வாறு பசுவின் மந்தைக்கு வந்த தாம். பாடல் மறந்து விட்டது. அதிலிருப்பது "......... வந்தான் அந்தப் புலிராயன் (பந்தனு ஹுலி ராயனு!)" என்று இருக்கு. ரத்தினுவுக்குக் கணவனைப் பார் த்து "பந்தனு ஹுலி ராயனு" என்னும்படி ஆயிற்ருே என்ன வோ? அவனைப் பார்த்ததும் ஜன் னல் பக்கம் முகத்தை மறுபடியும் திருப்பிக் கொண்டாள்.

ரங்கப்பா மெதுவாக அருகில் சென்று பக்கத்தில் நின்று, சிறுமி யின் முகத்தைப் பார்த்தான். உடம்பு நிறைய நகை, முகம் நிறைய கண்; தான் பூசின சந்த னம்; ஆஹா! முகத்தின் அழகை வர்ணிக்க இயலாது. கோபம் எல்லாம் மாயமாகி விட்டது.

"நீ ஏன் என்னுடன் பேசுவ தில்லை?"

பதில் இல்லை.

"என்னுடன் பேச மாட் டாயா?"

பதில் இல்லை.

"என் மேல் ஏதாவது கோப மா?"

ஐயோ பைத்தியமே! இன் னும் கண் திறந்த பாடில்லை. இப்பொழுதே "என் மேல் கோபமா?" என்று கேள்வி.

"என்னுடன் பேச மாட் டாயா என்ன?"

பதில் இல்லை.

யாராவது, வந்து விடப் போகி ருர்கள் என்று பயம். பெண் பேச மாட்டேன் என்ருள்.

"அப்படியானுல் நான் போகி றேன்." என்று ரங்கன் பின்னுல் நகர்ந்தான். அப்பொழுது ரத்தினு கொஞ்சம் தலையை திருப்பி அவன் பக்கம் பார்த்தாள். போக இஷ்டமில்லை. போதாக் குறைக்கு தேவி கொஞ்சம் பிர சன்னமாகி தன் பக்கம் பார்வை செலுத்தினுள். "செக்கு ஆடி ஆடி எண்ணெ வந்த பொழுது கண் மூடிக் கொண்டார்கள்." என்பதுபோல் அந்த சமயத்தில் போவதா? ரங்கப்பன் மறுபடி யும் அருகில் நெருங்கினுன்.

"நீ என்னுடன் பேசமாட் டாயா என்ன?"

"பேசாமல் என்ன?"

கேள்விக்குப் பதில் கேள்வி ரத்தினுவினுடையது.

ரங்கப்பாவின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. ஏன்? "தன் மனைவி தன்னுடன் பேசி விட் டாளே!" என்று. இதென்ன

கடவுளின் சிருஷ்டியின் மாயையை பாருங்கள். இது வரைக்கும் சுமார் எவ்வளவு கலியாணங்கள் ஆகிருக்கலாம் இந்த உலகில்? கணக்கே இல்லை. ஆனால், ஒவ்வொருவனும் தன் தன் மனைவி தன்னிடத்தில் முதன் முதல் பேசின பொழுது ஏதோ பெரிய கோட்டையைப் பிடித்து விட்டவனைவிட அதிக ஆனந்தம் கொள்கிறான். அவரவர்களின் மனைவிமார்கள் அவரவர்களிடம் பேசாமல் என்ன செய்வார்கள்? பேசுவது நியாயமே. ஆனாலும் பேசுவது என்றும் தவறி விடாதானாலும், ஒரு தடவை பேசும் வரைக்கும் சாவகாசம், ஆரம்பித்த பிறகு போதுமப்பா போதும், என்னும் வரைக்கும் சொல் மாரி பொழியும் என்று என்னைப் போன்ற அறிவாளிகள் சொல்லி இருந்தாலும் (சொன்னாலும்) எந்தப் பையனைத்தான் பாருங்கள், அவன் மனைவி அவனிடம் முதன் முதல் பேசின தினம் வெகு சந்தோஷத்தில் மூழ்கி இருப்பான். சாக்ரடீஸ் என்ற தபஸ்வியின் மனைவி அவனுடைய ஞான பூரிதமான தலையின் மீது சாணித் தண்ணீரைக் கொட்டி அவனை வாயார திட்டிக் கொண்டிருப்பாளாம். அவனும் முதல் தடவை தன் மனைவி தன்னுடன் பேசின பொழுது சந்தோஷப் பட்டிருப்பானோ என்னவோ? யாருக்குத் தெரியும்.

"பேசாமல் என்ன?" என்று ரத்தினா கேட்டாள்.

"அப்படியானால் முதலில் பேச வைத்த பொழுது ஏன் பேசவில்லை?"

"காலையில் வீட்டுக்கு வந்தவர் என்னுடன் பேச இப்பொழுது தானா வருவது?"

ரங்கப்பனுக்குத் திண்டாட்டமாகி விட்டது. (திக்குமுக் காடிறான்) பெண் சாது கொஞ்சம் பயமுறுத்தலாம் என்று வந்தால், நல்ல தண்டாவில் அகப்பட்டுக் கொண்டாப் போலாயிற்று. உலகமே இப்படித்தான், தோரமாணிக்கம் என்று பிடித்தால் செந்தணலாயிற்று என்று சொல்வது போல் வம்பில் அகப்பட்டுக் கொண்டது என்னவோ உண்மை. ஆனால் ரொம்ப சுகத்தை அனுபவித்தான். ரூபவதியான உங்கள் மனைவிதான் (இளமங்கையாக) இருந்த பொழுது தன்னிடம் பேசவில்லை என்று உங்கள் மீது கோபித்துக் கொண்டால் ஆனந்தமில்லாமல் வேறென்ன? ரங்கப்பாவின் தலை தீபாவளி ஆனந்தத்துடன் சோபனமாக விளங்கிற்று.

நான் சொன்ன வார்த்தையைச் சிறுவர்களான நீங்கள் எல்லோரும் ஒரு வேளை நம்புவீர்கள். ஆதலால் உண்மையான விஷயத்தை மாத்திரம் எழுத வேண்டுமென்று, நான் ரத்தினாவிடம் ஒரு நாள் இதை யெல்லாம் சொல்லி, இது நடந்தது உண்மையா எனக் கேட்டேன். ரங்கப்பாவும் அங்கேயே நின்று கொண்டிருந்தான். மெதுவாக சிரித்துக் கொண்டிருந்தான்.

"போங்கள், உங்களுக்கு வேறென்ன வேலை?" என்று ரத்தினா சொன்னாள்.

"உண்மை என்றால் சொல். இல்லாவிட்டால் உண்மை என்றே நான் நினைத்துக் கொள்கிறேன்" என்று நான் சொன்னேன்.

"உங்களுக்கு யார் சொன்னது? இதையெல்லாம் உங்களிடம் ராமாயணம் படிப்பது யார்?" என்று ரத்தினா கேட்டாள்.

"அம்மையா."

"அம்மையா எத்தனை நிஜம் பேசுகிருள் என்பது உங்களுக்குத் தெரியாதா என்ன? நாளைக்கு ராமாபட்டர் அகத்துக்கு வாருங்கள். அவள் எத்தகைய பொய் எல்லாம் அளக்கிருள் என்பது தெரியும்" என்ருள்.

மறுநாள் ராமாபட்டரின் அகத்துக்குப் போனேன். நான்கு மணி சமயம். பெரிய கூடத்தில் பெண்கள் எல்லோரும் கூடி, கொஞ்ச நேரம் விநோதமாகக் கழிப்பார்கள். தற்காலத்தில் பெண்கள் இவ்வாறு எங்கேயாவது ஒரு இடத்தில் கூடி, கொஞ்ச நேரம் உல்லாசமாகக் காலம் கழிப்பது குறைந்து விட்டது. பெரிய பட்டிணங்களில் ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாததினல் ஒருவர் அகத்துக்கு ஒருவர் காரியம் இருந்தால் ஒழிய போவதில்லை. எழுதப்படிக்கத் தெரிந்த பெண்கள் ராமாயணத்தையோ, நாஸிகளின் கதையையோ (கிரீக் புராணத்தில் நாஸிக என்பவள் ஒருத்தி) கொஞ்சம் மனது வந்தால் துப்பறியும் நாவலையோ கையில் பிடித்துக்கொண்டு காலம் கழிப்பார்கள். இது ஆங்கிலேயர் முறை (Fashion) என்று கேள்விப் பட்டிருக்கிறேன். எங்களூரில் இப்பொழுதும் கூட பெண்கள் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வீட்டில் கூடி, தலை பின்னிக் கொண்ட பிறகு தத்தம் அகங்களுக்குக் காரியம் செய்யப் போவார்கள். அன்றைக்கு நான் போன பொழுது பெண்கள் எல்லாம் ராமாபட்டர் அகத்தில் நிறைந்திருந்தார்கள்.

நான் போன சமயத்தில் —

ஒருத்தி – "தலை பின்னு" என்ருளாம்.

மற்ருெருத்தி – அந்த நறைத்த மயிரை வாரா விட்டால் ரொம்ப பிரமாதமாக்கும்.

முதல் பேசினவள் :– அவள் வார மாட்டேன் என்ருளாம். அதற்கவர் கோபித்துக் கொண்டு வேறு கலியாணம் செய்து கொள்கிறேன் பார்' என்று பயமுறுத்தி விட்டு, அடிக்கப் போனாராம்.

ஒருத்தி :– இதென்ன வெட்கக் கேடம்மா? அறுபது வயதுக் கிழவனுக்கு வாரிப் பின்னி அலங்காரம் செய்து வெளியே அனுப்புவதற்காக இனிமேல் இரண்டாம் கலியாணங்கள் செய்து கொள்வார்களா என்ன?

கொஞ்சம் வயதானவர் ஒருவர்: "யாரடீ உங்களுக்கு இதை எல்லாம் சொன்னது?" என்ருர். "அம்மையா கண்ணுரப் பார்த்தாளாம்" என்றதைக் கேட்டு, "என்ன வார்த்தையடீ, அம்மா, இது, ஒன்றும் தெரியாத பெண், அது என்னத்தையோ சொன்னல் அதையே பிடித்துக்கொண்டு அப்பொழுதே பிடித்து எவ்வளவு சிரிப்படீ, உங்களுக்கு? நல்ல பெண்களடியம்மா?" என்று அவர் மிரட்டினர்.

நான் அந்த வேளைக்கு, "ராமாபட்டரே" என்று அழைத்தேன். பெண்களின் பேச்செல்லாம் அடங்கி விட்டது. நான்கைந்து பெயர்கள் எழுந்து உள்ளே ஓடிப் போன சப்தம் கேட்டது. நான் கூடத்துக்கு வந்தேன். அங்கே எல்லோர் முகத்திலும் புன்முறுவல். ஒருவருக்கொருவர் மெள்ளச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

கிழவியம்மாள் "ராமாபட்டன் வீட்டில் இல்லை" என்று சொன்

னர். நான் "அதான் இத்தனைப் பேச்சு உங்களுக்குக் கெல்லாம், பூனை இல்லாத பொழுது எலிக்குக் கொண்டாட்டம்" என்று சொல்லிவிட்டு வந்தேன்.

வாயில் அப்படி சொன்னேன் அவ்வளவுதான். எனக்குக் கோபம் ஒன்றுமில்லை. ரத்தினு எனக்கு அம்மையாவின் பொய்யைக் காட்டிக்கொடுக்க வேண்டுமென்று செய்த ஏற்பாட்டினுல் ரங்கப்பாவின் தீபாவளியைப் பற்றி அம்மையா சொன்ன விஷயம் உண்மை என்று காட்டிக் கொடுத்த மாதிரி ஆயிற்று. போதாக் குறைக்கு நான் செய்தது என்னவோ ஆகட்டும், இவ்வளவு பெண்களுடன் வேடிக்கை விநோதத்துக்குக் காரணமாயிற்றே என்று திருப்தி யடைந்தேன். இதைப் படிக்கிற உங்களுக்கும் அதே வார்த்தை. இதைப் படித்ததும் உங்களுக்கு இதனுல் கொஞ்சம் சந்தோஷமுண்டானுல் அதுவே எனக்குப் போதும்.

[மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் கன்னடத்தில் எழுதிய கதை]

★

யார்?

காதலித்தும் அதன் உணர்ச்சிக்கு உள்ளாகாத ஜீவாத்மாக்கள்; கலியாணம் செய்தும் வாழ்க்கை நடத்தாத பிரகிருதிகள்; ஏழையாக இருந்தும் செல்வத்தின் சுகபோகங்களையும், செல்வமிருந்தும் ஏழ்மையின் சின்னங்களை அனுபவிக்கப் பிறந்தவர்கள்; விஷத்தைக் குடித்தும் சாகாத சிரஞ்சீவிகள் யார்?

நடிகர்கள்!

★

தேவைக்குத் தக்க எஃகு

[டி. பி. நவநீத கிருஷ்ணன்]

ஆயுதங்களைக் கையாளும் திறமை மனிதனுக்கே உரித்தானது. அத்திறமை கொண்டே, அவன் மிருகங்களை வென்று இருக்கிறான். நாடோறும் புழங்கப் படும் கருவிகள் நானாவித உலோகங்களால் பண்ணப்பட்டவை. சிறந்த ஆயுதங்கள் எஃகினால் செய்யப்படுகின்றன. ஆதியில் உபயோகிக்கப்பட்டு வந்த எஃகு பெரும் பகுதிக்கு இரும்பும் சிறு வீதத்திற்கு கரிப் பொருளான கார்பனும் (Carbon) சேர்த்து உருக்கப்பட்ட கலவை உலோகமாய் இருந்தது. இக்காலத்தில் பல அளவுகளுக்கு வேறு பல உலோகங்களும் சேர்க்கப்பட்ட எஃகு ரகங்கள் உள்ளன. எனவே, இன்று பலவகை எஃகுகள் வழங்கி வருகின்றன.

சென்ற காலத்தில், இரும்பும் கார்பனும் அளவைத் திருத்தமில்லாமல் கைத்திட்டத்தின் படியே கலக்கப்பட்டு எஃகாய் உருக்கப்பட்டன. ஒரு மாதிரி எஃகில் இரும்பு — கார்பன் முதலான பொருள்கள் எத்தனை எத்தனை சதவீதங்களான அளவுகளில் அமைந்து இருப்பன எனக் காணும் பொருட்டு, அதை ரஸாயனீயப் பகுப்புச் சோதனை (Chemical Analysis) செய்து பார்க்கும் பழக்கம் அந்த நாளில் கிடையாது.

இதைப்பற்றி இன்றைய எஃகுத் தொழிலாளிகளிடை ஒரு கதை சொல்லப்படுவது உண்டு. வாலிபத் தொழிலாளிகள் இருவர் தெருவில் போய்க் கொண்டிருந்தார்கள். வழியில் எஃகுத் துண்டு ஒன்று கீழே கிடந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்த்தார்கள். அந்த எஃகில் கார்பன் எத்தனை சத வீதமாய் இருக்கலாம் என்பதைப் பற்றி அவர்களிடை வாதம் எழுந்தது. அப்போது, அந்த பக்கமாய் பழைய நாள் தொழிலாளி ஒருவன் வந்தான். வாலிபர்களின் வாதத்தை சற்று நேரம் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு அந்த எஃகுத் துண்டைத் தன்னிடம் கொடுக்கும்படி கேட்டான். அவர்களும் கொடுத்தார்கள். அதை வாங்கி அதில் ஒரு முனையை உடைத்து அச்சிறு துண்டை வாயில் போட்டுக் கொண்டான், அந்த பழைய நாள் தொழிலாளி. சற்று நேரம் அதை ருசிபார்த்து விட்டுத் துப்பிவிட்டான். அந்த வாலிபர்களை நிதானமாய்ப் பார்த்தபடி, அதில் நாற்பது சதவீதம் கார்பன் இருப்பதாகச் சொன்னான். அவன் வேடிக்கை பண்ணினான் என்று வாலிபர்கள் நினைத்தார்கள். இருந்தாலும் சரி என்று சொல்லி விட்டு, அந்த எஃகுத் துண்டை எடுத்துக் கொண்டுபோய் அதை ரஸாயினி (Chemist) ஒருவனிடம் கொடுத்து அதைப் பரிசோதித்துப் பார்த்து அதில் எவ்வளவு சதவீதம் கார்பன் இருப்பது என்பதைக்கண்டு தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதை பரிசோதனை செய்த பிறகு, அதில் முப்பத்து ஒன்பதே முக்கால் சதவீதம் கார்பன் இருப்பது என்று கூறினான். பழைய நாள் தொழிலாளியின் வழியில் உத்தேசமான கணக்குப்படி எத்தனையோ கோடி கோடி பாரங்களான எஃகு உருக்கப்

பட்டு, விற்கப்பட்டு உபயோகிக்கப்பட்டு வந்தது. ஆயினும் கைப்பழக்கத்தையும், கண்திட்டத்தையும், நாக்குப் பயிற்சியையும் பொருத்த வழியேயான தேர்ச்சியால் இன்று பயனில்லை. இந்த நாட்களில் உபயோகப்படுகிற பலவித எஃகுகள் கொண்ட பொருள்களை பரிசோதிக்கும் பொருட்டு திட்பத் திருத்தமான கருவிகள் அவசியமாய் இருப்பன. இக்காலத்தில் எஃகுவகையொன்று கொண்டுள்ள கார்பனின் வீதம் எவ்வளவாயிருப்பது என்பதை செவ்வைத் திருத்தமாய் அளவிடும் பொருட்டு, அந்த எஃகானது காந்தம்புலம் (Magelic Field) ஒன்றை எந்த அளவுக்கு பாதிப்பது எனத் திட்பமாய் அளவை செய்யப்படுகின்றது.

எஃகுத் தொழிலை யொட்டி இரும்பு உருக்கப்பட்டு திரவமாயுள்ள நிலைமையிலேயே அதனுடன் கார்பன் முதலான பொருள்கள் சேர்க்கப் படுகின்றன. அவ்வாறாக பொருள்களைக் கலப்பதற்குத்தக்க தறுவாய் எது என அறியும் பொருட்டு உருக்குத் திரவத்தின் வெப்ப நிலை, பாதரசம் ஆவியாகும் வெப்ப நிலையைவிட மிகவும் ஏற்றமானது. ஆதலால், இரும்பு உருகின திரவத்தின் வெப்பநிலையைவிட அளவிடற்கென சாதாரணமான பாதரச வெப்ப நிலைக் கருவி (Mercury Thermometer) தக்கதாகாது. எனவே, பல நூற்றாண்டுகளுக்கு முன்பினின்றே இருப்பு உருக்குத் திரவத்தின் வெப்பத்தகவு குத்துமதிப்பான முறையை யொட்டியே காணப்பட்டு வந்தது. உருக்குத் திரவத்தினுள் இருப்புத் தண்டு ஒன்றின் நுனி அமிழ்த்தப்படும். திரவத்தில் புகுந்த அந் நுனிப்பகுதி உடனே உருகி விட்டதாயின், வெப்பநிலை சீரளவானது என மதிக்கப்படும்; அப்படி உருகாவிடின் வெப்ப நிலை ஏற்றதன்று எனக் கருதப்பட்டது. குத்து மதிப்பிடும் முறை இன்று கையாளப் படுவது இல்லை. வெப்பமின்னீக தணல் நிலைக்காறுவி (Thermo-electric Pyrometer) என்ற கருவியைக் கொண்டு உருக்குத் திரவத்தின் வெப்பநிலை திருத்தமாய் அளவிடப் படுகின்றது. அத்தகைக் கருவியில் உருக்கு வெப்ப நிலை (Melting Point) உயர்ந்த உலோகமொன்றாலான கம்பியொன்றின் இரு நுனிகள், அத்தன்மையுடைய இன்னொரு உலோகத்தாலான இரண்டு கம்பிகளின் நுனிகள் ஒவ்வொன்றுடன் முறையே இணைக்கப்பட்டிருப்பன. இக்கம்பிகளின் மற்ற நுனிகள், முறையே கால்வனிக் காறுவி (dalvanometer) என்ற கருவியுடன் தொடுக்கப்படுவன. கால்வனிக் காறுவி என்ற கருவி மின்னேட்டம் உள்ளதைக் காட்டி அதை அளவிடுவது. இருவகை உலோகக் கம்பி நுனிகள் ஒருப்படப் பொருத்தப்பட்ட இணைப்புக்களில் (Gunctions) ஒன்று உருக்குத் திரவத்தில் அமிழ்த்தப்படும்; மற்றொரு இணைப்பு உறைபனியிடை சொருகப்படும். இவ்வாறாக நுனியிணைப்புக்கள் வெவ்வேறு அளவுகளுடைய வெப்ப நிலைகளில் இருப்பன ஆகும். அதையொட்டி அக்கம்பிகளில் மின்னேட்டம் விளைகின்றது. அம்மின்னேட்டத்தின் அளவு கால்வனிக் காறுவியின் வழியே அறியப்படுகிறது.

மின்னேட்ட அளவுக்கும் வெப்ப நிலை வேற்றுமையளவுக்கு மிடையான தொடர்பு விதி திருத்தமாய் அறியப்பட்டதொன்று. ஆதலின் மின்னேட்ட அளவைக் கொண்டு நுனியிணைப்புக்களுக்கு இடை

யான வெப்ப நிலை வேறுபாட்டின் அளவு கணக்கிடப்படலாம். அது உருக்குத் திரவத்தின் வெப்ப நிலை அளவையைத் திருத்தமாய்ச் சுட்டுவதாகும்.

திரவமாய் உருகின இரும்புக் குழம்பின் மேற்பரப்பில் கசடுத் திப்பிகள் (Slag) மண்டி மிதந்து கொண்டிருப்பன. எஃகு பண்ணுவதைப் பொறுத்து கசடுத் திப்பி கொண்ட அயிர்க்கையின் (சிலிக்கான் Silicon) அளவையே அறிதல் முக்கியம். பழங்காலத்து ஆள் பார்வைத் திட்டத்தால் அந்த அளவை மதிப்பிட்டான். இன்று அந்த கசடுத் திப்பியில் சிறிதளவானது பாகுதரக்காறுவி (Viscosimeter) என்ற கருவியில் ஊற்றப் படுகின்றது. அக்கருவி தக்க வாறான குழாயொன்றைக் கொண்ட அமைப்பு. குறித்த நேரத்தில் அக்குழாயினுள் ஓரளவான தசடுத்திப்பி இறங்குகிற ஆழத்தின் அளவு காணப்படுகிறது. அதைக்கொண்டு அந்த அளவான கசடுத் திப்பியில் அமைந்த மண் பொருளான அயிர்க்கையின் அளவு எத்துணையாயிருப்பது என குணிக்கப்படுகின்றது.

இவ்வாறாக, மேலோட்டமான குத்து மதிப்பிடும் வழிகள் கைவிடப்பட்டு கருவிகொண்டு உட்புகும் சோதனை வாயிலான அளவிடு முறைகள் கையாளப்பட்டு வருவன. அந்நிமித்தமாய் எஃகுத் தொழின் முறைகளையொட்டி பெரும் மாறுதல்கள் தோன்றி இருப்பன. ஆக்கப்படும் எஃகின் தரமும் உயர்ந்து வந்திருப்பது. எஃகு என்றது ஒரேயொருவகையான பொருள் என்ற நிலைமையும் மாறிவிட்டது. பல்லாயிர ரகங்களான எஃகுகள் இன்று செய்யப்பட்டு வருவன. எஃகு உபயோகிக்கப்பட வேண்டுமான காரியத்திற்குத்தக்கவாறான எஃகு ரகத்தைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். தேவைக்குத் தக்க வாறான எஃகு ரகம் கிடைக்கும். அவசியம் ஏற்பட்டால் புது புது விதங்களான எஃகுகளையும் பண்ணிக் கொள்ளலாம்.

மக்கள் ஈடுபடும் தொழில்கள் பல் வேறான வகைகளினவாய் இருத்தலைப் போலவே, எஃகு பயனுக்கப்படும் வினைகளும் நானாவிதங்களினவாய் உள்ளவை. பாலங்கள் கட்டப்படுவதற்கான கர்டர்கள் (Girders) உத்திரங்களால் உபயோகிக்கப்படும் கர்டர்கள், இன்னோரன்ன அமைப்பு வேலைச் சாதனங்களுக்கு எடுத்த எஃகு பளுவைத் தாங்கிக் கொண்டிருக்கும் வன்மையில் சிறந்திருக்க வேண்டும். ரயில் வண்டிகளின் முன் புறத்திலும் பின் பக்கத்திலும் பொருத்தப்படுகிற 'மோதுபடுவிகள்' (Buffers) எனப்படும் தண்டிகைகள், கட்டுச் சங்கிலிகள், ரயில்பாதைத் தண்டவாளங்கள் முதலானவை அதிர்ச்சிகளைத் திறனுடன் ஏற்கும் பண்பில் மேன்மையுடையனவாய் இருத்தல் அவசியம். வல்லியக்க வண்டிகள் (மோட்டார் கார்கள்) நீராவியக்கப் பொறிகள் (ஸ்டீம் எஞ்சின்கள்) இன்னோரன்ன இயந்திரங்களின் பொருத்தல் சட்டங்களும், தகடுகளும் செய்யப்படுகிற எஃகு ரகம் பளுவைத் தாங்கல் — அதிர்ச்சியை ஏற்குதல் — வளைந்து உடையாத உரனுடனிருத்தல் — என்ற பல உறுதிப்பாடுகளையும் சிறப்பாய்ப் பெற்றிருப்பது. விசை வில்லுக்கு எடுத்த எஃகு வகை நன்கு வளையவும் பிறகு முந்தின நிலைமைக்கு மீளவும் வல்ல திறனில் உயர்ந்திருப்பது. மின்னுக்கப் பொறிகள் (Electric Generators) பொருத்தும்

பொருட்டு பயனுறும் எஃகுத் தகடுகள், அப்பொறிகள் விளைவிக்கும் மின்சார ஆற்றல் மிக்கதாயிருப்பதற்குத் தக்கபடி காந்தவியலான விசேஷ குணங்களுடன் இருப்பது அவசியமாம். தகடுகளாய் அடிப்பதற்கான ரகமும் கம்பியாய் இழுக்கப்படும் விசையானதும், திசைகாட்டி (Complss) செய்யப்படும் காந்தவியல் மிக்க விதமானதும், முறையே, அந்த அந்த காரியத்துக்குத் தக்க திறன்களை யொட்டி மேதகுவாய் இருப்பன. ஊறுகாய்கள், மருத்துப் பொருள்கள் முதலானவை வைக்கப்படும் டப்பிகளும் குப்பிகளும் குவளைகளும் செய்யப்படுகிற 'மாசில்லா' எஃகு (Stainless) எனப்படும் வகையானது, புளிவைகளால் (Acids) அரிக்கப்படாமலிருக்கும் தன்மையில் சிறந்திருப்பது. உலோகம் உருக்கப்படும் தொட்டிகள் செய்யப்படுகிற எஃகு ரகம், 1500 டிக்டிரிகள் வரை சூடேறினதாயும், பிறகு குளிர்ந்ததாயும் ஆய்க் கொண்டிருப்பதாகும். அவ்வாறாக, பேரளவான வெப்ப நிலை மாற்றத்துக்கு உட்பட்ட போதும் அது உருக்குலையாமலும், பலங்குன்றாமலும் இருந்துவரும் சிறப்புடையது. குளிர்விக்கின்ற பனிவிளைப் பொறிகளில் (Refrigerators) பயன்படுகிற எஃகு வகையானது பனிப்பு மிக்க தட்பத்தையும் ஓர்க்க வல்லதாயிருத்தல் வேண்டும். திருகாணிகள் செய்யப்படும் எஃகு ரகம் எளிதில் வெட்டப்படும் தகவுடையதாயிருத்தல் இன்றியமையாதது. ஆயுதங்கள் பண்ணப்படும் சல்லிய எஃகு பழுக்கக் காய்ச்சப்பட்ட உலோகத்தை செதுக்கும் நிலைமையிலும் கடினப் பாங்கான சிறப்பை இழக்கக் கூடாது. குழாய்களும் தகடுகளும் பண்ணப்படும் எஃகு ரகம் எளிதில் இணைந்து பற்றிக்கொள்ளும் (Easily welded) திறனில் சிறந்திருப்பன.

பொதுத்தர எஃகுடன் தக்கவாறான வேறு சில பொருள்களை முறையே சேர்த்து உருக்கலையொட்டி விசேஷித்த தன்மைகளுடைய எஃகு ரகங்கள் பல செய்யப்படுகின்றன. தக்கவாறாய்க் காய்ச்சியும் குளிர்வித்தும் எஃகுகள் செப்பப்படுதனுக்கப்படுவன. சுத்தியால் அடித்தும் ஏற்றபடி இழுத்தும் எஃகு ரகங்கள் பண்பாக்கப்படுகின்றன. இங்ஙனமாக, ரஸாயனனீயத்தகவையும் பொருண்மை நுணித்தலையும் தக்கவாறாய் மாற்றிப் பொருத்தினபடி பலவித எஃகுகள் அமைக்கப்படுவன. பழுக்கக் காய்ச்சப்பட்ட எஃகு சடீரென தண்ணீரில் போடப்பட்டு குளிர்ந்ததாயின் அதன் உரமும் இழுபட்டு மீளும் வன்மையும் சிறக்கின்றன. அப்படிச் செய்தற்கு 'கலிதப்பதனக்குமை' (Tempering) எனப்பெயர். அவ்வாறான எஃகு சற்று கொய்தாயிருக்கும். ஆனால் அதை மெதுவாய் இளஞ்சூட்டில் காய்ச்சினால் கொய்துத் தன்மை அகன்று, அது உரனுடையதாகின்றது, பழுக்கக் காய்ச்சப்பட்ட நிலைமையில் அழற்சியின் விளைவாய் எஃகில் அளாவலாகியுள்ள பொருள்கள் இளகுகின்றன; இரும்பைச் சார்ந்த அயவுள்ளீட்டு (Ferrite)க் களிடையில் கார்பன் சேர்வான கார்பைடுகளின் (Carbides) திணிக் கரையம் (Solid solution) தேக்கமாயிருக்கும். குளிர்ந்த போது மூலத்துகளியல் அமைப்பணி (Molecular Structure) மாறுதல் அடைகின்றது. அயவுள்ளீட்டுக் களிடை பிழம்பாய்த் தேங்கியிருந்த கார் பைடுகள் நொய்களாகி

பரவலாய்ச் சிதறுண்டபடி பொருத்துகின்றன. அவ்வாருன கலவைக்கு, விரவுதூள்கெழுகலாவல் (மார்டன் ஸைட்டு) என்று பெயர் கார்பைடு பொடிகள் நன்கு பிரிந்தபடி தூவப்பட்டவாருயாக, ஆக எஃகும் மேலும் மேலும் நேர்த்தியாய் ஆகும். ஆயினும் மார்டன்ஸைட்டு உரப்பாங்குடன் கூட விண்டு உதிரும்படியான கொய்துத்தன்மையையும் பெற்றிருப்பது, ஆகவே பழுக்கக் காய்ச்சப்பட்டு தண்ணீரில் போடப்பட்டு எடுக்கப்பட்ட நிலைமையடைந்த எஃகு தரமானதாயிருக்காது. இளஞ்சூட்டில் வாட்டப்படும் போது, அயவுள்ளீட்டுகளும், கார்பைடுகளும் சற்று இளகி சரவையனியில் அமைந்து ஒற்றிக்கொண்டபடி நேர்பாகின்றன. மெதுவாய்க் குளிர்ந்து வருகின்றமையினுல், பற்று விடாமல் இருப்பன. எனவே, எஃகு சற்று மெத்தென்று ஆய்விடினும், முரணியல் (Toughness) சிறந்ததாய் ஆகின்றது. கெடியாரம், கிராமபோன் முதலானவற்றில் பொருத்தப்படும் வில்களும், இன்னும் பலவகை வில்களும் இப்பண்பான எஃகினுலேயே இயற்றப் படுவன.

சிற்சில வகையினவான பொருள்கள் தக்க அளவுகளில் கலந்த எஃகின் தரம் உகந்தவாறு கூர்ப்பாகின்றது. சிறிதளவு பாஸ்பரஸ் (Phosphorus) சேர்க்கப்படின், எஃகின் ஈர்ப்புத்தகைமீள்விறலும் (அதாவது வலிமைகொண்டு இழுக்கப்படின் விண்டு விடாமல் சற்று நீண்டதாகி, வலிமை எடுக்கப்பட்ட பிறகு, முன்னைய நிலைமைக்கு மீளும் திறன் — ஆங்கிலத்தில் Tensile Elasticity எனப்படுவது) புளிகைகளால் (Acids) அரிக்கப் படாமல் இருக்கும் தகவும் சிறப்பாகின்றன. சரியான திருத்த அளவுக்கு கந்தகம் கலந்த தட்டை உருட்டப்பட்ட எஃகு (Rolled Steel) இயந்திர இழைப்புக்கு ஏற்ற நேர்த்தி யுடையதாகின்றது. கந்தகமானது எஃகில் இரும்புக்கந்தகயடுவாய் (Sulphide of Iron) ஆகி இருப்பது. இயந்திரத்தில் எஃகு தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையில், கந்தகயடுப் படலங்கள் மெல்லிய இழைகளாய்ப் பிரிந்து உதிர்ந்து விடுவன. அரியப்படும் ஓரத்தில் செதுக்கு சிராய்புகள் துருத்திக் கொண்டிரா, நுண்மணல் பொருளான அயிர்க்கையின் கலப்பால் வில் அமைக்கும் எஃகினது வளைந்து மீண்டு வளைந்து மீளும் வன்மை மேம்படுகின்றது; தொடுப்பு அமைப்புக்களுக்கான எஃகின் ஈர்ப்புத்தகை மீள்விற்லின் தரம் உயர்கின்றது. மின்சாரக் கருவிகள் செய்யப்படற்கான விசேஷரகமான எஃகில் அயிர்க்கை (Silicon) முக்கியமாய் இருப்பது.

எஃகுடன் கூட்டப்படுகிற சுத்த உலோகங்கள் முக்கியமானவை, குரோமியம் (Chromium) சேர்க்கப்பட்ட எஃகு கடினமும் உறுதியும் மிக்கதாய் இருப்பது புளிகைகளால் (Acids) அரித்துத் தின்னப் படாதது. அவ்வகை எஃகு மாசில்லா எஃகு (Stainless Steel) எனப்படுவது. அதில் 18 சதவீதம் குரோமியமும் 8 சத வீதம் நிக்கலும் 76 சத வீதம் இரும்பும் கலந்திருப்பன. நிக்கலின் சேர்க்கையால் எஃகின் முரணியல் மிக்கதாயாகின்றது. முரணியல் சிறந்திருக்கும் பொருட்டு சேர்க்கப்படும் இன்னெரு உலோகம் 'மாங்கனீஸ்' (Manganese) எனப்பட்டது. அது எஃகின் பல பகுதிகளிலும் ஊடுருவிப் பாய்ந்து கலந்து முழுவதையும் முரணியல்

ஓங்கினதாயாக்குவது. பொதுவாக எல்லா வகை எஃகுகளிலும் மாங்கனீஸ் சேர்க்கப் படுகின்றது பலவகைப் பணிகளுக்கு எடுத்த வகையினது மித ரக எஃகு (Mild Steel) எனப்படுவது. அதில் $98\frac{1}{2}$ சத வீதம் இரும்பும் 2/5 சதவீதம் கார்பனும் $\frac{9}{10}$ சத வீதம் மாங்கனீஸும் $\frac{4}{50}$ சத வீதம் அயிர்க்கையும் (ஸிலிக்கானும்) $\frac{4}{50}$ சத வீதம் பாஸ்பரஸும் $\frac{3}{50}$ சத வீதம் கந்தகமும் கலவையாகி இருப்பன.

சீனாவின் உள்நாட்டுப் பாங்கரிலிருந்து வருகிற டங்குஸ்டன் (Tungsten) என்ற உலோகத்தின் உருக்கு வெப்ப நிலை மற்ற எல்லா உலோகங்கள் பாற்பட்ட உருக்கு வெப்பநிலைகளைவிட மிக உயர்ந்தது. எஃகில் டங்குஸ்டன் சேர்க்கப்படின், மிக ஏற்றமான வெப்ப நிலையிலும் அவ்வகை எஃகு கடின மாறாது இருக்கும். அதி வேகமாய் சுழன்று கொண்டுள்ள உலோக அமைப்புக்களை சீவி வெட்டுதற்கென உபயோகிக்கப்படும் ஆயுதங்கள் அந்தரகமான எஃகால் பண்ணப்படுவன. மாலிபதனம் (Moly blenum) என்ற உலோகம் கலந்த எஃகும் கடினப் பாங்குக்கு பெயர் பெற்றது. அவ்வாறான எஃகு ரகம் உலோகக் கடசல் வேலைக்குத் தக்க ஆயுதங்கள் செய்யப் படுவதற்கு உகந்தவை.

செம்பு சேர்வான எஃகு வெளிக்காற்றுக்கு திறப்பாய் விட்டு வைக்கப்படினும் துருப்பிடிக்காமல் இருக்கும்; உரனையும் கடினப் பாங்கையும்கூட பெறுகிறது. டங்குஸ்டனுடன் விலை உயர்ந்த கோபால்டு (Cobalt) உலோகமும் கூட்டப்பட்ட எஃகு ரகம் முரணியல் மிகச் சிறந்ததாயிருக்கும். மேற்பரப்புக் கடினமுற்ற எஃகு இழைப்புக்குத் தக்க சீருடையதாயிருக்கும் பொருட்டு குரோமியத்துடன் அல்யூமினியமும் அதில் சேர்க்கப்படுகிறது. ஆண்டிஸ் (Hnades) மலையின்வர்பிடத்து சுரங்கங்களினின்று கல்லி எடுக்கப்படும் வனாதியம் (Vanadium) கலந்த எஃகினது ஈர்ப்பு மீள்விறல் தகவு மேன்மை யுறுகின்றது. அடிக்கடியாக மாறி மாறி இழுக்கப்பட்டும் தளர்த்தி விடப்பட்டும் வருகிறபடியான நிலைமையில் சாதாரண எஃகு சோர்வடைகின்றது; அதாவது மீள்விறல் தகவை சிறு பொழுதுக்கு இழந்து விடுகின்றது. எனவே, அவ்வாறான நிலைமை அடிக்கடி நேரிடும்படியான பொருந்தல்கள் பண்ணுதற்கு சாதாரண எஃகு தக்கதாகாது. சோர்வுறாமல் (Without Fatigve) இருக்க வேண்டுமான பிரமேயங்களுக்கு ஏற்ற எஃகு ரகம் வனாதியக்கலாவலான எஃகு வகையேயாம்.

எஃகு ரகங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியானவாறு உபயோகிக்கப்படலாம். தேவைக்குத் தக்கவாறு இரண்டாயினும் பலவாயினும் கலந்தபடியும் பயனாக்கப் படலாம். புது புது வகையினவான அளாவல் (Alloy) சேர்க்கைகள் ஒன்றின் பின் ஒன்றாய் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் அவ்வாறான வகைகளிலொன்று அறியப்பட்டமையினாலேயே, மிகவுயரத்தில் கடும் விரைவுடன் வயங்கவல்ல வளியேறுத் திகிரிகளை (ஏரோப்ளேன்களை)ப் பொருத்தல் ஒல்லலாயிற்று. கடல் மட்டத்திற்கு மேல் எட்டு மைல்கள் உயரத்தில் பறந்து திரியும் அத்திகிரிகள் கொண்ட விசைப் பொறிகள் (எஞ்சின்கள்) 'வன் கொட்பு செண்பாய்பரிகலிகள்' (Turbo Super Chargers) என்ற பெயரின. அவை, வெத்தணல்

வீசும் வெளியேறு வாயுக்களால் (Exhaust Gases) துரப்பப்படுவன எனவே, அவ்வாயுக்களின் அனலெறித்தும் அழற்சியை ஏற்றும் அவ்வமைப்புக்கள் உருக்குலேயாமல் செவ்வனே இயங்க வேண்டுவன. பல குழாய்களினின்று பீறிட்டுப் பாயும் வாயுக்களின் கடும் வீச்சு உறைத்து இயங்கும் எற்றிகை விசைப்பொறிகள் (Jet Engines) எனப்படும் அவற்றினது சுழலும் துடுப்புக்கள் Rotor) Blades) 1500 டிக்ரிக்கள் என்ற வெப்ப நிலேயினதையும் விடமிக்க அளவான சூட்டுக்கு உட்பட்டபோதுகூட, தளராமல் உழைத்தல் வேண்டும். சாதாரண ரகமான எஃகு எதுவும் அத்தகை ஏற்றமான வெப்ப நிலேயில் நெரிவுக்கு (Stress) உட்படின் நெகிழ்ந்து உருக்குலேந்து போகும். ஆயினும் அவ்வாறு ஆகாமல் இருக்கவல்ல உலோக அளாவலேப் பண்ணும் வழியை உலோகவுருக்கு விஞேர் (Metallurgists) கண்டு பிடித்திருக்கிருர்கள். அவ்வகை எஃகில் நிக்கல், குரோமியம், மாலிபதனம் என்றவையும் இன்னும் பல உலோகங்களும் கூட்டாய் இருப்பன.

தகடுகளாய் அடிக்கப்பட்டு சுருட்டப்படல், கம்பிகளாய் இழுக்கப்படல், பட்டடையிடல், இன்னேரன்ன தொழிற்படுத்தல்களால் எஃகின் உரம் சிறக்கின்றது. பழுக்கக் காய்ச்சின எஃகை சடீரென தண்ணீரில் போட்டு எடுத்து அதை கலிதப்பதனுக்கும் முறையைக் குறித்து முன்னர் கூறியுள்ளேன். எஃகைப் பதனுக்கும் முறைகள் பலவுள. படிப்படியாய் வெப்ப நிலே குறைந்து கொண்டுவரும் சூட்டில் வறுத்துப்பதனுக்கும் வழிகள் இருப்பன. இவற்றைத் தவிர, எஃகைச் சூடாக்காமலேயே, குளிர்வித்துப் பதன்படுத்தும் முறைகளேப்பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. மிகத் தாழ்ந்த வெப்ப நிலே வரையும் குளிர்வித்தற்கான சாதனங்கள் இந்நாளில் எளிதாய்க் கிடைக்கின்றன. உறைபனியின் வெப்ப நிலேக்கு 272 டிக்ரிகள் குறைந்தபடியான மிகுதட்பத்தை எய்தும் வழிகள் ஏற்பட்டிருப்பன. அங்ஙனமான குளிர்மிக்க நிலேமையில் பொருள்களின் அடிப்படை அமைப்பு முறையைக் காணும் நிரல்கள் பெறப்படுவன. எனவே, கடினம் — மெத்தென்ற தன்மை, பலம் — குபலம், முரண் — கொய்துத்தன்மை, இன்னேரன்ன தகவுகளுக்கும், பொருளின் மூலத்துகள் அமைப்பு அணிக்கும் (Molecular Structure) இடையான தொடர்புக்கள் திருத்தமாய்த் தெரியவருவன அவ்வழியே பெறப்படும் அறிவைப் பயன் படுத்தி தருவகையான எஃகைப் பண்ணும் முற்றுத் திருத்தமான வயவைகள் அடையப் படலாம்.

பலவாருன வியாதிகள் ஒவ்வொன்றையும் ஒட்டிய தக்க பரிகார முறைகளேக் காணும் திறமையுடைய கைதேர்ந்த வைத்தியர், அவ்வவ் வியாதியைக் கண்டிப்பதற்கு ஏற்றதன் மருந்துகளே குறிப்பிட்ட சீட்டு எழுதித் தருகிருர். அந்தச் சீட்டை மருந்து கலக்குவோனிடம் நீட்டிஞல். அவன் அம்மருந்துகளேத் தக்க தக்க அளவுகளில் ஊற்றிக் கலந்து அக்கலாவலே நமக்குக் கொடுக்கிருன். அவ்வண்ணமே எஃகுத் தொழிலும் வருங்காலத்தில் சிறப்புறும் என நம்பலாம். எஃகு உபயோகிக்கப்பட வேண்டிய காரியம் எது என்பதை எஃகுக் கலேவல்லோனிடம் (Steel) Expert தெரிவித்தால், அவன் அத்தேவைக்

குத்தக்க எஃகு ரகம் எந்த எந்த குணங்களுடன் எந்த எந்த அள வுகளுக்கு இருத்தல் நன்று என்ப தைக் கணக்கிட்டுக் கண்டு, அக் குறிப்புக்களை ஒரு சீட்டில் எழு தித் தருவான். எஃகுவினைஞனி டம் (Steel Worker) அந்தச் சீட் டைக் கொடுத்தால், அவன் அக் குறிப்புக்களை யொட்டிய தக்க ரகமான எஃகைப்பண்ணி வழங் குவான். அங்ஙனம் நமது தேவை க்கு முற்றும் பொருத்தமான எஃகுவகையைப் பெற்று நாம் திருப்தி அடையலாம். இத்திற மான முன்னேற்றம் எய்தின வண்ணம் எஃகுக்கலைத் தொழில் சிறந்தோங்கும் என் நம்பிக்கை யுடன் நாம் எதிர்நோக்குவோம்.

★

தங்கம்...!

(எச். வி. குமார்)

காலையில் கதிரோன் தோன்றும்
ககனவெளி யெல்லாந் தங்கம்!
சாலையின் அருகே நிற்கும்
தழைத்த நெல் வயலுந் தங்கம்!

ஆலமுண் டவன்தான் சூடும்
அழகிய கொன்றை தங்கம்!
ஞாலத்தின் இருளை நீக்கும்
நற்சுடர் ஒளியும் தங்கம்!

கதிரவன் மறையும் போதில்
கடற்கரை மணலுந் தங்கம்!
முதியரும் விரும்பி யுண்ணும்
முதிர்ந்த மாம் பழமும் தங்கம்!

மதி முகக் குழந்தை தன்னின்
மாசறு மனமும் தங்கம்!
நிதியெலாம் பெற்ற பெண்ணே!
நீயுமென் சொக்கத் தங்கம்!

பிலிப்பைன் தீவுகள்

[அ. சிங்கார வேலு]

பிலிப்பைன்ஸ் என்பது சற்றேறக் குறைய 7083 தீவுகளைக் கொண்டது. அவற்றுள் சுமார் 2400 தீவுகளே பெயருடையதாயிருக்கின்றன. இதில் 462 தீவுகள் சுமார் ஒரு மைல் விஸ்தீரணமுடையது. பெருந் தீவுகள் 11. இவைகள் ஒவ்வொன்றும் சுமார் 1000 சதுர மைல் விஸ்தீரணத்தைக் கொண்டவை.

1939ம் வருடத்திய ஜன சங்கியைக் கணக்குப்படி அதன் ஜனத்தொகை ஒருகோடியே அறுபது லக்ஷமாகும். லூஸான், மிண்டேனு, சாமார், நீடுரோஸ், பாலவன், லெயிடி, சிபூ, ஆகிய இந்தப் பெருந் தீவுகள் எல்லாம் ஒன்ருய் சேர்த்துப் பார்த்தாலுங் கூட, பிரிட்டிஷ் தீவுகளுக்கு ஏறக்குறைய சின்னதுதான். இவற்றின் விஸ்தீரணம் 1,14,000 சதுர மைல்களாகும்.

வடக்கிலும், மேற்கிலும் சைனுக் கடல். கிழக்கே பஸிபிக் மகா சமுத்திரம். தெற்கே சிலெபெங் கடல்.

பிலிப்பைன்ஸ், பொதுவாக, பெரும் மலைத் தொடர்களைக் கொண்டது. அதிகமான மலைகளைக் கொண்ட பிரதேசம் போன்றே காட்சி யளிக்கின்றது. 10,000 அடி உயரமுள்ள மலைத் தொடர்களும், இரண்டாவதாக மேயன் என்ற 7,900 அடி உயரமுள்ள மலைகளும் பிரசித்தமானது.

1939ம் வருடத்திய கணக்குப்படி அங்கு வாழ்பவர்களில் பில்பினேஸ் மட்டும் 15,833,649 பேர்கள். மற்றவர் பிற நாட்டினர்கள். இவர்களில் சைனக்காரர்களும், அமெரிக்கர்களும், ஜப்பானியர்களும் அதிகம் இருக்கின்றனர். அங்குள்ள பெரும்பான்மையான சைனக்காரர்களின் தொகை 117,487 ஆகும். இன்னும் ஜப்பானியர்கள் 30,000ம் பேரும், அமெரிக்கர்கள் 9,000ம் பேர்களுமாவர்.

பல்வேறு பாஷை, கலை, நாகரீகங்களைக் கொண்ட 43 ஜாதியினர் இருக்கின்றனர். அங்கே சுமார் 87 பாஷைகள் பேசப்படுகின்றன. என்ருலும் யுத்தத்திற்கு முன்வரை 'டாகலாக்' என்ற அவர்களது தேசீய பாஷையின் மூலமே பள்ளிகளில் போதிக்கப்பட்டு வந்தது. ஆங்கில பாஷையும், ஸ்பானிய பாஷையும் மத்திய பாஷையாகப் போதிக்கப்பட்டன. அரசாங்க நிர்வாகத்திலும், வியாபாரத் துறையிலும் அநேகமாக ஆங்கிலமும், ஸ்பானிய பாஷையுமே வழங்கப்பட்டு வருகிறது.

பிலிப்பைனரில் பெரும்பான்மையோர் ரோமென் கத்தோலிக்கர்கள், அங்கு முஸ்லீம்களும் மற்ற இனத்தினர்களும் இருக்கின்ருர்கள். அங்குள்ள முஸ்லீம்களின் தொகை 100 க்கு 5 சதவிகிதமாகும்.

கல்வி

இந்த தீவுகளில் 12,000 பள்ளிக்கூடங்களும், 439 பிரத்யேகப் பாடசாலைகளும், கல்லூரிகளும்

இருக்கின்றன. ஜப்பானிய ஆக்ர மிக்கு முன்வரை, பிலிப்பைன்ஸ் மக்களில் கல்வி கற்றோர் 100க்கு 48 பேர். அங்குள்ள மனிலா சர்வகலாசாலேயும், தேசிய சர்வ கலாசாலேயிலும் அமெரிக்க முறை யில் உயர் கல்வி அளிக்கப்படுகின் றது. முதலில், அங்கே கலாசாலே களிலும், பள்ளி நிலேயங்களிலும் போதிப்பதற்கு அமெரிக்காவிலி ருந்தே உபாத்தியாயர்களேக் கொண்டு வந்து நியமித்தார்கள். பின்னரே பிலிப்பைனரும் போதிக்க நியமிக்கப் பட்டனர். பெரும்பாலும் தேசியப் பாஷை யிலேயே பாடங்கள் போதிக்கப் படுகின்றன.

விளேபோருள்கள் :

அங்கு விவசாயத் தொழிலே அதிகம். அங்குள்ள விளே பொருள்கள் நெல், தேங்காய், சர்க்கரை, சணல், பருப்பு இவை களாகும். சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. சர்க்கரை உற்பத்தியில் உலகத்தில் ஐந்தாவது ஸ்தானம் வகிக்கின் றது பிலிப்பையன்ஸ்.

மலேகள் மட்டுமல்ல. பிலிப் பைன்ஸ் நிலத்திலே பாதிக்கு மேல் அடர்ந்த காடுகள். அதி லுள்ள உயர்ந்த மரங்களேக் கொண்டு மரச் சாமான்கள் செய்ய உபயோகிக்கின்றனர்.

அத்தீவுகள் மூங்கிலுக்கும், பெரம்புக்கும் பெயர் போனது. தேங்காய் நாரிலிருந்து கயிறு செய்து வெளிநாடுகளுக்கு ஏதேஷ் டமாக அனுப்புகின்ருர்கள். மணிலா கயிறு உலகப் பிரசித்த மானது.

இருபதாம் நூற்ருண்டின் ஆரம் பத்திலே, பிலிப்பைன்ஸில் வறுமைப் பேய் தலே விரித்தாடத் தொடங்கியதும், அரசாங்கத்தார் அவற்றைப் போக்க தொழிலும், தொழிற்சாலேகளுமே வழி என்ற றிந்தனர். மாபெரும் தொழிற் சாலேகள் கட்டப்பட்டன. வரு டம் ஒன்றிற்கு 15 லக்ஷம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யக் கூடிய பெரிய கருப்பு ஆலேகள் கட்டப்பட்டது. ஆகவே சர்க் கரை ஏற்றுமதி அதிகரிக்கலா யிற்று. அரசாங்கத்திற்கும் அதி னின்றும் நல்ல வருமானம் கிடைக்க ஹேதுவாயிற்று. நாட் டின் பொருளாதார நிலமையிலும் செழிப்புண்டாக்கியது.

பிலிப்பைனர்களே அமெரிக்கா வுக்கு அனுப்பி, தொழிற் கல்வி வரச் செய்தனர். அவர்களேக் கொண்டு தொழில் அபிவிருத் தியை நாளுக்கு நாள் உயர்த்த லாயினர்.

இரண்டாவதாகவே தேங்காய், இதர பொருள்கள் உற்பத்தி, ஏற்றுமதி என்று சொல்லலாம்

தாதுப் பொருள்கள் :

பிலிப்பைன் தீவுகளில் முக்கிய உலோகங்களான தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் ஆகியவைகள் சுரங்கங்களினின் றும் எடுக்கப் படுகின்றது.

ஏற்றுமதிகள் :

முக்கிய ஏற்றுமதிகளேப் பற்றி முன்பே சொல்லி விட்டோம். மற்றும், யுத்தத்திற்கு முன்வரை இரும்பு. எஃகு, பட்டு, பஞ்சு ஆகியவைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

தங்க நாணயமே நாணயச் செலாவணியாக இருக்கிறது. அங்கு செல்லும் யாத்ரீகர்கள் பிலிப்பைன்ஸ் 'கீழ ஸ்காட் லாந்து' என வர்ணிக்கின்றனர்.

அதன் அழகிய மலைகளும், நதிகளும், காடுகளும் கொண்ட அந்த அழகிய தீவுகளைப் பார்க்கப் பல தேசங்களிலிருந்து ஜனங்கள் போய்ப் பார்த்து வருகின்றனர். இயற்கையின் எழில்தான் என்ன. அதன் சௌந்தர்யம் அனைத்தையும் அங்கேயே ஸ்தாபித்து உலகை வந்து பார்த்துக் களிக்கச் செய்கின்றது போலும்.

மணிலாவுக்கும் அருகேயுள்ளது பாக்சானிஜன் நீர் வீழ்ச்சி. அங்கே ஜனங்கள் உல்லாசப் படகுகளிலும், நீர் வீழ்ச்சியின் குளிர்ந்த நீரிலும் – எவ்வளவு ஆனந்தமாக இன்புறுகின்றார்கள்! அதோடு மட்டுமல்ல. தென் இந்தியர்களையும், இலங்கை வாசிகளையும் காப்பி அடித்து பழச் செடிகளையும் பயிராக்கி, ஏற்றுமதி செய்யவும் ஆரம்பித்து விட்டார்களாம், அதுவும் அவர்களது முக்கிய ஏற்றுமதிகளில் ஒன்றாகி விட்டதாம். நல்ல நல்ல மாம் பழங்கள்; உயர்ந்த அருணசிப் பழங்கள் இவைகள் எல்லாம் நமக்குத் தெரிந்ததுதான். என்றாலும் அவற்றின் ருசியை நாம் எங்கே அனுபவிக்க முடிகிறது.

★

வித்தியாசம்

பையன்: அப்பா பசுவுக்கும், இந்தப் பால்க்காரருக்கும் என்ன வித்தியாசம்?

தந்தை: பசு பால் கொடுக்கிறது: இவன் பால் மட்டும் கொடுப்பது இல்லை.

பால்க்காரன்: இன்னொரு வித்தியாசம். பசு கடனாக ஊற்றுவது இல்லை.

★

பொறுமை தேவை!

[கோமதி சுவாமிநாதன்]

'சகலவித சமான்' சப்ளை கம்பெனி மானேஜர் அவர்களுக்கு, தங்கள் சாமான் ஜாபிதாவை ஆதியிலிருந்து அந்தம்வரை புரட்டிப்பார்த்தேன். குண்டூசியிலிருந்து குதிரைக் கொம்பு வரையிலும், சிமிக்கியிலிருந்து சிங்கக் குட்டி வரையிலும் தங்களிடம் தாராளமாயும் ஏராளமாயும் கிடைக்குமென்று விளம்பரப் படுத்தியிருக்கிறீர்கள். உயரத்தை அதிகமாக்குவோம்! உற்சாகத்தை வளர்த்துவோம்! கனத்தைக் குறைப்போம்! கன்னத்திலே கை வைக்கச் செய்வோம்! என்றெல்லாம் கூடச் சொல்கிறீர்கள். ஆனல் ஸ்வாமி! எனக்கு முக்யமாக வேண்டிய சாமான் ஒன்று, உமது ஜாபிதாவில் பூதக் கண்ணடி வைத்துத் தேடியும் அகப்படவில்லே. ஐயா! அந்த சமானிற்கு கண்ட்ரோல் இல்லே! பங்கீடு இல்லே! அப்படி இருந்தும் அதைக் காணும்! எனக்கு என்ன வேண்டும் தெரியுமா? பொறுமை! பொறுமை!! பொறுமை!!! அதைக் கண்ணிலேயே தட்டுபடக் காணுமே! அதுகூட கள்ளமார்க்கட்டிலே கொள்ளே லாபத்திற்கு விற்கப்படும் சரக்காக மாறிவிட்டதா?

அரிசிரேஷனுக்குப் போய்வர, ஆபீஸ் துரையிடம் வசவுகள் வாங்க, மில்துணி வாங்க, விறகுக் கடையில் மல்யுத்தம்போட, பஸ் ஸ்டாண்டில் நிற்க, பார்யையின் கோபத்தைத் தணிக்க, இவைகள் எல்லாவற்றிற்கும் எனக்கு பொறுமை தேவை!

எனக்கு அரிசி சப்ளை செய்யும் ரேஷன் கடைக்காரன் பூர்வாசிரமத்தில் மராமத்து இலாக்காவிற்கு ரஸ்தாக்கள் போட சரளேக் கற்கள் சப்ளை செய்யும் கண்ட்ராக்டராக இருந்தானும். அவன் எனக்கு இப்போது ஒரு மாதத்தில் கொடுக்கும் அரிசியிலுள்ள கல்லே வைத்து ராமேஸ்வரத்திலிருந்து ரிஷிகேசம் வரை முதல்தரமான கப்பி ரோடு போடலாம்! இந்தக் கல்லே வாரத்திற்கு ஒரு நாள் நான்கு மணி நேரம் காத்திருந்து வாங்கி வருவது பொறுமையில்லாமல் நடக்கக்கூடிய காரியமா? நீங்களே சொல்லுங்கள்.

எங்கள் ஆபீஸ் துரை நியூபவுண்ட்லாண்டிலிருந்து வந்தவர். அவர் ஜாதகப்பிரகாரம், அவருக்கு யாரிடமாவது வெள் வெள் என்று விழுந்து கொண்டே இருக்க வேண்டும். அதிலும் அவருக்கு என்னேக் கண்டால், குடிகாரனுக்கு, மதுவிலக்கு அமுலில் உள்ள இடத்தில் பிராந்தி பாட்டிலே கண்டதுபோல்தான்! ஒரே லொள் லொள்தான் வெள் வெள் தான். நானும் திருப்பிக் குலேத்து அவன் மேலேகூட விழுந்து கடித்து விடுவேன். ஆனல் ஸ்வாமி! இந்தப்பாழும் வயிறு இருக்கிறதே! தினசரி துரையின் ஆசீர்வாதத்தை வாங்கிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அதற்குப் பொறுமை வேண்டாமா?

மாதம் முதல் தேதி பிறந்ததும் சுளே சுளேயாக சம்பளத்தைக் கொடுக்கும் ஆபீஸ் துரைக்குக் கூட நான் அவ்வளவு மதிப்பு

வைப்பதில்லை. ஆனல் இந்தப் பாழும் பஸ் கண்டக்டர்களுக்கு நான் வைக்கும் மதிப்பு அளவு கடந்தது. பகீரதன் மாதிரி பஸ் ஸ்டாண்டில் தவம் கிடப்பேன். என்னைச்சுற்றி எவ்வளவோ பகீர தர்கள் இருப்பார்கள் பஸ் வந்து நிற்கும். தவம் கிடக்கும் பக்த கோடிகளை ஓர் அவதார புருஷன் பார்க்கும் தோரணையில். அவன் எல்லோரையும் ஏறிட்டுப் பார்ப் பான் "நோ சீட்" என்று எங் களுக்கு அபயப்பிரதானம் அளி த்து விட்டு அந்தர்தியானமாகி விடுவான். வெகுநாள் கழித்து வீட்டிற்குவரும் மாப்பிள்ளையை வரவேற்பதுபோல், முகத்தில் அச டுவழிய பஸ்வந்து நின்றதும், கண் டக்டர் முகத்தைப் பார்ப்பேன்; முதலில் கொஞ்ச நாள், நான் மாத்திரம்தான் அவனை அப்படிக் கெஞ்சும் பார்வையுடன் காக் காய் பிடிக்கிறேன் என்று நினைத் துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் திடீரென்று பின்னலிருந்த பகீரதர்களைப் பார்த்தேன். அடடா! கண் கொள்ளாக்காக்ஷி! சுமார் ஐம்பது பேர்கள், அசடு வழிய அவனையே பார்த்துக் கொண்டு அவன் தயவிற்கு ஏங்கி நின்றனர் அவ்வளவு அசட்டுத் தனத்தையும் ஒன்று சேர்த்தால் அமெரிக்காவிலுள்ள அவ்வளவு பேர்களுக்கும் தலா நாலு இஞ் செக்ஷன் செய்யலாம்! ஒரு மணி நேரம் காத்திருந்தும் இடம் கிடை க்காமல் நடந்து ஆபீசிற்கு ஒன் றரை மணி நேரம் தாமதமாகப் போய் நியூபவுண்ட்லாண்ட் துரை யிடம் சகஸ்ரநாம அர்ச்சனையைப் பெறுவதில் ஆச்சர்யம் ஒன்று மில்லை. ஆனல் அதற்கும் பொறு மைதான் வேண்டியிருக்கிறது!

சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து விழித்துப் பார்த்ததாக புராணங்களில் படிக் கிறோம். ஆனல் என் வாழ்க்கைப் புராணத்தில் என் சகதர்மிணி என்னை நோக்கி சுமார் நான்கு தடவை தன் நெற்றிக் கண்ணைத் திறக்கிருள். "ரிப்பன் வாங்கிக் கொண்டு வரவில்லையா? பிடி சாபம்! இன்று சினிமாவிற்குக் கூட்டிக்கொண்டு போக முடி யாதா? பிடிசாபம்!" என்கிருள்.

அவளுக்குப் பதில் சொல்லி, அதனல் அவள் பிறந்தகத்திற்குப் போய் விட்டால், ஹோட்டல் சாப்பாட்டினுல் என் வயிறல்லவா குட்டிச் சுவராகப் போகும்! என் உடலை நம்பி, என்னை இன் ஷூர் செய்ய அனுமதித்திருக்கும் கம்பெனிகளுக்கு நான் நம்பிக்கை துரோகம் செய்யலாமா?

இப்போது நீங்கள் எனக்கு பொறுமை எவ்வளவு தூரம் அவ சியம் என்று உணர்ந்து கொண்டி ருப்பீர்கள். என்னிடம் இது வரை இருந்த ஸ்டாக் தீர்ந்து விட் டது. ஆகையால் கொஞ்சம் புதுச்சரக்காக, உங்களிடமில்லா விட்டால் பக்கத்து கடையிலா வது வாங்கி எனக்கு உடனே 'பொறுமை' அனுப்ப வும். தகுந்த கமிஷன் கொடுக் கிறேன். உங்கள் சரக்கு சரி யான சமயத்தில் வரவில்லையோ அப்புறம் என் வீட்டில் ஒரே ரகளை தான்! எப்படி?

அரிசி வாங்காமல் வந்திடுவேன்
ஆபீஸ் போகாமல் நின்றிடுவேன்
அவளுக்குப்பதில் பேசிடுவேன்
ஆபத்தில் அகப்பட்டு விழித்திடு
வேன்

இப்படிக்குத் தங்கள்
வாடிக்கைக்கார
வாரகசாமி



★

" நீராடும் நல்லாரும், நெஞ்சில் களிபொங்கிச்,
சீராடும் ஆட்டைச் சினந்தீர்த்து—மார்போடு
அள்ளு அணைப்பாளும், ஆடை துவைப்பாரும்,
உள்ளம் கலங்தும் உழவோரும்....... "

" விசாகன் "

★





வாலிபருக்கு...

[ப. தனுஷ்கோடி]

"வாலிபருக்கு......" — என்று தலைப்பிட்டு எழுத வரும்போது நவ நாகரீகத்தில் மூழ்கி ஆடம்பர மாகத் திரியும் மைனர்களைப் பற்றியோ, மூடப் பழக்க வழக்கங்களை முதன்மையாகக் கொண்டு குடும்ப வாழ்க்கையை நாசப் படுத்தி வரும் தற்குறிகளைப் பற்றியோ, விவரித்து பக்கங்களையும், காலத்தையும் வீணாக்க விரும்ப வில்லை. சோறுகண்ட இடம் சொர்க்கம்; சொகுசு உள்ள இடம் தேவலோகம் என நினைக்கும் அவர்களைப்பற்றி சிந்திப்பதோ, எழுதுவதோ வீண்வேலை. சுயமாகவும் தெரியாது; சொன்னாலும் புரியாது; என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள். வாழ்க்கையிலே மேடு பள்ளங்களைச் சமப் படுத்திக்கொள்ளவோ, அபிவிருத்தியுடன் முன்னேறவோ அவர்களுக்கு கிஞ்சிற்றும் விருப்பம் இருப்பதில்லை. ராமனாண்டாலும், ராவணனாண்டாலும் சுயநலம் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு வாழ்பவர்கள். சுயநலத்திலும் குறைபாடுகளைத் திருத்தி பூரண சுயநலமிகளாகக்கூட வாழ நினைக்க மாட்டார்கள். ஆகவே கல் சுவரில் மோதி மண்டையை உடைத்துக் கொள்ள எனக்கு வெள்ளெழுத்தா?

பின் வாலிபர் என்றால் யார்? அவர்கள் வேலை என்ன? எப்படி இருக்கவேண்டும்? அவர்களைப் பற்றியுள்ள பணிகள் என்ன? பிணிகள் என்ன? இவற்றை மனோ தத்துவ ரீதியில் ஆராய்வதே என் முயற்சி. இதில் ஜாதி, மத பாகுபாடோ, பாஷை, கலாச்சார வித்தியாசங்களோ, இனம், நாடு பேதங்களோ இல்லை. எங்கும், யாவருக்கும் பொதுவாக உள்ள அம்சங்களைப் பற்றியே கவனம் செலுத்த விரும்புகிறேன். இந்த அடிப்படையில் பார்க்கும்போது ஒரு வீர எழுத்தாளர் கூறியது போல, "படமெடுத்தாடும் நாகப் பாம்பை ஒரு காலால் மிதித்து, ஒரு கையால் அதன் கழுத்தை நெறித்து, உயிரைப் போக்கும் வலிமை பெற்றவனே வாலிபன்!" என சொல்லலாம். வலிமை மட்டுமல்ல; தைரியம், தீரம், ஆற்றல் முதலியனவும் வேண்டும்.

அப்படியானல் மனிதனின் வயதைக் கொண்டு வாலிபத்தை நிர்ணயிப்பது பிசகெனப்படும். கட்டுக் குலையாத உருவ அமைப்பும், களங்கம் கொள்ளாத உள்ளக் கருத்தும், நெஞ்சம் கலங்காத அஞ்சா வீரமும், குறைவற நிறைந்திருப்பவர் வாலிபராவார். அவர்களின் சிந்தனை, போக்கு, லட்சியம், யாவும் வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும். அதாவது அரசியல் நோக்கில். எந்தக் கட்சியோ, சங்கத்தையோ பற்றி வாதப் பிரதிவாதம் செய்ய வரவில்லை. வாலிபர் என குறிப்பிடும்போது "வாலிபர் சங்கங்களில்" உள்ளவர்களையே குறிக்கும் என்பதற்காகச் சொல்ல வந்தேன். ஆக அவ்வாலிபர்களிடையே நிலவும் மனோபாவமும், தோல்விகள், இடையூறுகள், நிவர்த்தி ஆகியவை பற்றி ராஜீய விவகாரமில்லாமல் சிறிது கவனிப்போம்.

தனக்குப் பிடிக்காத ஒரு காரியத்தை தன்னைச் சேர்ந்தவன் செய்து விட்டான் என்ருல், எப்படியாவது அவனை மடக்கி முன்னேற வொட்டாமல் செய்யும் மனோபாவம் சகஜமாகக் காணப்படுகிறது. மற்றவனுக்கும் அபிப்பிராய சுதந்திரம் உண்டு என மதிப்பதில்லை. தன்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் மடையர்கள் என்பது அவர்கள் முழு நம்பிக்கை. பார்க்கப் போனல் "லீடர்ஷிப்" என்று சொல்லக் கூடிய தலைமைப் பதவி எங்கு குறைந்துவிடுமோ என்ற அச்சம், அவர்களைச் சதா வாட்டுவது புலப்படும். சிறிய வாலிபர் சங்கம் முதல், மாகாணசபை, அகில இந்திய ஸ்தாபனம், உலக கௌன்ஸில்வரை கூட இந்த சின்ன புத்தி மனோபாவம் கொண்டவர்களால் பல தீமைகள் விளைகின்றன. அரசியல் "டிக்டேட்டர்ஷிப்" என்பது ஒரு வகை. மேல் நாடுகளில் சகஜமாக இச்சொல்லை உபயோகிக்கிருர்கள். தமிழில் அதற்கு "சர்வாதிகார மனப்பான்மை" என்று பொருள் வருகிறது. ஆனல் இந்த அர்த்தம் பயங்கர மானதாயும், பிடிக்காததாயும் நமக்குப் படுகிறது. நேர்மை குன்ருமலிருந்தால் உண்மையில் அது அப்படி ஒன்றும் கெட்டவஸ்து அல்ல.

தலைவராகவோ, பிரதம மந்திரியாகவோ ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, தனக் குறியவர்களை கமிட்டியாகவோ – மந்திரி சபையாகவோ அமைத்துக்கொள்கிருர் அது தவறு. "அபிப்பிராய பேதமுள்ளவர்கள் பலர் கூடினல் தான் எதிர்க்கட்சி மனப்பான்மை இருந்தால் தான் நிர்வாகம் நீதியாக நடைபெறும்!" என பறைசாற்றுவது வீண் பழிச் சொல். குற்றம் குறை கூறுவதை மொத்தமாகக் கூறினல் நியாயத்தைக் கவனித்து சீர்திருத்த முடியும். ஒவ்வொரு வார்த்தைக்கும் – வாக்கியத்திற்கும், அபிப்பிராய உரிமைகளை வற்புறுத்தும் அல்ப புத்தி படைத்தவர்களை பலவந்த நேசமாகக் கொண்டு என்ன காரியத்தைச் சாதிக்க முடியும்? இளமையில் தோன்றி சிசு மரணமடையும் அனேகமாயிர வாலிபர் சங்கங்களின் நிலைமை இதுதான்!

எதையும் விவாதித்து முடிவு செய்ய வேண்டும் என்பது ஒரு வகை வாதம். ஆனல் சாதாரண மானவர்கள், உப்பு, புளி, ரஸத்தைக் கூட விவாதித்து வெற்றி காண்பவர்களாகத் தெரியவில்லை. ஒரு சின்ன விஷயத்தில் கூட, இருதரப்பும் சம்மதிக்கும்படி பேசி முடிவு செய்ய முடியவில்லை என்ருல், அதன் பெயர் விவாதமல்ல! வெறும் தர்க்கம்! விதண்டாவாதம்! அதுமட்டுமல்ல; சாமர்த்திய மில்லாத மூர்க்கத்தனம்! யாராவது ஒரு விஷயத்தைப் பற்றித் தீவிரமாக தர்க்கம் செய்து கொண்டிருக்கும் போது, கொஞ்சங்கூட அதில் கலந்து கொள்ளாமல் விலகிநின்று கவனித்தால் ஒரு உண்மை புலப்படும். அதாவது பேச்சில் சூடு கண்டவுடன் – பேசுபவர்கள் ஆவேசம் கொண்டவுடன், பேச்சில் ஒழுங்கு மறைந்துவிடும். நியாயம் – நேர்மை மறந்துவிடும். சொல்லிலே பொய்யும், போலி பாதுகாப்பும், சப்பைக் கட்டுகளும் ஏற்படும். இதனல் நிஜமாகவே நியாயம் உள்ள கட்சியை பேசினவராயிருப்பினும், வாதத்தில் தோல்வியடைவார். மனிதனுக்கு – வாலிபருக்கு இதைவிட அவமானம் வேறென்ன வேண்டும்? இதனல் தான் பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினல் மெய்யாகும் என்

றும், மெய்யுடை ஒருவன் சொல் லின்மையினல் பொய்யனுகிருன் என்றும் வழங்கிற்ருே?

ஆனுல், அரசியல் – சீர்திருத்தம் முற்போக்கு, நோக்கம் கொண்ட வர்களெனச் சொல்லிக் கொள்ள விரும்பும் வாலிபர்களுக்கும் இது விதியாகுமா?

சிலசமயங்களில் அதிகமாக விவாதிப்பதே பலஹீனத்தின் அடிப்படையாக முடிந்து விடு கிறது. பேசிப் பேசி ஒரு காரி யத்தைச் சாதிக்கலாம் என்பதோ பேசுவதாலேயே ஒரு முடிவை ஸ்திரப்படுத்திவிடலாம் என்பதோ தவருகவே முடிகிறது. அனேக விஷயங்களில் – பிரச்சினைகளில், மௌனம் தேடிக் கொடுக்கும் பாதுகாப்பு, – நன்மை – மற்றதில் இருப்பதில்லை. காரணம், வெளிப் படும் கருத்துக்களை உணர்ந்து மதிப்பிடக் கூடியவர்கள் சமூகத் தில் மிக மிகக் குறைவாக இருப் பதே. "மௌனமா யிருப்பதும் ஒரு செயல் தான்" என காந்திஜி ஒரு சமயம் கூறியுள்ளார். "மௌனம் சர்வார்த்த சாதகம்" என ஸம்ஸ்கிருத ஸ்லோகம் முழங் குகிறது. ஆனுல் இதை ஆதாரமா கக்கொண்டு "பேசாமடந்தை" யாகி விடக் கூடாது. அவசிய மான சந்தர்ப்பங்களில், பொறுக் கான கருத்துக்களை தயக்க மின்றி வெளியிடும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவேண்டும். பிறர் தவரு கக் கருதுகிருர்கள்—வியாக்யானப் படுத்துகிருர்கள் என்னும் போது கூட, "ஊமைக்கோட்டான்" மாதிரி விழிப்பது அறிவு சூன்யத் தைத் தான் விளம்பரப் படுத்தி விடும். அல்லது அகம்பாவி–கர்வி என்ற அபாண்டத்தைச் சுமத்தும். ஆக மௌனமோ, விவாதமோ கச்சிதமாக லயம் தெரிந்து பிர யோகிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது வாலிபர் களிடையே பரஸ்பர மரியாதை யும், நல்லுணர்ச்சியும் பரவி, எடுத்த காரியத்தில் வெற்றி பெறும் வழியை அடைவார்கள்.

விவாதம் செய்யும் முறையை இந்தக் காலத்து வாலிபர்கள் அவ் வளவாகப் பெற்றிருக்கிருர்கள் என்று சொல்வதற்கில்லை. ஒரே லட்சியம் உள்ள இருவர் அதைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் கூட, மணிக்கணக்காக தர்க்கம் செய்து கொண்டே போகிருர்கள். கார ணம் என்ன? சொல்லக் கூடியவர் பதிலளிப்பவர் உணரும்படிச் சொல்லத் தெரியாததாக இருக்க வேண்டும். அல்லது சொல்பவரே புரிந்து கொண்டு பேசாதவரா யிருக்க வேண்டும். "மழை பெய் தது; பாதை சேறும், சகதியுமாக இருக்கிறது; நடக்கவே முடிய வில்லை; இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?" என்பது ஒரு வர் கேள்வி. இதற்கு "ஆம்; இல்லை" என்று சுருக்கமாகப் பதி லளிக்கலாம். அல்லது "அவ்வளவு சேறில்லை; சுமாராக நடந்து செல்லமுடியும்" என்று காரண முடன் கூறலாம். இது விவேக முள்ள வாதம். ஆனுல், அப்படி நேராகப் பதில் சொல்வது தன் புத்திசாலித்தனக் குறைவைக் காட்டும் என்று கருதி, "அப்படி யானுல் அதற்குக் காரணம் முனிஸிபாலிடியார்தான்! சுய நலப் புலிகளும், சோம்பேறி களும் வோட் வாங்கி பதவிக்கு வந்து விடுகிருர்கள்!" என்று வாதத்தை விரிவு படுத்துகிருர்கள் பலர். முனிசிபாலிடியைப் பற்றி யோ, வோட் விவகாரம் பற்றி யோ முதலில் கேட்டவர் நினைத் துக்கூட இருக்கமாட்டார். ரோ ஷத்தைக் கிளப்பிவிடும் இவ்வித

தவருன பாதையில் திரும்பி விடுவதால் பலவாலிபர்கள் அனுவசியமாக – அனுவசிய மான பிரச்னைகளை மேலே போட்டுக் கொள்கிருர்கள். பிறகு அவஸ்தைப் படுகிருர்கள்.

ரொம்ப நேரம் பேசி ஓய்ந்த பிறகு, "இதைத்தானே அப்பவேயிருந்து நான் சொன்னேன்!" என்பதோ, "இதை ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தால் இத்தனை தர்க்கமே இருந்திருக்காதே!" என்பதோ, பேச்சின் வரைமுறை தெரிந்து பேசியதாக எப்படிக் கூறமுடியும்? காலத்தை பேச்சை – அறிவை – திறமையை, விரயம் செய்து சேதமாக்குவதைத் தவிர இதில் வேறென்ன இருக்க முடியும்? பேச்சுக் கெல்லாம், பதில் பேசிக் கடைசி வார்த்தையாக முத்தாய்ப்பு வைக்கும் உரிமை தன்னிடம் இருப்பதுதான், தானடைந்த வெற்றிக்கு அடையாளம், என்று நினைப்பது சரியானதே அல்ல! வாலிபர்கள் தமது முற்போக்கு சங்க எண்ணங்களை விரிவாக அலசி ஆராய்வது நல்லதே. ஆனல் அதில் குறுகிய வட்டத்தில் அலைந்து திரிவது பிற்போக்கிற்கே இழுத்துச் செல்லும். பலமாகப் பேசுவதாலோ, குத்தலாகக் கிண்டல் செய்யத் தெரிந்து கொண்டதனலோ, அறிவு வெற்றி பெற்றதாகக் கூற முடியாது. குடும்ப – சமூக வாழ்வில் நிலவும் மூட மரியாதைகளும், பழக்க சம்பிரதாயங்களும் கூட அப்படியே வாலிபர்களிடையே நிரவியிருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது ஞான சூன்யமேதான்!

கட்டுப்பாடான வேலைத் திட்டம்; தினசரி ஒழுங்கு தவருத நடைமுறைகள்; குறிப்பிட்ட லட்சியத்தைக்காணும் பெரு நோக்கு; இவை வாலிபர்களின் அஸ்திவாரம் அப்படி என்ருல் சதா ஏதாவது வேலைசெய்து கொண்டே யிருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. ஓயாமல் உழைப்பது உடலை மட்டுமின்றி, உள்ளத்தையும் பலஹீனப் படுத்தும். சரீர ஆரோக்கியத்திற்கு ஓய்வும் – விளையாட்டும் மிக்க அவசியம் என்று, தத்துவ தர்சிகளும், புலவர்களும் கூறியிருக்கிருர்கள். ஆனல் அதே சந்தர்ப்பத்தில், பொழுதை வீணுக்காதே!" என்று எச்சரிக்கப் பட்டிருப்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. கண்ட இடத்தில் கண்ட நேரத்தில் அரட்டை யடிப்பதையே தொழிலாக – வழக்கமாகக் கொண்டிருப்போர்களை, சிறந்த குணசாலிகள் என்று கூற முடியாது. குஷிப் பேர்வழிகளாக இருப்பார்கள், திட காத்திரர்களாக இருப்பதை வைத்திய சாஸ்திரம் ஒப்புக்கொள்ளுகிறது. ஆனல், "வாழ்க்கை முறையை பொறுப்புடன் திட்டமிட்டுக் கொள்ளாதவன், வெறும், தோன்றி மறையும் மனிதப் பிண்டமாகத் தானிருக்க வேண்டும்." என்று பிறவிப் பயன் உணர்த்துகிறது.

வாரத்தில் ஒருநாள்–அரைநாள், பொழுதை வீணுக்குவதற்கென்றே நான் ஒதுக்கி வைப்பதுண்டு. சீட்டாட்டம், சில்லரை வம்பு முதலியவைகளை அச்சமயத்தில் நிறைவேற்றிக் கொள்வது வழக்கம். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" என்ற தத்துவத்திற்கும் இது அவசியமாகிறது. தனித்து நின்று கர்வமடையும் தன்மை தாஞக இதனல் மாற்ற மடைகின்றது. இது அவசியமும் கூட. மற்ற வேளைகளில், மற்ற வேலைகளை, குறித்தது குறித்தபடி செய்து கொண்டுபோக பயிற்சி

வேண்டும். பெரிய ஞானியாவ தற்காக இதை நான் கூறவில்லை. ஒழுங்கு முறை உடைய எவரும் உயர்ந்த எண்ணங்களுடன் விள ங்க சந்தர்ப்பங்களுண்டு, என்ப தற்காக இதில், நம்மை யறியாம லேயே இடையில் சில சமயங் களில் சோர்வும், சோம்பேறித் தனமும், நம்மைக் கவ்விக் கொள் வதுண்டு. அதற்காக வருந்துவதில் பயனில்லை. ஒரு காரியத்தை ஒரு நேரத்தில் செய்ய உத்தேசமிட்ட பின், போதிய காரணமில்லாமல், அதை மாற்றும் வலிவற்ற சுபா வத்தை தான் நாம் வெறுக்க வேண்டும். பிறரின் வற்புறுத்தல் தாட்சண்யத்திற்காகவோ, விளை யாட்டு மனம் படைத்தோ, இலட் சியத்தை சுலபமாகத் தளர விடு வது தவறு.

பொதுவாக பள்ளிப் பிள்ளை களாக இருக்கும் போதே, பத்தி ரிகை அறிவும், பொதுநலப் பற்றுதலும் வாலிபர்களின் மன தை ஆகர்ஷித்து விடுகின்றன. பசுமை மாறாத உள்ளங்களிலே பரவும் இத்தகைய சேவா உணர் ச்சி இக்காலத்தில் மிகமிக மலிந்து இருப்பது, நல்ல காலத்திற்கு அறி குறிதான். படிக்க முடியாத சிறு வர்களும் கூட, ஏதேனும் ஒரு துறையில் பொதுஜன சேவை செய்ய ஆர்வம் கொள்கின்றனர். எதிர்காலம் விழிப்பு – வெளிச்சம் கொண்டிருப்பதற்கு பல தலைவர் களது உழைப்பும், தியாகமும் தான் காரணம் என்பதில் ஐய மில்லை. பூமியின் வசீகரண சக்தி யைப் போல், மகாத்மாக்களின் மோகன காந்தி மக்களை பொதுப் பாதைக்கு இழுக்கிறது. தெரு வுக்கு ஒரு சங்கம் தோன்றுகிறது. ஜாதிக்குஒரு கழகம் அமைகிறது. வர்க்கத்திற்கு ஒரு இயக்கம் வளரு கிறது. கட்சி, தீவிரகட்சிகள் முளைத் தெழுகின்றன. இவை யெல்லாம் வரவேற்கத் தக்கவை; பாராட்டத் தக்கவை. பிற்போக் கோ, முற்போக்கோ, வீறுடன் எழும் வாலிப மலர்ச்சியின் அழ கை ரஸிக்கத் தெரியாவிடில் மனி தனே அல்ல. ஒவ்வொன்றும் சுய நம்பிக்கையுடன், நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு, உரிமைப்போர் நடத்த உதயமா கிறது. உண்மை யுள்ளது நிலைக் கிறது; போலி தானுக மறைகிறது. இதில் பேத மெதற்கு?

"அவரவர் கொள்கை – கட்சி அவரவருக்கு! இதில் சொந்த சினேகம்–உறவு கெடுவானேன்?" என்று பரந்த அநுபவமுடன் பல ரும் பேசக் காணலாம். ஆனல் அப்படி நடப்பவர்கள் மிகமிகக் குறைவே. மாமனர் தேசீயவாதி; மருமகன் சுயமரியாதைக் காரன்! தந்தை மிதவாதி; மகன் தீவிர வாதி! பள்ளித் தோழரில் ஒருவர் வைதீகம்; மற்றவர் சீர்திருத்தம்! இப்படிப் பிரகாசிப்பது இந்நாட் டில் அதிசயமே அல்ல. ஆனல் யார் எதைச் சார்ந்தவராயினும் "பொது நோக்கம்" கொண்ட வர்கள் என்ற மரியாதையைச் செலுத்த ஒருபோதும் மறந்து விடக்கூடாது. சொந்த செல் வாக்குள்ளவர்கள்தான் கட்சி பேதத்தை முன்னிருத்தாமல் கூடி விளங்குகிருர்கள். எவ்வளவு பெரிய அறிவாளி யாயினும், பிர முகராயினும் இரு கட்சிகளில் உள்ள ஒருவர்க் கொருவர் சுய அறிமுகம் இல்லாத ஒரே காரணத் திற்காக மட்டமாக மதிப்பிடுகி ருர்கள். இதை என்ன வென்று சொல்வது? எப்படிக் கண்டிப் பது? எந்த விதத்தில் திருத்துவது?

எது எப்படி யிருப்பினும் வருங் காலம் வாலிபர்களுடையது;

அதைத் தவிர்க்க முடியாது என்பதை ஒவ்வொருவரும் மறந்துவிடக்கூடாது. ஒரு குழந்தைக்குத் தகப்பனாகிவிட்டவன், பல குழந்தைகளுக்குத் தகப்பனாக மாறுவது அதிசயமல்ல! ஆனால் ஆயுளைப்போல – வாழ்க்கையைப் போல, வயோதிகமோ, மூப்போ அடைவதல்ல வாலிப உணர்ச்சி குலைவிட்ட வாழை மரம். மறுபடி தார் விடாது. வாழையடிவாழையாக வரும் கன்றுதான் மீண்டும் பூத்து காய்க்கும். இளமை எண்ணங்களும் அப்படித்தான். ஒளி மங்காதவரை, ஒழுக்கம் குன்றாத வரை சிறப்பு கொடுக்கும். சிறுமை, சில்லரைப் பேச்சு, இன்னும் காம, குரோத, தீமைகள் முதலான முற்போக்கு வாலிபத்தை அணுகாது. கேவலமான விஷயங்களைப்பற்றி சிந்திப்பதற்கே, பொதுப் பணியிலீடுபட்ட வாலிபர்களுக்கு அவகாசம் இருப்பதில்லை. அரசியலில் இருந்து கொண்டு, பணம் கையாடல்– பெண் சோரம் புரிதல் முதலிய ஊழல் உள்ளவர்கள் இல்லையா எனலாம். உண்மைதான். ஆனால் அவர்கள் நிஜமான பற்றுதலுடன் சங்க வாழ்க்கைக்கு வரவில்லை என்றுதான் அர்த்தம். அவர்கள் கெட்ட சுபாவமுடன், கௌரவமாக நீடித்து இருக்க முடியாது. ஆகவே அதற்காக வாலிபத்தையோ, சங்க – கூட்டுறவு மனப்பான்மையையோ, இழிவு படுத்துவது முறையல்ல. வீடு வேகிறது என்றால் அது தீயின் குற்றமல்ல; வீடு, காய்ந்த ஓலைக் கூரையாக இருப்பதின் தவறுதான்!

காதல் முதல், போர்க்களம் வரை, ஆட்சிபுரிவது உள்பட வாலிபத்தைப் போற்றாத கவிகள் இல்லை; காலமில்லை; அறிஞர்களில்லை. இன்றைய இளைஞர்கள் அவற்றை முறையாகக் கொள்ளாததும், சரியாக நடக்காததும் தான் வலி விழந்திருப்பதற்குக் காரணம். உலகப்போக்கும், காலப்போக்கும், இன்றுள்ள வாலிபர்களைவிட, வருங்கால இளைஞர்கள் எண்ணத்திலும், செயல் புரியும் ஆற்றலிலும், எண்ணிக்கையில் மிகவும் மிகுந்து இருப்பார்கள. சமூகத்திலே புரையோடிய மூடச் செயல்களும், ராஜீயத்திலே வேரோடியிருக்கும் சுய நலங்களையும் உணர்ந்து களைந்தெறிய நிச்சயம் அவர்களால் முடியும்.

வாலிபர்கள் வருக! வளர்க!! வாழ்க!!! வெல்க!!!!

★

கருப்பு மார்க்கட்

சிறு குற்றம் செய்தவர்களை தூக்கிலிட்டால் பெரிய குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வார்கள்.

— டச்சுப் பழமொழி

நண்பருக்கு...

[வி. கிருஷ்ணன்]

நண்பரே!

நாமிருவரும் எப்படி எவ்வாறு சிநேகம் பூண்டோம் என்பதையும், உங்களுடைய மேன்மையான உள்ளம் எப்படி வாடி வதங்கி தவிக்கிறது என்பதையும், என் காடு முரடான சுபாவம் தங்களை எவ்வித கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாக்குகிற தென்பதையும் முடிவில் நமது மாபெரும் நட்பு களங்கப்பட்டு எந்த அளவில் கொண்டு விடப்பட்டிருக்கிற தென்பதையும் சென்ற கடிதத்தில் கூறியுள்ளேன்.

நம்மிருவருக்கு மிடையே யுள்ள பெரிய போராட்டம்—இந்த போராட்டம் தங்களுக்கு மெனக்கும் எப்படி உருவாகியது என்பது மட்டும் தெரியாது—ஆனல் நம்மிருவர் மனதிலேயும் ஆழம் காணுத அன்பு அழுந்திக் கிடப்பதையும், நமது நட்பின் போராட்டத்தை விளக்கிக் கூறவும், தங்களுடைய உயரிய குணங்களேயும், என்னுடைய கேவலமான அற்ப செயல்களேயும் விளக்கி கூறவே இக் கடிதத்தை வரைய லானேன். ஆகவே பயமில்லாமல் தைரியமாகவே ப்டித்துப்பாரும்!

அன்பரே! ஆச்சரியப்படும் அளவிலேதான் நாமிருவரும் பழகினேம் அல்லவா? எவ்வளவுக் கெவ்வளவு அதிக அன்பு கொண்டு ஒரே சகோதரர்கள் போல் உறவு கொண்டோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம்மிருவர் மனமும் அஞ்ஞாத வாசத்தில் உழன்று வருகிறது. இதை தாங்கள் மறக்கவும் மறுக்கவும் மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

ஆம், இன்று நினைத்தாலும் என் மனதைக் கொல்லும்—உருக்கும் மறக்க முடியாத ஒரு சோகக் கதை சொன்னீர்களே ஒரு நாள் நினைவிருக்கிறதா? அன்று ஒரு நாள்—ஆரம்ப இரவிலே—நடுத் தெருவிலே—நாட்டின் நீதி மன்றத்தருகிலே—நாலுபேர் உலாவும் உல்லாசப் பூங்காவிலே—வாடிக்கையின் அடிச்சுவட்டிலே நின்று, "நண்பர்களுக்காக என் உழைத்த பணத்தை யெல்லாம் பணயம் வைத்துவிட்டு ஊசலாடிக் கொண்டிருக்கிறேன்" என்று வாழ்வை வெறுத்து அன்பனுகிய என்னிடத்தில் கூறினீர்களே நன்ருக நினைத்துப்பாரும். ஒரு விநாடி ஆர அமர இருந்து—மூளையைக் கொஞ்சம் குளிரப்பண்ணி விட்டு—சாந்த ரூபத்தில் இருந்து தீர்க்கமாக யோசித்துப் பாரும். நினைவிருக்கிறதா? அந்த ஓர் இரவு அமாவாசையை யொட்டியதோர் அந்தகாரம். மழையின் தூரல் லேசாக பன்னீர் கொட்டுவது போல் தூறிக்கொண்டிருந்தது. நிலமெல்லாம் ஒரே ஈரம். அந்த ஈரத்தையும் பொருட் படுத்தாத நாம்—ட்யூட்டி ஆமாம்—ட்யூட்டி தான் (கேவலம் வயிற்றுப் பிழைப்பிற்காக மனிதர்களின் எச்சிலிலேயே உழன்று எச்சிலிலேயே இன்பங்காணும் ஒரு சாதாரண வேலை என்று உலகம் இந்த தொழிலை சாக்கடைக்கு சமமாக நினைக்கும் இந்த வேலைதான்) முடிந்ததும் ஊரை சுற்றப் புறப்

பட்டோமல்லவா? அப்போது என்னென்னமோ வெல்லாம் – நமது வாழ்வின் பெருமைகளை யெல்லாம் — வருங் காலத்திற்கு எப்படி அஸ்திவாரம் அமைக்க லாம் – என்பது போன்ற சம்பாஷணைகளை அள்ளிக் கொட்டி அளந்து கொண்டோமே?

நானும் இரக்க மனதுடன் உங்களது மாசு படிந்த வாழ்வின் அடிச்சுவட்டை அலச ஆரம்பித்தேன். உங்களது கதையை, நண்பரே, நன்றாகக் கவனத்துக்குக் கொண்டுவாரும். நீங்களே, உங்களது அருமை வாயால் மனமுருகி சொன்ன இருண்ட வாழ்க்கைக் கதையை நான் மிகவும் கவனமாகவும், பரிவுடனும் கேட்டேன். உள்ளம் கசிந்தேன். உங்களது இருண்ட வாழ்க்கையையும், அதில் எப்போதாவது சிறிது ஒளி வீசாதா என்ற ஏக்கம் நிறைந்த பார்வையையும் சற்றே ஆலோசித்தேன்.

தங்களது நிர்க்கதியான – அனாதரவான – நாதியற்ற நிலைமை என்னை மேலும் குருடனாக்கியது. உங்களது நிலையைக் கண்டு மனம் கசிந்து உருகின நாட்கள் அனந்தம் உண்டு. நண்பரே, சந்தேகப் படாதேயும்! தங்கள்பால் கொண்டுள்ள இரக்க முள்ள நெஞ்சத்தால்தான் இப்படிக் கூறுகிறேனே யல்லாது வேறு புகழ்ச்சியை கருதியோ, அல்லது எனது எழுதும் திறமையாலோ அல்ல. உண்மையிலேயே தங்களுடைய நன்மையை மனதில் கொண்டே நான் பல சந்தர்ப்பங்களில் உங்களது செய்கைகளை கண்டனம் செய்திருக்கிறேன்.

அன்று நீதி மன்றத்தருகிலே – உல்லாசப் பூங்காவிலே சொன்ன நியாய வார்த்தைகளும், உறுதி மொழிகளும் – லக்ஷிய புருஷர்களாகத் திகழ்வோம் என்று மார் தட்டி பேசிய பேச்சுக்களும் இன்று காற்றில் பறந்து போய் ஊசலாடிக் கொண்டிருக்கிறது! நிசம் தானே அன்பரே!

தங்கள் பால் இரக்கமும், அபிமானமும் கொண்ட நான் நீங்கள் வழிதவறி செல்லும்போது சில புத்தி மதிகளை சொல்லுவது வழக்கம். 'நீர் என்ன அய்யா எனக்கு புத்தி சொல்ல வருவது, எனக்குத் தெரியாதோ? போய்யா வேலையை பார்த்துக் கொண்டு நீர் பெரிய மேதாவியா?' என்று அலட்சியமாகச் சொல்லாமல் நான் சொன்னவற்றை சில சமயம் வாஸ்தவம் என்றும், சில சமயம் அசாத்தியம் என்றும் கருதினீர்கள். உங்களை உடை விஷயத்திலோ, குளிக்கும் விஷயத்திலோ – சிறிய விஷயங்களிலோ குறை சொல்ல வரவில்லை நான். உங்களது இச்சைக்குகந்த சுதந்தர வாழ்வில் குறுக்கே நிற்கவுமில்லை. என் அபிப்பிராயப் படியே எல்லா வஷயங்களிலும் பின்பற்ற வேண்டும் என்றும் சொல்ல வில்லை.

நானும் பரிகாசமாக இரண்டொரு வார்த்தைகள் தங்களை கேட்டிருக்கலாம். ஆனால் அது நிரந்தரமான தல்ல. நான் தங்களை கெட்ட எண்ணத்துடன் – உங்களை கெடுக்கும் நோக்கத்துடன் ஒரு விஷயமும் சொல்ல வில்லை – செய்யவுமில்லை. இதை உங்கள் பரிசுத்தமான இதயம் அறியுமென்று நம்புகிறேன்.

தங்களை கெடுத்து குட்டிச்சுவராக்கவோ, தங்களது பணத்தை வாரிச் சுருட்டி ஏப்பம் விட்டு விடவோ – தங்களது அறிவைக் குலைத்து நட்டாற்றில் விடவோ

நான் தங்களுடன் சிநேகம் செய்து கொள்ளவில்லை.

ஆசை வார்த்தை பேசி—அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று ஆணவம் பேசி — கிடைத்ததை சுருட்ட தங்களுடன் சிநேகம் செய்து கொள்ளவில்லை.

உதட்டிலே உற்சாகமும், உள்ளத்திலே நயவஞ்சகமும் — வெளியிலே வெள்ளையும், உள்ளே கருப்பும் கொண்டு எந்த வழியில் எப்படி ஏமாற்றி பணம் பறிக்கலாம் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டு தங்களோடு சிநேகம் செய்து கொள்ள வில்லை!

இனிய வார்த்தைகள் பல பேசி, இன்பங்காணும் பல செயல்களைக் காட்டி ஆசையுடன் உங்கள் உள்ளத்தையும் சரீரத்தையும் களவாடிச் செல்லும் கயவன் கூட்டத்தவன் அல்லன் நான். இதற்காக நான் சிநேகம் செய்து கொள்ளவில்லை.

பகட்டிலும், மினுக்கிலும்தான் காலம் செல்லுகிறது. நியாயத்திற்கும், நேர்மைக்கும் இதுவல்ல காலம்! நண்பரே! சாக்கிரதையாக இந்த பரந்த உலகில் பழக வேண்டும். எப்போதும் உள்ளன்பும், தூய்மையான பக்தியும், உயர்ந்த எண்ணங்களும்தான் வேண்டும். இதை மறவாதேயும்.

நான் சொல்லும் ஆலோசனைகளை சில சமயங்களில் நீங்கள் புறக்கணித்து 'ஏதோ சில வார்த்தைகளைக் கொட்டி விட்டதும் உண்டு.' இருந்தாலும் நண்பர் என்ற முறையில் அவைகளை மனதில்வைக்காமல் மறந்து மன்னித்து விட்டேன்.

தங்கள் மனதில் என்னைப் பற்றி எவ்வித எண்ணமோ? யார் கண்டது? நான் தங்களை இன்றும் நண்பராகவே கருதி காரியங்கள் செய்து வருகிறேன் — ஆனல் தங்கள் போக்கு நண்பர் என்ற முறையிலிருந்து விலகி சக தோழிலாளி என்ற முறையில் தான் போய்க் கொண்டிருக்கிறது.

ஒரு மரத்தில் பெரிய பெரிய கிளைகள் நிறைய இருக்கின்றன. ஆனல் சில சில அசௌகரியங்களுக்காக வேண்டி அந்தக் கிளைகளை வெட்ட வேண்டி வருகிறது. அப்படி வெட்டித் தள்ளுவதால்— மரத்திற்கே பெரிய கெடுதி ஒன்று மில்லை யல்லவா? மரம் மேலும் செழித்தோங்கி வளருகிற தல்லவா? அதுபோலவே ஏதோ சில காரணங்களுக்காக நாம் பேசாமல் இருந்தாலும் அதனல் நமது மாபெரும் நட்பிற்கே கெடுதல் வந்து விட்டதென்றோ அல்லது நமது மாபெரும் நட்பே அழிந்து விட்டதென்றோ நிச்சயம் செய்து விட முடியுமா?

மரமும், செடியும், கொடியும், நிழலும், காற்றும், மழையும் எப்படி மனிதனுக்கு எவ்வித பிரதி பிரயோசனத்தையும் எதிர் பார்க்காமல் நன்மை செய்து வருகிறதோ, அதேபோல் நாமும் பிறருக்கு நம்மாலான சேவையை செய்ய வேண்டி கூடிய விரைவில் ஒன்று சேருவோம். தனிப் பெரும் தமிழ் நாட்டிலே — தமிழ் அரசு வேண்டி — தமிழ்ப் பெரும் மக்களாகிய நாம் — தமிழ்த் தொண்டு செய்ய கூடிடுவோம் விரைவிலே. தமிழ்க் கலை — தமிழ் இசை, தமிழ் மறை, தமிழனின் நாகரீகம், தமிழனின் கலா சாரம் முதலியவைகளை உலகெங்கும் பரப்பி — வெற்றி எட்டு திக்கும் முரசு கொட்ட ஒன்று சேருவோம்.

★

கைதியின் காதலி

[அரு. பாபநாசம்]

19252

வான வீதியிலே மேக அணங்கின் அணைப்பிலே இருந்தான் மதியம்.

அவன்......?

ஒரு கைதி.

உண்மையில் அவன் கைதியல்ல அவன் ஒரு அரச குமாரன்......... காலச்சுழல் அவனை அப்படி ஆக்கி விட்டது.

இப்பொழுது அவன் தப்பிச் செல்லுகின்ருன் ஒருவருக்கும் தெரியாமல். "டக் டக்" பின்னல் குதிரைக் குளம்புகளின் சப்தம். அது அந்தக் காட்டினில் எதிரொலியைக் கிளப்பி விட்டது.

ஆம், அவர்கள் தப்பிய கைதியைப் பிடிக்க வருகிருர்கள். கண்ணியிலிருந்து தப்பிய புருவை பிடிக்க வரும் வேடன்போல!

அவன் மனம்?......

கடிகாரத்தின் பெண்டுலத்தை விட படபட வென அடித்தது.

தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவன் ஒரு புற்றின் பின்னல் பதுங்கிக் கொண்டான்.

அவர்கள் அந்த இருட்டில்?......

தேடிப்பார்த்தார்கள்.

ஆனல்?......

அவனைக்காண முடியவில்......

முயற்சி வீண்............திரும்பி போனுர்கள் வந்த திசையை நோக்கி. அவன் ஒரு பெருமூச்சு விட்டான். அவன் மனதினை அழுக்கியிருந்த பயம் அவனைவிட்டு சிறிதகன்றது.

அவன் மீண்டும் நடக்க ஆரம்பித்தான்.

அவன் நடையில்?......

விறுவிறுப்புக் காணப்பட்டது.

சிறிது நேரத்தில்?......

அவன் கடக்கவேண்டிய எல்லையைக் கடந்து விட்டதாக உணர்ந்தான். இனிமேல் அவர்கள் அவனைப் பிடிக்க முடியாது. அவன் மனத்தீவு மகிழ்ச்சிக் கடலால் சூழப்பட்டது.

அவன் கால்கள் சோர்ந்தன... அப்படியே கீழே படுத்தான்.

சிறிது நேரத்தில்?......

அவனை நித்திரா தேவி அணைத்துக் கொண்டாள்.

1

அவர்களிருவரும்?......

சக்ரவர்த்தியும், சுதேக நாட்டு மன்னனும்......

அவர்களிடையே?......

பொருமை குடிகொண்டிருந்தது.

சக்ரவர்த்தி விதேக நாட்டு மன்னன், சுதேக நாட்டு மன்னனை நோக்கி அவன் நாட்டின் ஒரு

பகுதி அவனுக்குச் சொந்தமென்று சொன்ஞன்.

அதை அவன் தரமுடியாதெனச் சொன்ஞன்,

அதன் பலன்?......

இருவர் உள்ளத்திலுள்ள விரோதம் மிகவும் கொழுந்து விட்டெரிந்தது. தீப்பிடிக்கும்போது வாயுபகவான் துணையிருந்தால் எப்படி நெருப்பு அதிகமாகுமோ அதுபோல!

போர் தொடங்கினரிருவரும்.

போர்க்களம் குருதி வெள்ள மாகியது......

ஒரு நாள்?......

கலிங்கமன்னன் மகன் மகத நாட்டில் மாறுவேடம் பூண்டு உளவு அறியச் சென்ருன்.

ஆனல்?......

அவன் கைதியாக்கப் பட்டான்; விதேக மன்னனல்......

இதைக்கேட்டான் சுதேக மன்னன்.

அவன் சீற்றம் எல்லையைக் கடந்தது.

ஆனல் அவன் தோற்கடிக்கப் பட்டான்.

அவன் ஓடி விட்டான் எங்கேயோ?

ஒரு நாள்?...

இருவர் கண்களும் சந்தித்தன....

சிறையில் வதங்கிக் கொண்டிருந்த கலிங்க மன்னன் மகனை விதேக மன்னன் — சக்கரவர்த்தி அவனைப்பார்க்க வந்தான்.

அவளுடன்?...

ஒரு அழகிய அணங்கும்கூட வந்தாள்?......

அவள்?......

மிகவும் அழகுடையவளாக இருந்தாள்.

அவன் தன் விழி அம்பை அவள்பால் செலுத்தினன்.

அவளும் தன் விழி அம்பை செலுத்தினள்.

விழி அம்பு ஒன்றையொன்று மோதின.

அந்நேரத்தில்?......

"மல்லிகா! பார்த்தாயா இவனே. இவன் யார் தெரியுமா?" என்ற மன்னன் குரல் அவர்கள் விழி அம்பு போட்டியைத் தடுத்தது.

'யாரென்று தெரியவில்லையே?' விழி அம்பை மறுபடியும் அவள் செலுத்தி யாழினுமினிய குரலில் கேட்டாள்.

"இந்த அயோக்கியப் பயல் அப்பன்தான் நம்மை எதிர்த்தது ஆனல் சிங்கத்தை எதிர்க்க முடியுமா சிறு நரி?"

"அப்படியானல் இவர் சுதேக மன்னன் புதல்வரா?"

"ஆமாம்"

"இங்கே எப்படி இவர் வந்தார்?"

"இவன் நம்ம நாட்டில் உளவறிய வந்தான். ஆனல் நம் வீரர்கள் இவனைப் பிடித்து கைதியாக்கினர்கள். புலியிடம் அகப்பட்ட மான் தப்ப முடியுமா?"

அவன் உள்ளம்?......

கொதித்தது. அவன் மட்டும் வெளியிலிருந்தால், அவனைக் கீறிக் கொன்றிருப்பான்; பருந்து தன்னிடம் அகப்பட்ட எலியைக் கீறுவதுபோல!

ஆனல் அந்தச் சிறைக் கம்பிகள் அவனைத் தடுத்தன.

"பார்க்கிறதேப்பார் — பார்க்கிறதை. இவனை நாம் பார்க்கக் கூடாது — வா போவோம்" என்ருன் விதேக மன்னன்.

"சரி" என்ருள் தேனினுமினிதாக அவள்.

அவள் சென்ருளே ஒழிய மனதை அவன்பால் விட்டுச் சென்ருள்.

அவனும்?......

அவளுடன் தன் மனதை அனுப்பி விட்டான்.

இருவர் உள்ளத்திலும்?......

காதல் வித்து நடப்பட்டது.

அவள் சென்ருள் அரண்மனைக்கு உயிரை விட்டு கட்டையைச் சுமந்து செல்பவள்போல!

மாலை நேரம் வந்தது.

கொடிய வாள்போல அவள் உள்ளம் தகித்தது.

மதியம் யாவர்க்கும் குளிர்ந்த திரை வீசினன். ஆனல் அவளுக்கு மட்டும் வெப்பக் கதிரை வீசினன். அவள் விஷயத்தில் மட்டும் பாரபட்சம் காட்டுபவன்போல் தென்பட்டான்.

அவள் கண்கள் வானை நோக்கியிருந்தது.

பின்னால் பூனைபோல் நடந்து வந்தாள் தோழி!

ஆனால் அவள் எண்ணம் ஒரே இடத்தில் லயித்திருந்ததால் அவள் வருவதை அவளால் அறிய முடிய வில்லை.

அவள் கண்கள்?......

மறைக்கப்பட்டன.

"யார்?" என்று அவள் கேட்டாள்.

"நான் தானம்மா" தோழியின் பதில்.

"ஓஹோ! நீயா" என்றுளவள். மீண்டும் அவளுள்ளம் சிந்தனையில் மூழ்கியது.

"ஏனம்மா நீங்களொரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்றுள் தோழி.

அதற்குப்பதில்?......

அவள் மனப் புற்றிலிருந்து சீறியது பெருமூச்செனும் பாம்பு.

"ஏன் அம்மா, காரியத்தை என்னிடம்கூடவாக் கூறக்கூடாது?"

"தோழீ! நான் சொல்வதை நீ வேறொருவரிடம் கூறக்கூடாது"

"சரி"

'நம் சிறையிலிருக்கிறுரல்லவா?'

"ஆமாம், சுதேக மன்னன் குமாரன் கனகன். அவருக்கென்ன?"

"அவர்பால்............" நாணத் திரை அவள் வார்த்தையை மறைத்தது.

"அவர்பால் என்னவம்மா?"

"அவர்பால்...... என் மனதைப் பறி கொடுத்து விட்டேனடீ" என்று கூறிவிட்டு ஓடிவிட்டாள் சோலைக்கு.

அவளுடன்?......

தோழியும் பின் தொடர்ந்தாள்.

"இதற்குத்தானு அம்மா! நான் உங்களிருவரையும் இணைத்து வைக்கிறேன். போதுமா?" என்றுள் தோழி — முல்லைச் செடியில் முல்லைச்சிரிப்புடன் வெட்கிச் சாய்ந்திருந்தவளிடம்.

"தோழீ! நீ அதைச் செய்துவிட்டால் உனக்கெது வேண்டுமென்றுலும் தருவேன். முதலில் அவரை நான் சந்தித்துப்பேச வேண்டுமே"

"அதற்கு நாளைக்கே ஏற்பாடு செய்கிறேன்"

"சரி"

அவர்கள் பேச்சு முடிந்தது.

மல்லிகா மனதில்?......

ஒரு மகிழ்ச்சி. மறு நாள் தன் காதலனைப் பார்க்கப் போவதாலோயென்னமோ?

மறுநாள் இரவு......

சிறைக்கதவு "தடா" ரென்ற சப்தமுடன் திறந்தது.

அவன்?......

அவன்தான் சுதேக மன்னன் மகன்.

தன் அறைக்கதவு திறப்பதைக் கண்டு வெளியில் நோக்கினன்.

அவன் கண்டது?......

அவன் மனதைக் குழப்பிய மங்கை. அவளுடன் ஒரு தோழியும் வந்திருந்தாள்.

அவளும் மல்லிகாவும்?......

ஒருமாதிரியாக நோக்கினர்கள்.

ஆனல் அந்த நோக்கில்?......

எண்ணற்ற பொருள்கள் பொதிந்திருந்தன.

"இளவரசே" என்ற தோழியின் குரல் அவன் பார்வையை தடைப்படுத்தியது.

"யார் நீங்கள்?" தெரியாதது போல அவன்.

"இளவரசே! இவள்தான் விதேக நாட்டு மன்னன் மகள் மல்லிகா! நான் அவள் தோழி"

"அதற்கென்ன?" அவள் குரலில் அலக்ஷியம் தென்பட்டது.

சிறிது நேரத்தில்?......

அவனையறியாமல் அவளை ஏன் அப்படிக் கேட்டுவிட்டோமென்று தோன்றியது.

"தங்கள் மீதிவள்......"

"தங்கள் மீதிவள் என்ன?"

"தங்கள் மீதிவள் காதல் கொண்டுவிட்டாள்" என்று முடித்தாள் ஒரு மாதிரியாக.

"ஐயையோ எந்தன்மீதா? நானோ அவள் தந்தையின் விரோதியின் மகன். எனக்கு வேண்டாமிந்த தொல்லை"

ஆனல்?......

உள்ளுக்குள் ஆசைதான். எந்தப் பூனையாவது பால் வேண்டாமென்று கூறுமா?

"இல்லை தாங்கள் கிருபை கூர்ந்து இவளை ஏற்றுக் கொள்ள வேண்டும்"

அவன் பேசவில்லை. அவளை மட்டும் நோக்கினன்.

அந்த நோக்கில்?......

அவன் சம்மதித்து விட்டதாகத் தெரிந்தது.

தோழி அகன்ருள்.

அந்தச் சிறைச்சாலையில்?......

அவளும் அவனுந்தான்.

அவர்களிடையே?......

மௌனம்......

அவன் அவளை நோக்கும் பொழுது அவள் விழி அம்பை கீழே செலுத்துவாள்.

ஆனல் அவன் நோக்காதுபோது அவள் அவனையே நோக்குவாள்.

கடைசியில்?......

அவனே பேச ஆரம்பித்தான்...

"மல்லிகா ஏன் நிற்கிருய்? வேண்டுமென்ருல் உட்கார்ந்து கொள்ளேன்"

"இல்லை!"

அவன் தன்னிருக்கை விட்டு எழுந்திருந்து அவள் அருகே வந்தான்.

"மல்லிகா!" அந்தக் குரலில் காதல் தொனித்தது.

"ஏன் சுவாமி!"

"அன்புக்கனி கொண்டு பிழிந்த கனிரசம் காதல்......ஆனல்?......

"ஆனல் என்ன சுவாமி!" அவள் வார்த்தையில் பரபரப்புக் காணப்பட்டது.

"மாங்கிளையிலே இரண்டு கிளிகள் கட்டுப்படுத்துவார் யாருமின்றி காதல் களிப்பில் கொஞ்சலாம்..... ஆனல் கூண்டிலடைபட்ட ஒரு கிளியுடன் கட்டுப்பாடில்லாமல் திரியும் ஒரு கிளி கொஞ்ச முடியுமா?"

அவள்?......

அதன் பொருளை அறிந்து விட்டாள்.

"அதற்கென்ன இன்னும் இரண்டு தினங்களில் தப்பிப் போகலாம். ஆனல்?......

"ஆனல் உன்னை மறக்க மாட்டேன். உன்னையே மணப்பேன் இது சத்தியம்"

"சரி நேரமாகி விட்டது. நான் போய் வருகிறேன்"

"மல்லிகா!"

அவர்களிருவர் முகமும் நெருங்கியது......

காதலின் ஆரம்பத்திற்கு அஸ்திவாரக்கல் அது......பிரியமனமில்லாமல் பிரிந்தாளவள்.

அவனுக்கும்?......

அவளைவிட்டு பிரியமனமில்லை.

அவள்?......

மானெனத்துள்ளி ஓடி விட்டாள் அந்த இருட்டில்.

மீண்டும்......

சிறைக்கதவு அடைக்கப்பட்டது அவனை உள்ளே தள்ளி.

அந்த இரவில்?......

அவன் மட்டும் உறங்கவில்லை. அவன் கனக்குட்டையில் சிந்தனை அலைகள் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தன.

2

இரண்டு நாள் கழிந்தது.

சிறைக்கதவருகே ஒரு வீரன் தோன்றினன்...

"இளவரசே" என்ருனவன், அவன் வீரனக இருந்தாலும் அவன் குரலில் பெண்மை தொனித்தது.

சிந்தனையிலிருந்த அவனுக்கு?...

சிந்தனை சிதறியது. அறுந்து வீழ்ந்த முத்து மாலையிலுள்ள முத்துக்கள் மூலைக்கொன்று சிதறுவது போல!

"யார் நீ!"

"நான்தான் தெரியவில்லையா?"

அவன்?......

அந்த அறையிலிருந்த சிறு விளக்கால் அவனைப் பார்த்தான்......

அந்த வீரன்?......

மல்லிகா!......

"மல்லிகா ஏன் இந்தக்கோலம்"

"உங்களை விடுவிக்க இந்த கோலம்"

"என்னையா? உன் தந்தைக்குத் தெரியாதா?"

"தெரியாது. அவரை மது மோகத்தில் ஆழ்த்திவிட்டேன்... சரி, நேரமாகி விட்டது. உம், புறப்படுங்கள்"

அவன் வெளியே வந்தான்.

ஒரே இருட்டு......

அந்த இருட்டில் அவள் அவன் கையைப் பிடித்துக் கொண்டு சென்ருள்.

அந்த தளிர்க்கை?......

அவன் மனதை ஏதோ செய்தது......

அவர்கள் போய்க் கொண்டேயிருந்தார்கள்......

முடிவில்?......

வெளியுலகை அவன் கண்டான்

"நீங்கள் போய் விடுங்கள் விரைவாக"

"எப்படிச் செல்ல? எனக்கு வழி தெரியாதே"

"நேராகப் போங்கள். அங்கே ஒரு வாய்க்காலுண்டு. அதன் பின் ஒரு காடு, அதைக் கடந்து விட்டால் தங்களுக்குப் பயமில்லை.

சீக்கிரம்........."

அவன் புறப்பட்டான்......

"நில்லுங்கள்" என்ற குரல் அவனை நிற்க வைத்தது.

"என்னை மறந்து விடாதீர்கள்"

"மறப்பேனா"

அவள் கரத்திலிருந்த கணையாழியைக் கழற்றி அவன் விரலில் போட்டாள்; அன்பின் அறிகுறியாக!

கடைசி வார்த்தை?......

அவர்களிருவர் அதரங்களும் பேசிக்கொண்டன.

அவன் போய் விட்டான் மனதைக் கட்டுப்படுத்தி.

அவனுக்கு இருட்டில் வழி காட்ட வானத்தில் மதியம் தோன்றினான்.

அவள்?......

அவன் செல்லுவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். பின் திரும்பினாள்.

"தப்பி விட்டான் கைதி" யென்ற குரல் கேட்டது. உடனே வீரர்கள் எழுந்தார்கள்.

குதிரை மீதேறினார்கள் தப்பி விட்ட கைதியைப் பிடிக்க......

3

அப்பொழுதுதான்?......

நமது கதையின் ஆரம்பத்தின் படி நடந்தது.

அவன்?......

நித்திரா தேவியினணைப்பிலிருந்து விடுபட்டான்.

காலை ஆகி விட்டது...கதிரவன் உதித்தான்.

அவன் சுற்று முற்றும் பார்த்தான்.

அவனது நாடு இன்னும் சிறிது தூரத்திலேயே இருப்பதைக் கண்டான்.

அவன் மனம் மகிழ்ச்சியால் பொங்கியது.......எழுந்திருந்தான்.

நடையைக் கட்டினான்......

அவனது இராஜ்ஜியத்தினுள்ளே புகுந்தான்.

அங்கே அவன் கண்டது என்ன?......

மக்களனைவரும் துயருற்றிருந்தார்கள்.

மழைகாணாச் செடிபோல வாடியிருந்தார்கள்.

இவனைக் கண்டதும்?......

மழை நீர் துளிக்கப் பெற்ற தளிர்போலானார்கள்.

உடனே?......

அவனுடன் படை திரண்டது... மக்களனைவருடைய உள்ள எரிமலையிலிருந்த தேசீயக் கனலின் ஒரு பொறி அது.

கைதியை விட்டு கவலையுற்றிருந்த விதேக நாட்டரசனிடம் போருக்கு வருவதாக தூதன் அனுப்பினான்......

அவனும் சம்மதித்தான்.

அதன் பலன்?......

இருவர் சேனையும் மோதின...

மலையும் மலையும் மோதுவதுபோல படைகள் மோதின......

முதல் நாள் போரில்?......

விதேக 'நாட்டுப்படை' சிதற டிக்கப்பட்டது......

அன்றே விதேக நாடெனும் மண்டபத்துக்குத் தூணாக இருந்த சேனாதிபதி வீரகேசரி இறந்தான்.

அரசனுள்ளம் உடைந்தது.

மறு நாள் போரில்?......

விதேக நாட்டு படை முழுதுமே சிதறடிக்கப்பட்டது.

கடைசியில்?......

விதேக மன்னரை சமாதானத் துக்குத் தூண்டினார்கள் மந்திரி கள்......அவனுக்குக்கும் சமாதா னமே சரியென்று தென்பட்டது.

அதன் பயன்?......

இரண்டு நாட்டிடையில் சமா தானம் ஏற்பட்டது......இருவரும் நட்பானார்கள்......

எண்ணற்ற மக்கள் இறப்பதை விட அன்பு எதையும் வெல்லு மென்று அறிந்தார்கள்.

சமாதானத்தின் அறிகுறியாக?

மல்லிகாவை மணம் செய்து கொடுத்தான் விதேக மன்னன்.

மணமான மறுநாளிரவில்?......

இருவரும் சோலையில் சந்தித் தார்கள்.

"மல்லிகா! நீ யென்னை எப்படி விடுவித்தாய்?" என்றானவன். அவன் மலையெனத் திரண்ட தோளில் சாய்ந்து கொண்டிருந்த மல்லிகாவிடம்.

"என் தோழி அந்தக் காவ லாளை மயக்கி விட்டாள். அவர் கள் அவள் மேலே ஆசைகொண்டு அவள் போன இடத்துக்கெல்லாம் போனார்கள். அப்பொழுதுதான் நான் உங்களை விடுவித்தது......அவ ளில்லாவிட்டால் நாம் இப்படி இருக்க முடியாது"

"ரொம்ப கெட்டிக்காரி நீ" என்றான் அவன்; அவள் கன்ன த்தை தட்டிக்கொண்டு.

அவன் அவளை அணைக்கப் போனான்......அந்த சமயத்தில்?...

இவர்கள் இன்ப வாழ்வை காண சகிக்காது சந்திரன் மேகத்தினு ள்ளே மறைந்து கொண்டான்...

"விடுங்களென்றால்!" என்று அவன் பிடியிலிருந்து விலகிக் கொண்டோடினாள்.

அப்பொழுது அவன்வாய்?......

யாழடி ! நீயெனக்கு — அதிலெழும்
இசை நானுக்கு

என்று முணுமுணுத்தது.

அவர்கள் வாழ்க்கைப்பாதை?...

ஏதோ சொல்ல முடியாத இன் பத்தை நோக்கிச் சென்று கொண் டிருந்தது.........

★

[தமிழ் பழமையும் புதுமையும்: ஆசிரியர். ந. சி. கந்தையா பிள்ளை விலை: அணு எட்டு. முத்தமிழ் நிலையம் சென்னை.]

சரித்திர, ஆராய்ச்சி வழியாகவும், பல மேலை நாட்டு ஆராய்ச்சித்துணையுடனும் பல அரிய நூல்களைத் தமிழகத்திற்குத் தந்துதவிய தமிழறிஞர் திரு, ந. சி. கந்தையா பிள்ளையவர்கள் இந்த நூலில், மொழியின் தோற்றம், தமிழின் பழமை, தமிழென்னும் பெயர்க் காரணம் தமிழ்ச் சங்கம், சமஸ்கிருதத் தோற்றம் முதலிய பல சிறந்த தலைப்புக்களில் அருமையாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். தர்க்க ரீதியான முறையில் தமிழின் சரிதை பல அறிஞர்களால் சிந்திக்கப்படும் இக்காலத்தில் இந்த நூல் ஒரு சிறந்த முயற்சியாகும். நவீன முறையில் தமிழைப் பற்றிய அறிவு வேண்டுவோர்க்கு மிக இன்பமூட்டும் பந்தர்கர், ஹெரஸ், எஸ். கே. சட்டர்ஜி, ஆர்தர் தாம்சன் முதலிய ஆராய்ச்சியாளரின் கருத்துக்கள் ஆங்காங்கே கீழ்க் குறிப்புக்களாக ஆங்கிலத்தில் தரப்பட்டு ஆசிரியரது ஆராய்ச்சிக்கு உறுதுணையாக நிற்கின்றன இந்த வழியில் இன்னும் பல நூல்களை ஆசிரியர் தந்து ஓர் புதுமைப் பணியைத் தமிழுக்கு ஆற்றுவாரென நம்புகிறோம்.

[இராவணன் வித்தியாதரனா? ஆசிரியர்: புரொபசர் எ. சக்கரவர்த்தி. எம். எ. ஐ. இ. எஸ் விலை அணு 0—6—0 முத்தமிழ் நிலையம் சென்னை.]

வித்தியாதரர் என்பவர் யாவர்? எனும் ஆராய்ச்சியிலிறங்கி, சிறப்பாகச் சமண இலக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு பல சிறந்த செய்திகளை நமக்கு எளிமையாகத் தருகிறார் திரு, சக்கரவர்த்தியவர்கள். சூடாமணி, சிந்தாமணி, பத்ம புராணம், மொஹஞ்சதாரோ, ஹராப்பா புதை பொருள்களில் கிடைத்த ஆராய்ச்சிச் செய்திகள் முதலிய வன்மையான ஆதாரங்களை வைத்துக் கொண்டு வித்தியாதரர் யார்? அவர் வரலாறு யாது என அழகாக ஆராய்ந்து, பண்டைய திராவிடரே வித்தியாதரர் எனப்படுபவர் என்றும், அவர்களின் சிறப்பியல்பும் பண்பாடும் எவ்வாறு மிக்குயர்ந்தன என்றும் அழகாகக் கூறுகிறார். வட நூல்களால் குரங்கெனவும் பிறவகையிலும் இழித்துக் கூறப்பட்ட இனத்தவர் வித்தியாதரர் எனும் திராவிடரே எனச் சாதிக்கிறார். சமண நூல்கள் பற்றிய பல இனிய செய்திகள் சுருக்கமாக இதில் காணப்படுகிறது. ஆராய்ச்சி முறைமைக்கு நன்கு பயன்படும் இனிய சிறிய புத்தகம்.

"கே. சி. எஸ். எ."

தொடர் கதை:

மல்லிகைமொக்கு

தா. நாகலிங்கம்

அத்தியாயம் பதினொன்று

இரண்டு பெரிய ரோஜா மாலைகளைத் துதிக்கையில் ஏந்தி இருபுறமும் இரண்டு யானைகள் நிற்க, மிகப்பெரியதாக மலர்ந்த ஒரு தாமரை மலரிலே மந்த ஹாசத்துடன் வீற்றிருக்கும் லக்ஷ்மியின் படம். அந்தலக்ஷ்மிக்குச் சமர்ப்பித்த தான திருப்தியுடன் அந்தப் படத்தின் சட்டங்களுக்குப் போடப்பட்டிருந்த கதம்பத்தொடர். அதற்குக் கீழே ஒரு சிறிய மணையின் மேல் தகதக என்று பொன் போல் பிரகாசிக்கும்படி விளக்கி மெருகூட்டிய அழகிய வெண்கலக்குத்து விளக்கு. அதன் முகங்களிலெல்லாம் குங்குமம் இட்டு தலையில் ஒரு மலர்க் கொத்தும் வைக்கப் பட்டிருந்தது. ஐந்து முகங்களிலும் திரியிட்டு அவை மணிச்சுடர் சிந்தி நின்று ஒளி வீசின. அதனெதிரில் மண்டியிட்டு நமஸ்காரம் செய்த சுமதி நிமிர்ந்து அந்தச் சுடரொளியைத் தன் கண்ணொளியால் ஏற்று கரம் குவித்து வணங்கினாள். குத்து விளக்கின் அடியில் சிதறிக் கிடந்த மலர்களில் இரண்டை எடுத்து தன் கூந்தலில் சொருகினாள். தேங்காய் பழத்துடன் கற்பூரத் தட்டிலிருந்த திருநீற்றில் கொஞ்சம் எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டாள். பின் கற்பூரத் தட்டை எடுத்துக்கொண்டு அன்னம் போல் நடந்து முன்புற ஹாலுக்கு வந்தாள்.

ஒரு சோபாவில் சாய்ந்தபடி சுந்தரேசன் அன்றைய காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"பேப்பர் படிச்சாச்சா?" என்றாள், சுமதி தன் கையிலிருந்த கற்பூரத் தட்டை அவனுக்குத் தெரியாமல் பின்புறமாக மறைத்தபடி.

"ஆச்சு, இன்னும் ஒரு பக்கம் தான் பாக்கி" என்று சொல்லிக் கொண்டே அவள் பக்கம் திரும்பியவன், அவள் பின்புறமாகக் கையில் எதையோ மறைத்து வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு, "அதென்ன

அது, மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாய்? எனக்கு இல்லையா?'' என்றான்.

''ஊஹூம்! இது உங்களுக்குப் பிடிக்காத வஸ்து. அதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். சரி, வாருங்கள். காப்பி சாப்பிடலாம்'' என்று சொல்லியபடி பின்னால் இருந்த தட்டை முன்புறத்திற்குக் கொண்டு வந்து இரண்டு அடி முன்னே வைத்தாள்.

வைத்தகண் வாங்காமல் அவளைக் கவனித்துக் கொண்டிருந்த சுந்தரேசன், அவள் திரும்பியதும் அவள் கையிலிருந்த பிரசாதத் தட்டைப் பார்த்து முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''டேயப்பா; இந்தப் பிரமாதத்துக்குத்தான் அப்படி மழுப்பினாயோ. முன்னமேயே அதைப் பற்றிச் சொல்லியிருந்தால் அதைக் கண்ணாலே கூடப் பார்த்திருக்க மாட்டேனே!'' என்றான் சுந்தரேசன், முகத்தை ஒரு புறம் திருப்பிக் கொண்டு.

''நான் தான் முதலிலேயே சொன்னேனே, உங்களுக்குப் பிடிக்காது என்று, அதிலேயே நீங்கள் புரிந்து கொள்ளா விட்டால் அதற்கு நானா ஜவாப்தாரி?'' என்று ஒரு கேள்வியை உதிர்த்து விட்டு பழையபடி சுந்தரேசனைத் திரும்பிப் பார்த்தாள் ஒரு வெற்றிச் சிரிப்போடு.

''அது தொலையட்டும். இப்படி வா. ஒரு முக்கியமான விஷயம்.'' என்றான் சுந்தரேசன் கையிலிருந்த பேப்பரை மடித்து ஒரு புறம் வைத்து விட்டு.

சுமதி ''இதோ வந்து விட்டேன்,'' என்று சொல்லிக் கொண்டே சமையல் உள்ளே சென்று கையிலிருந்த தட்டை ஒரு புறம் வைத்து விட்டு ஹாலுக்குத் திரும்பினாள். வரும் வழியில் தொட்டிலில் கண்ணன் புரண்டு படுத்ததைக் கண்டு தொட்டிலருகில் சென்று தொட்டிலை விலக்கிப் பார்த்தாள், பொட்டுப் பொட்டென்று கண்ணை விழித்துக் கொண்டு வாய் பேசாமல் படுத்துக் கொண்டிருந்தான் கண்ணன். அவனது வலது கைக் கட்டை விரல் அவன் வாயில் அமுதத்தை வார்த்துக் கொண்டிருந்தது.

''அடத் திருடா, முழிச்சிட்டே படுத்திருக்கிறயே'' என்று அவனை வாரியணைத்து இதழோடு இதழ் பதித்து முத்தமிட்டு இடுப்பில் எடுத்துக் கொண்டு சுந்தரேசனிடம் சென்றாள்.

சுமதியைத் திரும்பிப் பார்த்த சுந்தரேசன் கண்ணனைக் கண்டதும் முகத்தில் மகிழ்ச்சி துவள, ''அடே மிஸ்டர் கண்ணன் முழிச்சிட்டானா?'' என்று கையிலிருந்த பேப்பரை பக்கத்தில் எறிந்து விட்டு இரு கையையும் அவள் முன் நீட்டினான். நீட்டிய கைகளில் தாவி விழுந்தான் கண்ணன். அவனைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டு ''என்டா ராஜா தூங்கியாச்சா?'' என்று கேட்டான். ஆச்சு என்ற பாவனையில் தோளில் இருந்தபடியே தலையை அசைத்தான் கண்ணன்.

''ஊம், தலையசைப்பைப் பாருங்கள். தூங்கியாச்சாம்! வாயிலே விரலைப் போட்டுட்டு கொட்டு கொட்டுண்ணு முழிச்சுட்டிருந்தான். தூங்கினானாம்! திருட்டுப் பயல்!'' என்று செல்லமாகக் கடித்துக் கொண்டு அவன் மாம்பழக் கன்னத்தை லேசாகக் கிள்ளினாள் சுமதி.

அடுத்த விநாடியே கண்ணனின் ஆள் காட்டி விரல் மூக்கின் மேல் சென்றது. "மூக்கை...... அத்து ...... காக்கா!" என்று சொல்லிக் கொண்டு சுமதியை விரைத்துப் பார்த்தான். கொல் என்று இருவரும் சிரித்து விட்டார்கள். சுந்தரேசன் "பார்த்தையாடி! ஜாக்கிரதை! உன் மூக்கை அறுத்துக் காக்காய்க்குப் போட்டு விடுவான் கண்ணன். இனிமேல் ஜாக்கிரதையாய்ப் பேசு" என்றான்.

அவன் பேச்சை முடித்ததும் முடிக்காததுமாக சுமதியிடம் மெல்லத் தாவி விழுந்தான் கண்ணன். அவனை இரு கைகளாலும் வாரிக் கொண்டு அவன் நெற்றிக்கு ஒரு முத்தமிட்டு, "ஏண்டா கண்ணு, எம் மூக்கையா அறுப்பே?" என்றாள்.

"இல்லை என்ற பாவனையில் தலையை அசைத்துக் கொண்டு, "அப்பா...... மூக்கெ... ஊ...... ஊ...... காக்கா" என்றான்.

"இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்?" என்றாள் சுமதி ஒரு வெற்றிச் சிரிப்போடு சுந்தரேசனது முகத்தில் பரவிய மகிழ்ச்சியைப் பார்த்தபடி.



"என்னத்தைச் சொல்கிறது. திருட்டுப் பயல்தான்" என்று சொல்லி விட்டு, "சரிதான், முக்கியமான சமாச்சாரத்தை இன்னும் சொல்லவில்லையே!" என்றான்.

"சொல்லுங்கள். நான் கேட்க மாட்டேன் என்று சொல்கிறேன்?" என்று சொல்லிக் கொண்டே சுந்தரேசன் உட்கார்ந்திருந்த சோப்பாவின் அருகில் நெருங்கி அதன் கைப் பிடியைத் தன் கையில் பிடித்துக் கொண்டு நின்றாள்.

"நம்ம, சேகரன் தெரியுமல்லவா......?" என்று நிறுத்தி சுமதியின் முகத்தைப் பார்த்தான் சுந்தரேசன்.

சேகரன் என்ற வார்த்தை சுமதியின் உடலை ஒரு உலுக்கு உலுக்கிற்று. இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி வெள்ளம் அவள் உடல் முழுதும் ஏக காலத்தில் பாய்ந்து பரவியது.

சுமதியை முதலில் சந்திரசேகரனுக்குக் கொடுப்பதாகத் தான் பேச்சு வார்த்தை நடந்தது. ஆனால் தொடர்ந்து இரு பக்கத்திலும் ஏதேதோ அசந்தர்ப்பங்கள் ஏற்பட்டு வந்ததால் வாய்ப் பேச்சுப்படி கலியாணம் நடைபெறுமல் தடையாகிக் கொண்டே வந்தது. அதற்குத் தகுந்தாற் போல் சுந்தரேசன் வந்து சேரவே பெரிய இடம் சொத்து ஏராளமாக இருக்கிறது என்பதை உத்தேசித்து சட்டுப் புட்டென்று சுமதிக்கும் சுந்தரேசனுக்கும் கலியாணம் நடந்து விட்டது.

சேகரன் கலியாணத்தைப் பற்றியே அதிகம் சிரத்தை கொள்ளாத காலம் அது. ஆகையால் நடந்து போன கலியாணத்தைப் பற்றி அவன் அதிகமாக சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. சுந்தரேசன் தனது பள்ளித் தோழனாக இருந்தும், அந்தக் கலியாணத்திற்கும் தனக்கும் இருந்த சம்பந்தம் முதலியவைகளைப் பற்றி அவனிடம் கூட அவன் சொல்லிக் கொள்ளவில்லை.

ஆனால் மணமகள் சுமதியுடன் விஷயம் இதற்கு நேர்மாருக இருந்தது.

சந்திர சேகரனைப் பற்றி நன்கு அறிந்திருந்த சுமதி, தான் அவனுக்கு வாழ்க்கைப் படப் போவதை நினைத்துப் பெருமிதம் கொண்டிருந்தாள். இன்னும் சேகரனின் தாயார் ராஜம்மாள் சற்று நேரத்திற்குள் சுமதியின் இதயத்தில் ஒரு நல்ல ஸ்தானம் பெற்றதும் அந்தப் பெருமிதத்துக்கு ஒரு முக்கிய காரணம். ஆனல் தனக்கும் சேகரனுக்கும் நடப்பதாக இருந்த கலியாணப் பேச்சு அடியோடு மாறி யாரோ ஒரு பெரிய வீட்டுப் பிள்ளைக்குத் தன்னைக் கொடுக்க ஏற்பாடாகி விட்டது என்று அவள் கேள்விப் பட்டதும் அவள் இதயம் சுக்கு நூருக வெடித்து விடும் போலிருந்தது அவளுக்கு. படிப்படியாக மனதை சமாதானப் படுத்தி ஒரு நிலைக்குக் கொண்டு வர ஒருவாரம் பிடித்தது அவளுக்கு. பின் காலச் சுழல் அவளது உடைந்த உள்ளத்திற்கு ஆறுதல் அளித்து, சுந்தரேசனைத் தன் வாழ்க்கையின் துணைவனாக ஏற்றுக் கொள்ளும் தெம்பு அளித்தது அவளுக்கு. அதையொட்டி அவள் சுந்தரேசனுக்குத் துணைவியும் ஒரு வருஷத்திற்குள் கண்ணனுக்குத் தாயும் ஆனாள். அவர்கள் வாழ்க்கை கந்தர்வ வாழ்க்கையாக இருந்தது.

சுமதி சுந்தரேசன் கலியாணத்திற்குப் பிறகு இரண்டொரு முறை பள்ளித் தோழன் என்ற முறையில் சுந்தரேசனைப் பார்க்க வந்து போயிருக்கிறான் சேகரன். மதுரையிலேயே அவர்கள் தனிக் குடித்தனம் ஆரம்பித்த பிறகு சேகரன் அவர்கள் வீட்டுக்கு ஒரு முறை கூடப் போகவில்லை. இருவரது வாழ்க்கை ரதங்களும் வெவ்வேறு கோணங்களில் சென்று கொண்டிருந்ததே அதற்குக் காரணம். சேகரனுக்குக் கலியாணமான போது சுமதிக்கு உடல் குணமில்லை. அதனால் சுந்தரேசன் மட்டும் பத்துப் பேரோடு தானும் ஒருவனாகக் கலியாணத்திற்குச் சென்று திரும்பினான். அப்போது தான் சேகரனைப் பற்றிக் கடைசியாகக் கேள்விப் பட்டாள் சுமதி.

இந்தப் பழைய நினைவுகள் எல்லாம் சற்று நேரத்திற்குள் சுமதியின் உள்ளத்தில் பளிச்சிட்டு மறைந்தன. தன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை வெகு சீக்கிரம் மறைத்துக் கொண்டு சற்று நேரம் யோசனை செய்பவள் போல் பாவித்து, "யார், முன்பு பெரிய வீட்டில் நாம் இருந்த போது இரண்டொரு முறை வந்திருக்கிறாரே, அவரா?" என்றாள் சாவதானமாக.

"ஆமாம், அவன் தான்! நான் கூட அவனை அம்மா பிள்ளை என்று அடிக்கடி கேலி பண்ணுவேனே அவன் தாயாருக்கு ஜுரமாம். நேற்று டாக்டரிடம் மருந்து வாங்க வந்திருந்தான். நாளை மறுநாள் போய்ப் பார்த்து வருவோமா?" என்றான்.

"ஓ, போய் விட்டு வந்தால் போகிறது. நாளைக்கே கூட போகலாம். உங்களுக்கு நாளைக்கு வேலை அதிகமாக இருக்கிறதோ என்னவோ?"

"இல்லை, இல்லை. நாளைக்கு கடைசி சனிக்கிழமை தானே; மூன்று மணிக்குள் வந்து விடுகிறேன். பாட்டியம்மாளை நாளைக்குக் கொஞ்சம் சீக்கிரமாகவே வரச் சொல்லி உன் வீட்டு வேலைகளையெல்லாம் சீக்கிரம் முடித்துக் கொண்டு, 'ரெடியாய்' இரு. போய்ப் பார்த்து விட்டு சாயங்காலம் வந்து விடலாம்" என்றான் சுந்தரேசன்.

"தங்கள் சித்தம்" என்றாள் சுமதி தலையைச் சிறிது தாழ்த்தி. அவள் முகத்தில் ஏனோ என்றுமில்லாத ஒரு புது மகிழ்ச்சி பரவியிருந்தது. திடீரென்று ஏதோ நினைவு வந்தவள் போல், "சரி, சரி, சாப்பிட வருகிறீர்களா, இல்லையா? நான் போகிறேன். எனக்குப் பசி பிராணன் போகிறது" என்று சொல்லிக் கொண்டே கண்ணனை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு, "இரு இரு வந்து விட்டேன்" என்று கத்திக் கொண்டே தன்னைப் பின் தொடர்ந்த சுந்தரேசனைத் துளி கூட லக்ஷியம் செய்யாதவள் போல் விறு விறு என்று சமையலறையை நோக்கி நடந்தாள் சுமதி. அவள் உள்ளத்தில் ஏனோ இன்பமும் மகிழ்ச்சியும் பொங்கிப்பொங்கி வழிந்தன!

(தொடரும்)

★

மஹா சுவேதை

[கே. சி. எஸ். அருணாசலம்]

[தாளிகா கேலியாகப் பாடுகிறள்.... மஹாசுவேதா வருத்தமாக உட்கார்ந்திருப்பது அவளுக்கு முதலில் தெரியவில்லை — பிறகு உண்மையில் சுவேதாவின் உள்ளம் கலங்கி இருக்கிறது என் றறிய பாட்டு சட்டென்று நிற்கிறது....]

மஹாசு: (பெருமூச்சு)......

தாளிகா: மஹாசுவேதா....இதோ ...என்னைப் பார்.

மஹா: ஏன் தாளிகா?

தாளி: ஏன் இப்படி ஏக்கமடைந் திருக்கிறுய்?

மஹா: நான் என்ன செய்வேன் தாளிகா? நடந்ததெல்லாம் கனவல்லவே?

தாளி: (பரிகாசத்துடன்) இந்தப் பாரிஜாதத்தைக் கேளேன்......

மஹா: மலரைக் கொடுத்த அவர் என் மனதையும் கொள்ளை கொண்டாரே......

தாளி: நீயும்தான் உன் முத்து மாலையைத் தந்து அவரைப் பித் தேற்றி விட்டாயே......

மஹா: (ஆவலுடன்) உண்மையா... அப்படியும் இருக்குமா தாளிகா? என் ஆசைக்கும் வெற்றி உண்டா?

தாளி: அவரது கண்கள் அதைச் சொல்லவில்லையா?

மஹா: ஞானியின் உள்ளம் ஒரு பெண்ணின் கனவிற்குப் பணிந்து விடுமா?

தாளி: உம்...... விஸ்வாமித்திரர் பெரிய ஞானிதான்...... ஆனல் மேனகையின் மோனச் சிரிப் பின் முன்னே என்ன ஆனர்?... கமலகுமாரன் பெரிய ராஜ ஞானியாக இல்லாவிட்டாலும் எங்கள் மஹாசுவேதா அழகில், அந்த மேனகைக்கு எவ்விதத் திலும் தாழ்ந்தவளல்ல......

மஹா: ஆஹா...... என்ன அழகு, எவ்வளவு கம்பீரம்! கரும்பு வில்லை ஏந்த வேண்டிய கை களே கமண்டலம் தாங்கின... உம்...... ரதியின் பூங்கரங்கள் தழுவி அழகு செய்யும் மார் பிலே வன்மையான உருத்தி ராட்ச மாலை......

தாளி: (குறும்பாக) அடே......... காதல் பிறந்ததும், கவிதையும் உதிக்கிறதே...... (கலகல வென நகைத்து) அந்த மன்மதனுக் கேற்ற ரதி மஹேஸ்வரனின் மகளல்ல...... இந்த மஹா சுவேதைதான்......

மஹா: (இரக்கமாக) என் மன வேதனையை உணராமல் ஏளனம் செய்கிறுயே......... தாளிகா...... இதுதானு ஒரு தோழியின்......

தாளி : எளனம் என்ன? கந்தர்வ குமாரி!...... நீ வீணே வருந்து கிருய்......

மஹா : அப்படியானல் (இன்னும் வருத்தமாக) வாழ்வில் ஒரு தடவை கிடைத்த அந்த சந்திப்பை மறந்துவிடச் சொல்லுகிருயா?

தாளி : அல்ல......

மஹா : (வருத்தமாக) பின்னே?

தாளி : வருந்தாதே. அவர் உள்ளம் உன்னைவிட்டுப் பிரியாது. இரண்டொரு தினங்கள் இங்கிருப்பதாக அவர் சொல்லவில்லை?......

மஹா : ஆமாம்......

தாளி : அதனல்தான் சொல்லுகிறேன். மீண்டும் நாம் இங்கே அவரைச் சந்திக்க முடியும்...... வா...... நேரமாகிறது......

மஹா : (கெஞ்சுதலாக) தாளிகா... நான்......

தாளி : (சிரித்து) அதெல்லாம் கவலைப்படாதே......... நானே சென்று உன் மனதை அவரிடம் தெளிவாகச் சொல்லி வருகிறேன்.

[அருவி — தாளிகா நீர்முகத்தல். "அலையும் மனத்" தைப் பற்றிக் கேலிசெய்து பாடிக் கொண்டிருக்கிறள். கமல தமாரன் வருகிறன் — பாட்டு சட்டென்று நிற்கிறது.]

கமல : யார், தாளிகாவா?

தாளி : (அப்பொழுதுதான் கண்டவள் போலத் திடுக்கிட்டு) ...... யார்? .... தாங்களா......... ஸ்வாமி......

கமல : மஹாசுவேதா எங்கே?

தாளி : அவள் வரவில்லை. நான் தான் நீரெடுக்க வந்தேன்.

கமல : (வருந்தி) பெருமூச்சு...... ஏன்......

தாளி : ஏதேனும் சொல்ல வேண்டுமா?

கமல : உம்...... ஒன்றுமில்லை......

தாளி : ஸ்வாமி... ஏன் தயக்கம்?

கமல: (மென்மையாய்) தாளிகா...

தாளி : ஸ்வாமி!...... என்ன...... சொல்லுங்கள்.

கமல : இதோ... இந்தத் தாமரையிலையை அவளிடம் சேர்ப்பாயா?

தாளி : தேவா...... இது என்ன?

கமல : (சோகத்துடன்) தாளிகா... மஹாசுவேதையைக் கண்டது முதலாக அவளுடைய கண்கவரும் கட்டழகில் என் உள்ளம் கரைந்து விட்டதே. ஓய்வும் ஒழிவும் இல்லாமல் அவள் உருவை நினைத்தே வாடுகிறேன்.

தாளி : ஆஹா!...... அவள் எவ்வளவு பாக்கியசாலி!......

கமல : பாக்கியசாலியா...... என் மன சாந்தியைத் அழித்து......

தாளி : ஸ்வாமி...... சந்திர கலையை விரும்பாத சாதகப் பறவையும் உண்டா? அவளும்... தங்கள் நினைவாலே......

கமல : (களிப்பாக) அப்படியா? தாளிகா... நீ சொல்வது உண்மைதானு? கற்பனை அல்லவே?

தாளி : தீங்குயில் வசந்தத்தைப் பாடி அழைப்பதிலே என்ன வியப்பு, இதில் கற்பனை எது?

கமல : ஆஹா...... என் இன்பக் கனவுக்கு நீ உயிர் ஊட்டி விட்டாய்...... தரளிகா......

தாளி : ஸ்வாமி...... பனித்துளி தாங்கிய நீலக் குவளை போல அவளது கண்கள் தங்களது நினைவாலே நீர் தேங்கி நிற்கின்றன. அந்தப் பாரிஜாதம் அவளுக்கு என்னென்ன இன்பக் கதைகள் சொல்லுகிறது!.........

கமல : எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வெம்மையுற்ற என் நெஞ்சிலே, உன் சொற்கள் பனிமலைத் தென்றலாய் தவழ்கிறது. அதோ...... மலை முகட்டில் மயங்கும் சூரியனைப் போல என் மனமும் இன்ப மயக்கம் அடைகிறது...... தரளிகா......

தாளி : என் தலைவியின் கனவுக்கு உருவகம் கொடுக்க அன்பு கூர்ந்து தாங்கள் இசைந்ததற்கு நான் அல்லவோ நன்றி செலுத்த வேண்டும்?

கமல : தரளிகா......... எத்தகைய நற்செய்தியை நீ கொண்டு வந்திருக்கிறாய்......

தாளி : அந்தி நேரமாகி விட்டது. விடை பெற்றுக் கொள்கிறேன்.

கமல : இந்தா...... தரளிகா...... இந்தத் தாமரை இலை என் உள்ளத்தின் ஏக்கத்தை அவளுக்கு கூறும். அவள் தந்த முத்து மாலையிலே நான் அவளது இளஞ் சிரிப்பையே ஒவ்வொரு கணமும் காண்பதாகக் கூறி, இந்தத் தாமரை நிருபத்தை அவளிடம் தந்து விடு......

தாளி : அப்படியே ஸ்வாமி......

[காட்சி மாற்றம்]

மஹா : வரவேண்டும்... ஸ்வாமி... தங்கள் வருகையால் இந்தச் சிற்றில்லம் புனிதமடைந்தது.

கபிஞ் : கமலன் அனுப்பிய நிருபத்தைக் கண்டாயா? மஹா சுவேதா...?

மஹா : (நாணிய குரலில்) ஆம்... தரளிகா தந்தாள்...

கபிஞ் : அதுபற்றிக் கேட்கவே நானும் வந்தேன். நிர்மலமான வானம் சூறுவளியால் வண்ணம் குலைவது போல, கமலனது சிந்தைப் பொழுதெல்லாம் உன் நினைவாலே கலங்கிக் கிடக்கிறது.

மஹா : தவப் பண்பு நிறைந்த அவரது உள்ளத்திலே கேவலம் எனக்கும் இடம் உண்டா ஸ்வாமி?

கபிஞ் : பக்தியைப் பருவமும், கலை ஞானத்தைக் கட்டழகும் வெற்றி கொண்டது... மஹா சுவேதா. இதில் வியப்பில்லை.

மஹா : மழை முகில்கள் மோதினாலே இமயம் தளர்ந்துவிடுமா?

கபிஞ் : தேமலர்ச் சோலையின் இடையிலே நீ ஒரு தேவ மோகினியாக வந்து அவனைக் கவர்ந்தாய். மஹாசுவேதா... காமதேவனின் ஐந்து மலர்க்கணைகளாலும், அவற்றிலும் கொடிய உன் கருநீலக் கண்களாலும் அவன் நெஞ்சம் ஏங்குகிறது. மன்மதனை அவனது கரும்பு வில்லுடன் எரித்தழிக்க கமலன் மஹேஸ்வரன் அல்லவே.

மஹா: (பெருங் களிப்புடன்) ஆஹா... என் கனவு நனவாகி விட்டதா...... நான் எத்துணை பாக்யம் செய்திருக்க வேண்டும்.

கபிஞ்: கலாபமயிலைப் படைத்த ஆண்டவன் அதற்கு ஒரு கார்ப் பருவத்தையும் படைத்தான். மஹாசுவேதா...... அன்னப் பறவை தாமரைப் பொய்கையைத்தான் சேர தேண்டும்.

மஹா: ஸ்வாமி...... சந்திரனைக் கண்டு மயங்கும் அல்லிப் பூவைப்போல எனது காதலும் எட்டாது போகுமென்றே கலங்கி வாடினேன். இந்தத் தாமரையிலேதான் எனக்குப் புத்துயிர் தந்தது...... ஸ்வாமி. அவரை நான் மறுமுறை சந்திக்க முடியுமா?......

கபிஞ்: உன் இனிய மயக்கத்தால் சோர்ந்தவனாக குளக்கரையிலுள்ள லதா மண்டபத்திலே இரவெல்லாம் ஏங்கிக்கிடக்கிறான். தென்றல் அசைப்பதால், மேலே யிருந்து வீழ்கின்ற சண்பக மொட்டுகள், அவன் ஏங்கும் மனதை இன்னும் சித்திரவதை செய்ய, காலை நேரச் சந்திரனைப்போல வெளிறடைந்து வெம்புகிறான்.

மஹா: (துயருடன்) என்னால் அவருக்கு எத்தனை துன்பம்...... ஸ்வாமி... இன்று அந்த லதா மண்டபத்திலே அவரை நான் சந்திக்க முடியுமா?

கபிஞ்: (மகிழ்வோடு) மகிழ்ந்தேன். மஹாசுவேதா......... பெருமைக் குரியவனும் புனிதமானவனுமாகிய என் நண்பனுக்கு உயிர்ப்பிச்சை தந்தாய்... அழகிய மலர்களிடையே பயிலும் உன் உள்ளம் அந்த மலர்களின் மென்மை முழுவதையும் கொண்டிருக்கிறது. உன் வேண்டுகோளை அவன் எவ்வளவு களிப்புடன் ஏற்பான் தெரியுமா?......

[மஹாசுவேதையின் உற்சாகம் — தரளிகா கேலி செய்கிறள்பரட்டில்]

தாளி: மஹாசுவேதா... நேரமாகவில்லையா? இன்னுமா அலங்காரம் முடியவில்லை?

மஹா: இதோ...... நான் ஆயத்தமாக இருக்கிறேனே...

தாளி: ஆ ஹா!...... செவ்வானத்தைப்போன்ற பட்டுத் துகிலும் வேல்விழிக்குக் கருமையும். மஹாசுவேதா...... வெண்மதியின் ஒளியிலே கலையுமிழும் முத்தாரங்கள்......... அழகுக்கு அழகு செய்து இன்பமே வடிவானாய். நான் மட்டும் ஒரு ஆண்மகனாயிருந்தால், உம்...... அந்தக் கமலகுமரன் என்ன பாடு படுவார் என்னிடம்?......

மஹா: கேலி எல்லாம் போதும்... தரளிகா... எதற்கு இந்தப் பொன் தட்டம்?

தாளி: இனிய கனிவர்க்கங்களையும், பாற் கிண்ணத்தையும் இதிலே கொண்டு போ......... நிலவின் அமுதம் படிய நீ எடுத்துச் செல்லும் இந்தப் பாலும், அதிலும் இனிக்கும் உன் தீஞ் சொல்லும் எல்லையில்லாத இன்பம் உன் அன்பர்க்கு அளிக்கட்டும்...

மஹா: ஆஹா... என் மனம் எத்தனை களிப்படைகிறது... ஒரு கணம், சொல்லைக் கடந்த ஒரு சுக உணர்ச்சியால் என் மெய் சிலிர்க்கிறது...மறுகணம், என்

நெஞ்சிலே எத்தனையோ எண்ண அலைகள் பொங்கி எழு கின்றன.

தாஸி : ஆம். பூரணச் சந்திரனைக் காண நீலக் கடலின் நெஞ்ச மும் அப்படித்தானே குமுறும். நேரமாகிறது... ஒருவரும் அறி யாமல் நான் மீண்டும் மாளிகை திரும்ப வேண்டாமா?

மஹா : என்னைத் தனியே விட்டா?

தாஸி : (சிரித்து) மனதாரச் சொல். நானும் உடன் இருக்க வேண்டு மென்று நீ விரும்புகிறாய்? கரும்பு வில்லும், மலர்க் கணை யும் கொண்டு உன்னை மன்ம தன் காப்பான்.

(சிரிக்கிறாள்)

[எங்கும் பால் போல நிலவு — ஆனந்தக் காட்சிகள் — ஆனால் மஹா சுவேதா இன்னும் வரவில்லை. அவள் வரவுக்காக கமல குமாரன் ஏங்கி நிற்கிறான் — அவள் நினைப்பில் மனங் கொள்ளா உற்சாகம் ஆனால் வர இன்னும் தாமத மானதில் ஏக்கம்....]

கமல : மஹாசுவேதா......... என் அன்பே...... நீயேன் இன்னும் வரவில்லை? சூரியனை நோக்கிச் சாய்ந்து கிடக்கும் சூரியகாந்த மலர்போல் என் உள்ளம் உன்னை நோக்கிச் சோர்ந்து கிடக்கிறதே.

ஆம்... இந்தச் சந்திர கலைகளைத் தான் என்னால் தாங்க முடிய வில்லை. சந்திரதேவ! அமு தோடு பிறந்த உனக்கு ஏது இந்த அக்கினிக் கதிர்கள்? ஐயோ... மஹாசுவேதா... என் கண் குளிர ஒரு முறை மீண்டும் உன்னைக் காண மாட்டேனா? சந்திரா...... எல்லாம் உன்னால் தான். என்னை ஏன் இப்படி வாட்டுகிறாய்? உன் அமுத கிர ணங்களால் வேடிக்கை காட்டி அவளை அங்கு நிறுத்திக் கொண்ட மமதையா? என் உயிர்க்கினிய மஹாசுவேதையு டன் இன்புறுது கொல்லும் பழி உன்னுடையதுதான்...... கொடியவனே! என்னை என் உயிர்த்துணையுடன் மகிழ வொட்டாது என்னைப் பிரித்த பாவத்திற்காக நீயும் பாரத மண் ணிலே பிறந்து உன் அன்பிற் குரிய மனைவியை அடையாமல் இரண்டு ஜன்மங்கள் துன்பப் படுவாய்... இந்தச் சாபம் இக் கணமே உன்னைப் பற்றட்டும்...

சந்திரன் : (அசரீரியாக) ஆஹா... கமலகுமாரா... என்ன காரியம் செய்து விட்டாய்? காற்று தீயைப் பரப்புவது அல்லாமல், காற்றிலிருந்து நெருப்பு பிறப்ப தில்லை. எனது நிலவுக் கலைகள் உன் மோகத்தை பெருக்குவ தல்லாமல் அதை உண்டாக்குவ தில்லை. உன்னை ஆவி சோரச் செய்தவன் மன்மதன். அதை மறந்து வீணே என்னைச் சபித்து விட்டாய். அதன் பல னக பாரத மண்ணில் நான் பிறக்கும் போது நீயும் என் னோடு பிறந்து இரண்டு ஜன்மங் கள் துன்புறுவாய்.

கமல : (நடுங்கும் குரலில்) ஹா!... மஹா...... சுவேதா...... என் அன்பே......

காட்சி மாற்றம்.

மஹா : (அழுதவாறு) ஆ... ஐயோ உடலெல்லாம் சில்லிட்டிருக்கி றதே. சுவாசமும் நின்று விட் டதே. ஐயோ... இது என்ன காட்சி... அங்கமெல்லாம் தாம

ரைத் தண்டைப் போல குளிர்ந்து விட்டதே... (தன் கையிலிருந்த பொன் தட்டை வீசி எறிந்து கதருகிருள்) ஐயோ... தெய்வமே. தேனே வேண்டி வந்த எனக்கு விஷமூட்டி விட்டாயே. நான் என்ன பாவம் செய்தேன்? என் உயிர் ஏன் இன்னும் மடியவில்லை. விதியே! பச்சை மயில் போல் தோன்றி மயக்கி, பாயும் புலியாக என்னை வீழ்த்தி விட்டாயே. ஸ்வாமி... ஆருத அமைதியிலே அநாதையாகத் தாங்கள் கிடப்பதைக் காணவா வந்தேன்? முத்தென்றும், இள நிலவென்றும் என்னைப் புகழ்ந்து இப்போது முடிவில்லா மௌனம் கொண்டீரே......

கபிஞ் : (பரபரப்புடன் வந்து) மஹாசுவேதா...... ஏன் அழுகிருய்? என்ன நடந்தது?

மஹா : (அழுதவாறு) இது என்ன காட்சி, பாருங்கள்... ஸ்வாமி...

கபிஞ் : (அழுதவாறு) ஆ...... இது என்ன அலங்கோலம்!... கமலகுமாரா...... விபரீதம் செய்து விட்டாயே. ஆசைக் கதை பேச, அமுத மொழி கேட்டயர, தனித்து வந்து, அநாதையாக மடிந்து கிடக்கிருயே......

மஹா : (தீர்மானத்துடன்) ஸ்வாமி துணை பிரிந்த பின்னே அன்றில் உயிர் வாழுமா? இனி ஒரு கணமும் என் உயிர் வாழ முடியாது. [அசரீரியாக]

சந்திரன் : மஹாசுவேதா....... நிறுத்து... நீ பிராணத் தியாகம் செய்து கொள்ளாதே, உன்னை எதிர்நோக்கி ஏங்கிய உன் காதலன் தாளாத பேராசையாலே நெஞ்சுடைந்தான். தாங்க முடியாத வேதனையைத் தந்த மன்மதனை மறந்து, எனது சந்திர கலைகள்தான் தன்னைக் கொல்வதாகக் கருதி, என்னைச் சபித்து விட்டான். நானும் வெகுண்டு, அவனும் என்னுடன் மண்ணுலகில் பிறந்து இரு ஜன்மங்கள் தொல்லையடையுமாறு அவனைச் சபித்தேன்.

மஹா ; (அழுது) தேவ......... என் தேவனுக்குச் சாபமா... மீண்டும் அவரைக் காண முடியுமா?

சந்திரன் : நான் சந்திராபீடனென வும், சூத்ரகன் எனவும் இரு முறை பிறப்பேன். உன் காதலனும் வைசம்பாயனன் எனவும், அப்பெயருடைய ஒரு கிளியாகவும் பிறப்பான். பிறகு சாப விடுதலை அடைந்து, நான் உன் உயிர்த் தோழியாகிய காதம்பரியை அடைவேன். கமலகுமாரன் உன்னைச் சேர்வான். அதுவரை அவனது உடல் எனது உலகத்தில் எனது குளிர்ந்த அமுத கலைகளால் காப்பாற்றப்படும் வருந்தாதே.

கபிஞ் : (இரக்கமாக) மஹாசுவேதா... கமலகுமாரனுடைய உடலுடன் சந்திரன் சென்று விட்டான். வினைப்பயன் விளைந்து விட்டது. வீணிலே ஏன் கவலை? விதியின் எழுத்துக்களை கண்ணீரால் அழிந்துவிட முடியுமா?

மஹா : ஸ்வாமி... அவர் விரும்பிய இந்தப் பேரழகும், அலங்காரங்களும் இனி எனக்கு எதற்கு? என் அன்பர் மீண்டுவரும் வரை தவக்கோலம் கொண்டு இங்கேயே வாழ்வேன்......

[காதலின் நிலையற்ற தன்மையைப் பாடியவாறு மறைகிருன்.]

திருச்சி வானொலி நிலையத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்பட்டது.

புனர் ஜென்மம்

[எச். விஜயகுமார்]

மழையென்றால் அவ்வளவு மழை! அம்மழையின் வரவால் வழக்கம் போல் மயில்கள் கூவி நடனமாடவில்லை. எங்கும் பச்சைப் பசேலென்ற நிறத்துடன் நிலம் விளங்கவில்லை. பூமி புதுமையுணர்ச்சியை யடையவில்லை. அது சாதாரணமாகத் தூறும் மழையாக இருக்கவில்லை. காற்றும் அடிக்கவில்லை. வெகு விசித்திரமான மழை! பிரளயகாலமே வந்து விட்டதைப் போன்று இரவும் பகலும், குறையாமல் அடங்காமல், பூமி என்றுமே கண்டறியாத பயங்கர மழை பெய்த வண்ணமாகவே இருந்தது. ஒரு நாள் இரண்டு நாள் பெய்து நின்று விடவில்லை. ஏழேழு நாட்களாக விடாமல் அடங்காமல் குறையாமல் தடதட வென்று கொட்டிய வண்ணமே இருந்தது. ஏழேழு நாட்களாக மனித குலமும் விலங்குகளும் பறவைகளும் ஜடப்பொருள்களும் நிலைவையும் வேற்றுமையையும் மறந்து, ஏதேனும் வெண் மேகம் தென்படுகிறதா என்று ஆகாயத்தையே பார்த்தவாறு இருந்தன. கன்னங் கரேலென்று இருண்டு விட்ட வானத்தில் அமிர்தத்தின் துளி போன்ற ஒளிக் கிரணம்; ஆனால்...... அது பிரளயகாலம். பிரளயகால மேகங்கள் உலகெங்கும் பரவி வருஷித்துக் கொண்டிருந்தன. எங்கும் பயங்கரமான அமைதி நிலவியிருந்தது. ஒரு இலையின் அசைவோ ஒரு மூச்சின் சப்தமோ எங்குமே கேட்கவில்லை. ஒரே மாதிரி பெய்து கொண்டிருந்த மழை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

மனிதனோ, விலங்கோ எதுவும் ஒன்றுமே பேசவில்லை. சிருஷ்டி உணர்ச்சியற்றுப் போயிருந்தது. மனிதர்களின், விலங்குகளின், பறவைகளின் பாஷைகள் நாசமாகி விட்டன. சொற்கள் மறக்கப் பட்டுப் போயிருந்தன. சைகைகள் பயனற்றுப் போயின. அனைவரும் – மனித இனம் – விலங்கினம் – புள்ளினம் – முழுதும் சகலருக்கும் புரியக் கூடிய – ஒருவருடைய மொழி மற்றவருக்குப் புரியக் கூடிய எளிய – கண் பாஷையில் பேசிக் கொண்டனர். கண்கள் வாய்க்குப் பதிலாகப் பேசின. அனைவரது கண்களிலும் எங்கும் பீதியே காணப்பட்டது.

இவ்விதமாகப் பதினைந்து நாட்கள் சென்றன. அப்பொழுதும் மழை நிற்கவில்லை. "சரிதான்! இது மழையாகத் தோன்றவில்லை! பிரளய காலத்தில் நடனமாடும் சிவபெருமானின் கோரத் தாண்டவந்தான் இது" என்று ஒருவர்க்கொருவர் கண்களால் அறிவித்துக் கொண்டனர்......... அதை உண்மை என்று நிரூபிப்பது போல் பெரிய பெரிய மாடங்களும் மரங்களும், சிறிய குன்றுகளும் பெரிய மலைகளும் நீரில் மிதப்பதுபோல் காணப்பட்டன. மனிதர்கள் — இந்து முஸ்லிம், கிறிஸ்தவர் ஆப்பிரிக்கர் அனைவருமேதான் — ஒரு மிகப் பெரிய

மலையின் உச்சிமீது வந்து நின்று கொண்டனர். மனிதர்களின் தோள்களின்மேல் குரங்குகள் உட்கார்ந்து கொண்டிருந்தன. சிங்கங்கள் பசுவைப் போன்று சாதுவாகி மனிதர்களுக்கருகில் கண்ணை மூடிக் கொண்டு நின்றன. அப்படி நின்ற சிங்கங்களின் முதுகின்மேல் தமது துதிக்கைகளைப் போட்டுக் கொண்டு யானைகள் ஓய்வெடுத்துக் கொண்டு நின்றன.

இம்மலையுச்சியின் மீது நின்று பார்த்தவர்களுக்கு நீர், வானம் இவைகளைத் தவிர ஒன்றுமே தெரியவில்லை. காற்று, பிரகாசம், வெயில், நிழல் எதுவுமே அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பசியோ தாகமோ, குளிரோ, வெப்பமோ, ஆசையோ, அச்சமோ யாருக்கும் எதுவும்தோன்றவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே நின்றனர். அவர்களது கண்களில் வர்ணிக்க முடியாத, விவரிக்க முடியாத — கண்களின் மொழியால் மட்டுமே அறிந்து கொள்ளக்கூடிய — என்றும் அழியாத — அன்பு காணப்பட்டது. அனைவரும் வானத்தையும் பூமியையும் ஒன்ருக்கும் அவ்வதிசயமான மழையை அகன்ற கண்களுடன் பார்த்தவாறே நின்றனர்.

நாற்பத்தொன்பதாவது நாள் காலையில் சூரியன் உதித்தபோது வெண்ணிறமாக மாறிக் கொண்டிருந்த கரிய மேகங்களைப் பார்ப்பதற்கு ஒரே ஒரு மனிதன்தான் உயிருடனிருந்தான். பெரிய பெரிய மலைகளெல்லாம் சின்னஞ் சிறிய மணற் திட்டுகள் போலக் காணப்பட்டன. இவ்விதம் தென்பட்ட ஒரு திட்டின்மேல் ஒரே ஒரு மனிதன் மட்டும் ஆச்சரியத்தில் மூழ்கினவனாய் மணற் திட்டுப்போன்ற மலையின் மீது மோதிக் கொண்டிருந்த அலைகளைப் பார்த்தவாறு இருந்தான். இன்னும் அவன் முறை வரவில்லை போலும்! தன் சகாக்கள் சென்ற வழியே தானும் செல்வதற்குச் சித்தமாகி பேசாமல் அசையாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனால் பின்னிரவில் காற்றடிக்க ஆரம்பித்தது. நீரில் அலைகள் உண்டாயின. பூமியின் மேல் சப்தங்கள் உண்டாயின. அடர்த்தியாக ஒன்று சேர்ந்திருந்த மேகங்கள் பிரிந்து திக்குகள் பிரகாசமடையலாயின. வானம் நிர்மலமாக விளங்கிற்று. வெண் மேகங்கள் பொன்னுடை உடுத்து அழகுடன் விளங்கின. உலகின் எதுவுமே நடக்காததுபோல் சூரியன் தனது தங்கக் கதிர்களைப் பரப்பிக் கொண்டே உதித்தான். சிருஷ்டி முழுவதுமே கவர்ச்சிகரமாக விளங்கலாயிற்று. ஆனால் உயிர்களின்மையால் எங்கும் பரவியிருந்த நிசப்தத்தில் இனிய காற்றின் கீதம் கேட்கலாயிற்று.

சிருஷ்டியின் சௌந்தர்யத்தைப் பார்ப்பதற் கென்று கொடுத்து வைத்துப் பிழைத்துக் கொண்ட அம்மனிதன் சூரியனைக்கண்டதும் பித்துப் பிடித்தவன் போலாகி விட்டான். சொத்து, சுகம், துணை இவைகளனைத்தையும் இழந்த பின்புகூட மனிதன் உயிரிழக்காமலிருப்பின் அவன் மனதில் நிராசையென்பதே தோன்றுவதில்லை. நிராசையின் அந்தகாரத்தில்கூட நம்பிக்கைச் சூரியன் ஆசை என்னும் ஒளியைப் பரப்பிக்கொண்டேயிருப்பான்.

பிழைத்துக் கொண்ட அம்மனிதன் வாலிபனாக இருந்தான். தனது பெயர் என்ன? தனக்குப் பெயர் இருக்கின்றதா இல்லையா என்பதைப்பற்றி அவன் கவலையே

கொள்ளவில்லை. கண்டம், தேசம், ஜாதி, பாஷை முதலியவற்றால் தன்னை வேற்றுமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு இல்லாது போயிற்று. புகழ், அரசு, சொத்து சுகம், பேராசை, பொறாமை முதலியவைகள் எதுவுமில்லாமல் அவன் நீரினின்றும் காப்பாற்றபட்ட அம்மலையுச்சியின்மேல் வாழ்ந்துவரலானான். நீரின் பிரம்மாண்டமான அலைகளால் அடிக்கடி அடித்துக் கொண்டு வரப்படும் பெட்டிகளிலிருந்து அவனுக்கு உணவு முதலியவைகள் கிடைத்துக் கொண்டே இருந்தன. மேலும் அவன் தான் வசித்த இடத்தில் சிறு வயல்போல் ஏற்படுத்திக்கொண்டு, கிடைத்த விதைகளை விதைத்து சில செடி கொடிகளை வளர்க்க வாரம்பித்தான். நாட்கள் செல்ல அவனது சின்னஞ் சிறு குடிசைக்கருகில் மலர்கள் மலர்ந்து சுகந்தம் வீசின. தனியாக இருந்தும்கூட சாந்தியாகவும், சுகமாகவும் வாழ்ந்து வந்தான். அவன் வாழ்க்கை மகிழ்ச்சி மயமாக இருந்தது.

தனிமையான சுதந்திர வாழ்க்கையின் முதன் முதலில் அவனுக்குச் சலிப்பு ஏற்பட்டது என்றாலும் நாளடைவில் சூரியனும், சந்திரனும், தாரகைகளும், வானமும், பூங்கொடிகளும் அவனுக்கு மனித உருவங்களாகவே தென்படலாயின. சூரியன் தோன்றினாலும், தாரகைகள் மின்னினாலும் சந்திரன் உதித்தாலும் அவன் தனது மனமொத்த நண்பர்களைக் கண்டவன் மகிழ்வடைவான். பருவங்களும் அவனது மகிழ்ச்சியை அதிகரிப்பதில் பங்கெடுத்துக் கொண்டன. காற்று உயிருடனிருப்பது போல அவனுக்குத் தோன்றியது. காற்றுடன் பேசுவதற்கும் அவன் கவிதைகள் புனையலானான்.

தண்ணீர் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வரவர மூழ்கிப் போன மலைச் சிகரங்கள் மெதுவாகத் தெரியலாயின. எனினும் அம்மலைகளிலும்கூட ஒரு உயிராவது காணப்படவில்லை. மனித வாசனையற்ற பூமியைப் பார்க்க பார்க்க அவன் மனம் மிகவும் வேதனையடைந்தது. அவன் கண்ணெதிரில் பல தீவுகள் போன்ற திட்டுகளும் மலையுச்சிகளும் காணப்பட்டன. எனினும் அத்தீவுகளில் ஒன்றையேனும் கைப்பற்றித் தனது வெற்றிக் கொடியை நாட்ட அவன் மனம் விரும்பவில்லை. இருந்த இடத்திலேயே — தனது தீவிலேயே — தானே அரசனாயும், அமைச்சனாயும், காவலனாயும், சமையற்காரனாயுமிருந்து வரலானான்.

ஒரு நாள் அவன் அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியனைப் பார்த்துக் கொண்டிருந்தான். வெகு தூரத்தில் மேற்குத் திசையில் மறைந்து கொண்டிருந்த கதிரவனின் தோற்றம் வெகு அழகாக இருந்தது. அக்கதிரவனின் நிழல் நீரில் மெதுவாக அசைந்து கொண்டிருந்தது இன்னும் மிக அழகாகத் தெரிந்தது. அவன் சற்றுக் கூர்ந்து நீரில் காணப்பட்ட நிழலைக் கவனித்த பொழுது சின்னஞ்சிறு படகு ஒன்றைச் செலுத்திக் கொண்டு வெகு தூரத்தில் — வெகு தூரத்தில் — கடலலைகளின் மேல் யாரோ மிதந்தவாறு வந்து கொண்டிருப்பது தெரிந்தது. கனவைப் போல மறைந்துவிட்ட உலகச் சிருஷ்டியிலிருந்து தனக்குற்ற நண்பன் யாராவது தப்பிப் பிழைத்துக் கொண்டு வருகிறானோ என்னவோ என்பதை அறியவேண்டி

அவன் ஆவலுடன் படகு வந்து கொண்டிருந்த திக்கை நோக்கிக் கூர்ந்து கவனிக்கலானான்.

படகை ஓட்டிக் கொண்டு வந்த உருவம் அவ்வாலிபனது தீவுக்கெதிரில் சிறிது தூரத்தில் மற்றொரு தீவிற்கருகில் படகை நிறுத்தி அத்தீவில் இளைப்பாறத் தங்கிய போது, அதைக் கவனித்த வாலிபன் மகிழ்ச்சியால் துள்ளிப் பித்துப் பிடித்தவன் போலாகி விட்டான்.

படகை ஓட்டி வந்த உருவம் அத்தீவில் அடியெடுத்து வைத்ததுமே அந்தி மாலையின் அழகிய நிறத்தைக் கொண்ட அதன் கோமளமான உடல் தென்பட்டது. இலேசாகப் பரவியிருந்த வெளிச்சத்தில் அதன் பொன்னிற மேனி மீது பரவியிருந்த நீண்ட கரிய விரிந்த கூந்தல் தென் பட்டது. அவ்வுருவம் அவ்வாலிபன் இருந்த தீவைப் பார்ப்பதற்குத் தன் முகத்தைத் திருப்பிய போது அதன் பொன்னுடலில் அந்திக் கிரணங்கள் விழுந்து, உடனே இருள் சூழ ஆரம்பித்தது. விடிந்தும் விடியாத காலைப் பொழுதைப் போன்ற அதன் தேக வனப்பு கண்ணுக்குத் தெரியாமல் இருளில் மறைந்து கொண்டது. நீர்ப் பரப்பில் திடீரெனத் தோன்றிய தாமரையைப் போன்ற அவ்வழகியின் நினைவு அவ்வாலிபனின் மனதில் வந்து குடிகொண்டு அவனை இரவு முழுவதும் நித்திரை கொள்ள விடாமல் ஏங்கிக் கிடக்கச் செய்தது. எப்பொழுது விடியும்? எப்பொழுது அவ் வதிரூப சுந்தரியைக் காணலாம் என்ற நினைவிலேயே அவன் இரவு முழுவதையும் கழித்தான். தாரகைகள், சந்திரன், வானம், பிரகாசமான இரவு இனிய அமைதி இவைகளனைத்தையும் அவ்வாலிபன் மறந்து விடியப் போகும் பொழுதை எதிர் நோக்கிய வண்ணமிருந்தான்.

★

பொழுது விடிந்தது. இன்று இருந்ததைப் போல் என்றுமே இவ்வளவு அழகாக இருக்கவில்லை. இயற்கைக்குக்கூடச் சில சமயங்களில் நகை போட்டுக் கொள்ளலாம் என்று ஆசை ஏற்பட்டு விடுகிறது. அதைப்போல் தான் இன்றும் ஆசை ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வளவு அழகாக இருந்தது அந்தக் காலைப் பொழுது.

அவ்வாலிபன் முன் பின்னறியாத அப் பெயரற்ற பெண்மணியைக் கண்களால் காண்பதற்கு வேண்டி கதிரவன் உதிப்பதற்கு முன்னமேயே எழுந்து விட்டான். கதிரவனின் ஆயிரக் கணக்கான கிரணங்கள் நீர்ப்பரப்பின் மேல் விழுந்து பிரதிபலிக்க ஆரம்பித்தன. காற்று மிருதுவாக இனிமையாக, குளிர்ச்சியாக வீசிக் கொண்டிருந்தது. ஆகாயம் மேகங்களின்றி தூய்மையாக — சுத்தமாக இருந்தது. நிலமும் நீரும் வாயுவும் வானமும் தத்தமது எளிய — ஆனால் கவர்ச்சிகரமான — அழகுடன் விளங்கின. அச்சமயத்தில் அவ்வாலிபன் அந்தப் பெண்மணி தீவில் உலாவிக் கொண்டிருந்ததைக் கண்டான். கண்டதும் அவளைக் கூவியழைத்தான். ஆனால் அவளுக்குக் குரல் காதிற் கெட்டவில்லையோ அல்லது பாஷை புரியவில்லையோ என்னவோ திரும்பிக்கூடப் பாராமல் ஒரு கற்பாறையின்மேல் உட்கார்ந்து கொண்டு உதய சூரியனை நோக்கிய வண்ணமே இருந்தாள்.

இலேசான காற்று அவள் கூந்தலுடன் கொஞ்சி, குலவி, விளையாடிக் கொண்டிருந்தது. நீர் அலைகள் வந்து வந்து அவளது தாமரைப் பாதங்களை முத்தமிட்டுச் சென்று கொண்டிருந்தன.

வாலிபன் என்ன செய்வதென்று தெரியாமல் நீரைப் பார்த்தவாறே நின்முன். மலை போலெழும் அலைகளைக் கடப்பதற்கு அவனுக்குத் தைரியம் வரவில்லை. இருந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டான். ஒருவரை ஒருவர் கண்டு கொள்ளக் கூடிய தூரமே இடையிலிருந்தும் யாராலும் சந்திக்க முடியவில்லை. மாலைப் பொழுது கூட வந்து விட்டது.

இவ்விதம் எத்தனையோ மாலைகள் வந்து சென்று விட்டன. இருவரில் ஒருவருக்காவது மற்றவரைச் சந்திக்க வேண்டுமென்ற துடிதுடிப்பு இருந்ததாகத் தெரியவில்லை.

ஒருநாள் மாலைநேரம் மிக வழகாகக் காணப்பட்டது. வானத்தில் சின்னஞ்சிறு மேகங்கள் சிறு பெண்களைப்போல் வர்ண ஆடைகள் அணிந்து திரிந்து கொண்டிருந்தன. சிறிது நேரத்திற்குள் சந்திரன் உதித்தான். அன்று வைகாசி மாத பௌர்ணமி நிலா முழுசாக இருந்தது. நீர் அலைகள் அவ் வண்ணமதியைக் கண்டதும் அவனை அணைத்துக் கொள்ள விரும்புவதைப் போல எழும்பி எழும்பிக் குதித்தன. இச் சமயத்தில் வாலிபன் தனியாகத் தனது குடிசைக்கு வெளியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். நீர்ப் பரப்பில் பிரதிபலித்த சந்திரனையும், மலைகளின்மேல் வருஷித்துக் கொண்டிருந்த தண்ணொளியையும் கண்டு தன் இருப்பிடத்தை விட்டு எழுந்தான்.

எழுந்து கரைக்கு வந்து சேர்ந்தான். நீர் அலைகள் அவனது மனிதத் தன்மையைக் குறித்துப் பரிகாசம் செய்வதைப் போலக் கர்ஜித்துக் கொண்டிருந்தன. வாலிபன் காது கொடுத்துக் கூர்மையாகக் கவனித்துக்கேட்டான். மெல்லிய குரலில் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத பாஷையில் பாடப்பட்ட ஒரு அழகிய பாட்டின் அடிகள் அவன் செவிகளில் விழுந்தன. பாடுபவர் யாரென்று தெரியவில்லை. எனினும் அச் சொற்கள் தெளிவாகக் கேட்டன. புதிய பாஷையில் ஆனல் பழமையான ஒரு விஷயத்தைப் பற்றிப் பாடப் பட்ட பாடல் அது! உலக முழுதும் பரவியிருந்தும் உலகோரால் வெறுக்கப்படும்; உலகத்திற்காக இருந்தும் உலகத்தில் இடம் பெருதிருக்கும் ஒரு அற்புதமான அன்பை – காதலைப் பற்றிய பாடல் அது!

வாழ்க்கையில் மனிதன் எக்காரியத்தைப் பற்றியும், எதைச் செய்தாலும், சொன்னலும் தீரயோசித்தே முடிவுக்கு வருகிருன். ஆனல் திடீரென்று ஏதாவது சொல்லுவதாலோ செய்வதாலோ ஏற்படும் ஆனந்தத்தை அவனல் அனுபவிக்க முடிவதில்லை. ஆனல் இப்பொழுதோ யோசிப்பதற்கு நேரமேயில்லை. அவ்வாலிபன், முடிவு என்ன? எவ்வளவு தூரம் எந்தத் திக்கு முதலியவை எவற்றையும் யோசிக்காமலேயே அவ்வழகிய இரவைக்கண்டு, இவ்வினிய இரவில் இறப்பதும் கூட ஒரு பாக்கியம் என்று நினைத்துத் "தடால்" என்று தண்ணீருக்குள் குதித்தான். அலைகளைக் கடந்து கொண்டே வேகமாக

முன்னேறினான். ஆழ மறியாத நீரில் நீந்துவதிலும் ஒரு தனி இன்பம் இருப்பதை அவன் உணர்ந்தான்.

எதிர்த்த தீவை அவன் அடைந்த பொழுது அவ் ஊர் பேர் தெரியாத பெண் ஒரு கற்பாறையின் மேல் உட்கார்ந்து பாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவள் தனது இதழ்களை அதிகமாகத் திறக்காமலேயே பாடிக் கொண்டிருந்தாள். பாடுவதிலேயே அவள் லயித்து போகவில்லை. ஏதோ பொழுது போக்குக்காகப் பாடுவதைப் போல் அசிரத்தையாகப் பாடிக் கொண்டிருந்தாள். எனினும் அவள் குரலும் பாட்டும் இனிமையாக இருந்தன.

வாலிபன் மெதுவாக நடந்து அவளுக்குப் பின்னால் சென்று நின்றான். அப்பெண்ணின் அழகிய கூந்தலில் அற்புதமான மலர்கள் தூங்கிக் கொண்டிருந்தன. அவளது கோமளமான. தந்தம் போன்ற சிறு உடலிலிருந்து ஒரு வித நறுமணம் வீசியது. அவளது மதிபோன்ற வெண்மையான

முகத்தில், விரிந்து கொண்டிருக்கும் சிவப்பு ரோஜா போன்ற இதழ்கள் ஆனந்தமான சங்கீதத்தை வர்ஷித்துக் கொண்டிருந்தன.

வாலிபன் அவளையே பார்த்தவாறு நின்றான், எனினும் அவள் பாடுவதை நிறுத்தவில்லை. வாலிபன் மெதுவாக நடந்து சென்று அவள் பாதங்களுக் கருகில் உட்கார்ந்து கொண்டான். அப்பொ

ழுதும் பெண் பாடுவதை நிறுத்த வில்லை. பாடப் பட்டுக் கொண்டிருந்த பாடலின் பகுதி வாலிபனது உடலின் ஒவ்வோரு அணுவிலும் ஒருவித இன்ப வேதனையைத் தூண்டிவிட்டது. அவனது உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. தன் ஜன்மம் சாபல்யமடைந்து விட்டதென்று அவன் நினைத்தான். அவன் மெதுவாக காதல் பொங்கித் ததும்பும் குரலில் "பெண்ணே! நீ எங்கிருந்து வருகிறாய்? இது என்ன பாட்டு?" என்று அவளைக் கேட்டான்.

அவள் சிப்பியில் முத்துக்கள் மின்னுவதைப் போலத் தன் பற்கள் மின்ன, இலேசாக ஒரு புன்னகை பூத்தாள். ஆனால் பதிலே பேசவில்லை.

"உங்கள் ஊர் எது? நீ என்ன ஜாதி?" என்று மறுபடியும் கேட்டான் வாலிபன். திடீரென்று பாட்டு நின்றுவிட்டது. நிசப்தம் நிலவியது. "எந்த ஊருக்குப் பெயர் இல்லையோ அது தான் என் ஊர்! எந்தக் குலத்திற்குப் பெயர் இல்லையோ அது என் குலம்!" என்ற பதில் அவளது எளனச் சிரிப்பின் மூலம் தனக்குக் கிடைத்து விட்டதென்று நினைத்தான் வாலிபன்.

எனினும் அவன் இன்னும் தைரியம் கொண்டான். தனது வாழ்க்கையில் தான் உலகத்தில் கண்டிருந்த ஒரு அதிசயமான விஷயத்தைப்பற்றிக் கேட்கலாம் என்று நினைத்து, "உனக்கு...வி... வாகம் ஆகிவிட்டதா?" என்ற கேள்வியை அவளிடம் போட்டு வைத்தான்.

'கடகட' வென்று சிரித்து விட்டாள் அந்தப் பெண்மணி. எவ்விதமான பதிலும் அளிக்க வில்லை.

வெட்கத்தால் குன்றிப்போய் விட்டான் வாலிபன், எனினும் அவன் மனதில் பெருத்த புயல் ஒன்று வீசிக் கொண்டிருந்தது. "இந்தப் பெண் யாராக இருக்கலாம்? அவளுக்கு எந்த ஊர்? அவளுக்கு எந்தத் தேசம்? அவள் எந்த ஜாதி?" என்ற கேள்விகள் அவன்மனதில் தோன்றிக் கொண்டிருந்தன. அவன் வாழ்ந்திருந்த உலகத்தில் இக் கேள்விகளே முக்கியத்துவம் பெற்றிருந்தன. அவனால் பேசாமல் இருக்க முடியவில்லை. மறுபடியும் அவளைப் பார்த்து, "பேர் ஊர் தெரியாத பெண்மணியே! நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"படைப்பு முழுவதும் பிரளயத்திற்குப் பலியாகி விட்டது! நான் எங்கிருந்து வருகிறேன் என்பது எனக்கே தெரியாது!" என்று முதன் முறையாக அவ் வாலிபனது கேள்விக்குப் பதிலளித்தாள் அப்பெண்.

"நீ எந்தக் குலத்தைச் சேர்ந்தவள் என்பதாவது உனக்கு நினைவிருக்கிறதா இல்லையா?"

இதைக் கேட்டதும் அவள் மறுபடியும் சிரித்தாள்.

"வாலிபனே! உனக்கு என்ன வேண்டும்? நீ கேட்கிற ஊர், பெயர், குலம் எல்லாம் எனக்குத் தெரியும் என்று வைத்துகொள்! அப்போது அதனால் உனக்கு ஆக வேண்டியது என்ன? சொல்! கவலையற்ற மனதுடன் உன் உள்ளத்தைக் கூறு" என்றாள் வாலிபனைப் பார்த்து.

இவ்வளவு மழை பெய்து ஜலப் பிரளயம் ஏற்பட்ட பின்பும் முதலிலிருந்ததைப் போலவா இப்பொழுதும் வாழ்க்கை இருக்க வேண்டுமென்று உள்ளூர ஆசை

கொண்டிருந்த வாலிபன் மெதுவாக, "பெண்ணே! உன்னை நான் காதலிக்கிறேன்!" என்று பதிலளித்தான்.

பெண் சிறிது நேராக நிமிர்ந்து உட்கார்ந்தாள். "யுவனே! இன்னொருமுறை சரியாகச் சொல்! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

"நான் உன்னைக் காதலிக்கிறேன்! நீ என்னைக் காதலிக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன். நாமிருவரும் மணம் செய்து...... அதிருக்கட்டும் உன் குலம் எது?"

அப்பெண் எழுந்து நின்றாள். பிறகு சற்றுக் கோபங் கலந்த குரலில், "வாலிபனே! நீ தேசம் அல்லது குலத்துக்காக என்னை மணக்க விரும்புகிறாயா அல்லது காதலுக்காகவா? நீ காதலனாகத் தோன்றவில்லை. தேசம் அல்லது குலத்தையே பிரதானமாகக் கருதும் சட்ட நிபுணன் போலத் தோன்றுகிறாய்! நானோ ஒரு பெண்! நான் ஒரு புருஷனை-காதலை மணக்க விரும்புகிறேன். உன்னைப் போன்ற சட்ட நிபுணனையல்ல! போ! இங்கிருந்து சென்று விடு! ஊரையும் பேரையும் குலத்தையும் அறிந்த பிறகு காதல் ஏற்படும் நாட்டைச் சேர்ந்தவளல்ல நான்." என்று கூறிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு மறுபடியும் உலகைப் போன்ற பழமையானதும், காதலைப்போல அமரத்துவம் வாய்ந்ததுமான அந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்தாள்.

"உன் பெயராவது சொல்ல மாட்டாயா?" என்று கேட்டான் வாலிபன்.

"இங்கிருந்து போய்விடு யுவனே! நீ காதலனல்ல! பெயரற்ற காதலையே நான் விரும்புகிறேன்! எனக்கு எந்தப் பெயருமில்லை. அப்படி ஏதாவது எனக்குப் பெயரிருந்தால் அந்தப் பெயர் "பெண்" என்பதுதான்.

உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவந்த "பெண்" என்ற அந்தச் சொல்லைக் கேட்டதும் அந்தப் "புருஷன்" ஸ்தம்பித்து விட்டான் தன் ஊர், பெயர், குலம், சட்டம் முதலியவை யாவற்றையும் மறந்து "காதலுக்காகக் காதல்" என்ற ஏதோ ஒரு பாடலின் அடிகளால் ஆகர்ஷிக்கப் படுவதைப் போன்று அப் பெண்ணை நோக்கி முன்னேறி அப் பெண்ணின் அல்லித்தண்டு போன்ற கரங்களைத் தீண்ட முயற்சித்தான். ஆனால் அப்பெண் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டு "ஏன்? என்ன யோசனை செய்தாய்?" என்று கேட்டாள்.

"பெண்ணே! எனக்குக் கூட ஊர் பேர் எதுவுமில்லை. நீ பெண்! நான் ஆண்! விவரிக்க முடியாத சக்தி ஒன்று என்னை உன்பால் இழுக்கிறது!"

இனிமையாகச் சிரித்துக் கொண்டே அவனை ஏற்றுக் கொள்வதுபோல் அவள் தன் கைகளை நீட்டினாள். அவ் வாலிபன் அவளது கரங்களைப் பற்றிக் கொண்டே அவளை நெருங்கினான்.

[ஒரு குஜராத் கதையின் தழுவல்]

★

அம்மா!

கே. சீனிவாசன் எம்.எஸ்ஸி

அம்மா நீ இதை என்றும் படிக்க மாட்டாய்.
உனக்குத் தெரியாத மொழியில் எழுதுகின்றேன்.
நான் பேசும் பொழுதோ,
என் வார்த்தைகள் உனக்கு அர்த்தமாவதில்லை.
அம்மா, உனக்கு நம்பிக்கை இருக்கிறது.
நிம்மதியே உன் உலகின் அஸ்திவாரம்,
நீ எனக்கு சந்தோஷத்தை அளித்தாய்.
திருப்தியும் சாந்தமும் அளித்தாய்
அறியாமையின் சந்தோஷத்தில் வாழ்ந்தேன்.
அம்மா, என்னுடைய இந்த உலகமோ,
ஒரு கொடிய மாற்றாந்தாய்.
புலப்படாத பொருள்களால் என்னை அடிக்கின்றாள்.
அவைகளை எண்ணங்கள் என்று சொல்கிறோம்.
அவை பெரிய பிரவாகமாக வருகின்றன.
நிம்மதியும் மகிழ்வும் மூழ்கி விட்டன.
கேள்வியும் சந்தேகமும் மேலே மிதக்கின்றன.
என் மாற்றாந்தாய்
எனக்கு மகிழ்வற்ற அறிவை அளித்து விட்டாள்.
அம்மா.
ஒரு வேளை உனக்கு அர்த்தமாகவில்லையோ?
எப்படி அர்த்தமாகும்?
இருந்தாலும், என்னை மன்னித்து விடு.

தர்ம போதனை

[கு. ப. சேது அம்மாள்]

சித்தார்த்தன் கபிலவஸ்துவையும், தன்னேர்களையும் விட்டுச் சென்ற பின்பு ஏழாவது தடவையாக வசந்தலக்ஷிமி கபிலவஸ்துவில் கோலம் கொண்டாள்.

பூமிதேவி பச்சைப் போர்வையால் மூடுண்டாள். மரங்களில் மலர்கள் சிரித்தன; தென்றல் பிறந்தது.

கபிலவஸ்துவின் அரண்மனை உத்யான வனத்திலிருந்த தாமரை ஓடையில் நீர் தெரியாமல் தாமரை மலர்களும், மொட்டுகளும், இலைகளுமாக வியாபித்திருந்தன.

அந்த தாமரை ஓடையின் ஜலம் வைடூர்ய மணிபோல பிரகாசித்துக் கொண்டு, கரையில் நடப்பவர்களுடைய நிழலை பிரதி பலிக்குமே கண்ணாடிபோல; அந்த காலம் மாயமாக மறைந்து— ஓடையில் தாமரைக்கொடி மண்டிக் கிடந்தது இப்போது!

இளவரசன் சித்தார்த்தன் அழகி யசோதரையுடன் பொழுதெல்லாம் திரிந்து விளையாடும் அந்த கரைக்கட்டு — இன்று சூனியமாக இருந்தது.

வெகு நாட்களுக்கு நினைப்பின் அரிப்பைத் தாங்கமுடியாதவளாக யசோதரை அந்த இடத்தைப் பார்க்க வேண்டுமென்று வந்தாள். வந்தவள் மேலே செல்ல கால் எழும்பாமல், ஓடையின் ஒரு புறம் நின்று அதைப்பார்த்தாள்.

கண்ணீர் பார்வையை மறைக்க, நெஞ்சினின்றும் பொங்கி வந்த துக்கத்தை அடக்க மாட்டாதவளாக "என் தேவா, ராஜசிம்ம, தாங்கள் எங்கு சென்றீர்கள் யசோதரையை தனியாக விட்டு விட்டு?"

ஐயோ, நல்ல வேளையாக இந்த ஓடையில் ஜலம் தெரியாமல்போய் விட்டது, இல்லையேல் — நான் ஒண்டியாகத்தானே பிரதிபலிக்க வேண்டும் ஓடை நீரில்கூட! ஆ, என்ன நினைக்கிறேன் நான்? வாஞ்சையில் குறைவில்லை. அழுகிறேன், அணிகளைப் புறக்கணித்து விட்டேன். ஆகாரத்தையும் ஒடுக்கிக் கொண்டேன். அற்ப நித்திரைதான் நாயகனுடைய ஞாபகம் மாறுதிருக்க அவருடைய அரைக் கச்சை என்னேடு இணைத்துக் கொண்டிருக்கிறேன்.

இவ்வளவு வேஷமும் எதற்காக? என் நாதனை நான் பிரிந்து உயிர் வாழ்ந்திருக்கிறேனே — மரிக்காமல்; அதற்கு சமாதானமாக!

ஆ! மோசம்! அன்பே உருவான என் இறைவனைப் பிரிந்து வருஷங்கள் ஆறுகி விட்டன! ராகுலன் ஒரு தடையாக இருந்தான் என் பிராணத்தியாகத்திற்கு — பையன் என் கையை விட்டு நகர்ந்து விட்டான். இனி பிழைத்துக் கொள்வான் — என்றால், விருத்தியாப்பியரான அரசருடைய ஆக்ஞை என்னைத் தடுக்கிறது இப்போது!

மகனே போய்விட்டார். நான் இருந்து இவருக்கு என்ன ஆக வேண்டும்? தெய்வமே, உன் சித்தம் என்ன? ஐயோ, எவ்வளவு தெய்வங்களை வலம் வந்து வணங்கி

னேன்; எல்லாம் பொய்தானு? தெய்வ அருள் என்பது வெறும் கதைதானு?......

"அம்மா, அம்மா, இங்கே வந்து பாருங்களம்மா" என்று சந்தோஷக் கூச்சலிட்டுக் கொண்டு ஒடி வந்த ராகுலனுடைய குரல் அவள் கவனத்தைத் திருப்பியது.

தனது கண்ணீரை ராகுலன் பார்க்கக் கூடாதென்று சட்டென்று மறு புறம் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டாள். முகத்தில் மலர்ச்சியைத் தருவித்துக் கொண்டு, ஓடிவரும் பாலகனை அருகிலழைத்து அணைத்து முத்தமிட்டு "என்னடா கண்மணி?" என்று கேட்டாள்.

"அம்மா, அரிசி போட்டால் மீனெல்லாம் வந்து தின்கிறதம்மா அவசர அவசரமாக! பாவம் பசி அதற்கு; இல்லையா அம்மா?"

"ஆமாம் பசிதான். பாவம் போய் இன்னும்போடு, தின்னட்டும், போ அப்பா......" என்று முதுகில் தட்டிக்கொடுத்து அனுப்பிவிட்டு, பொறுக்க முடியாமல் வந்த அழுகையை அடக்க ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

தலைக்கு உயரே பறந்து கொண்டிருந்த கொக்குகளைக் கண்டதும் அவள் மனது அடித்துக் கொண்டது!

"ஆஹா, மானிட ஜாதியை உயர்வாகப் பேசுகிருர்களே ஞானவான்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு; கிடையவே கிடையாது! மானிடப் பிறவிதான் துக்கத்திற்குப் பிறப்பிடம் போன்றது. இதோ இந்தக் கொக்குகள்! சுயேச்சையாகப் பறந்து திரிந்து அகண்ட உலகின் அத்தனை காட்சிகளையும் சுவைக்கக் கொடுத்து வைத்த ஜாதி பக்ஷி ஜாதி! பறவைகளே, உங்கள் உல்லாச யாத்திரை எது வரையில்? ஆ! என் நாதன் எங்கிருக்கிருரோ அறியேன் — எங்காகிலும் கண்டால் வந்து என்னிடம் தெரிவிப்பீர்களா?" என்று பேதுற்றவளாகப் புலம்பிக் கொண்டு தன் வசமிழந்து நின்ருள் யசோதரை.

அவள் சிந்தனைக் கலையும் வரையில் காத்திருந்த தோழி ஒருத்தி முன் வந்து வணங்கி "அம்மணி, தங்கள் மனது அமைதி அடையுமாக. வெகு நாட்களுக்குப் பிறகு இன்று, இப்பொழுதுதான் ஒரு நற்செய்தி கிடைக்கப் பெற்ருேம்"

"நற் செய்தியா?"

"ஆம் தாயே, அஸ்தினபுரத்து வர்த்தகரொருவர் ஆபரணக் கற்கள் விற்றுக்கொண்டு வந்தார். தங்கள் உத்திரவுப்படி அவரையும் அழைத்து சில கற்களை வாங்கிக் கொண்டு, பிறகு நமது இளவரசருடைய சமாசாரத்தைப்பற்றிக் கேட்டேன். அவர் சொன்ன தகவல் — அவர் கொண்டு வந்த அத்தனை நவரத்னக் கற்களைவிட உன்னதமானது! நமது இளவரசர்; தங்கள் நாதரான சித்தார்த்தரைப்பற்றிய நிச்சயத் தகவலோடு வந்திருக்கிருர்......"

இந்த வார்த்தை காதில் ஏறியது தான் தாமதம் "என் பிரேம வல்லப, எங்கிருக்கிறீர்கள்?" என்று கதறிக் கொண்டு பொத்தென்று தரையில் விழுந்தாள் யசோதரை. தூக்கியெடுத்து ஆச்வாசப்படுத்திய வண்ணம் "தேவி இதுகாறும் துயரமுற்றீர்கள்; அது யுக்தம். இப்போது அது அனுசிதமானது. கபிலவஸ்துவின் திலகம் மறுபடி தன் நகரத்திற்குத் திரும்பிவருவதாக இன்ருே இவர் மூலமாக அறிகிருேம்!"

"ஆம்! இதுபோன்ற கதை எவ்வளவு கேட்டாயிற்று இது வரையில்?"

"இது கதையல்ல தேவி, நிச்சய மானது. அன்று — இளவரசரு டைய பிறந்த தினத்தன்று ஜோதி டர் கூறியவாரே — உலகத்திற்கு உண்மையை அறிவிக்க உதித்த ஞானச்சுடர்போல ஒளிர்ந்து கொண்டு மானிட வர்க்கத்திற்கு முக்தி நெறியை அருளுகின்ற 'புத்த'ராக வருகிறார் என்ற மகத் தான செய்தியைக் கொண்டு வந் திருக்கும் இவ்வர்த்தகருக்கு நாம் என்ன கைம்மாறு அருள்வது?"

"தோழி, கைம்மாறு அருள் வது இருக்கட்டும், நீ விரைந்து சென்று அந்த வர்த்தகரை நமது வாசஸ்தலத்திற்கு அழைத்து வா, வெகு நாட்களாக தாக மடைந் திருக்கும் என் செவிகள், என் நாதருடைய செய்தியை பானம் செய்து வேட்கை தணியட்டும். அப்பால், அந்த வணிகர் எதை அபேக்ஷிக்கிறாரோ அந்த தன ராசியை அவருக்கு அளிப்போம். போ, சட்டென்று" என்று அவளை அனுப்பி தானும் ராகு லனை அழைத்துக் கொண்டு தனது மாளிகையை நோக்கி நடந்தாள்.

சற்று நேரத்தில் வணிகரை முன்னிட்டுக் கொண்டு தோழி வருவதைக் கண்ட யசோதரை எழுந்து முன் சென்று வணிகரை வரவேற்று அழைத்து வந்ததைக் கண்டு தோழி திடுக்கிட்டு விட் டாள்!

ஆஹா, ஆவலானது ராஜரீகத் தையும்கூட அல்லவோ வென்று விடுகிறது! அரசி யசோதரை, சுத்தோதன சக்ரவர்த்தியின் நாட் டுப் பெண், இன்று ஒரு சாமான்ய வர்த்தகரை எதிர்கொண்டு வந்து உபசரிப்பது என்பது என்ன விப ரீதம்! ஆனால் ஒன்று உண்மை, வணிகரை அரசி வரவேற்கவில்லை. இளவரசருடைய செய்தியை யன்றோ அவ்வளவு மதிப்புடன் வரவேற்கிறாள்!

தோழியின் சிந்தனை இப்படி அலைந்து கொண்டிருந்தது. வந்த வரை உபசரித்து ஆசனமிட்டு "தங்கள் வரவு நல்லதாகுக. வெகு தூரமிருந்து வந்துள்ள நீங் கள், நான் தேடிக்கொண்டிருக் கும் க்ஷேமச் செய்தியை எனக் குத்தர இங்கு விஜயம் செய்திருக் கிறீர்கள், இளவரசரைக் கண்ணால் கண்ட நீங்கள் எனக்குப் பந்து வாகி விட்டீர்கள். கபிலவஸ்து வின் நாயகன் எவ்வாறிருக்கிறார்?" என்று வினவும்போது யசோத ரைக்கு துக்கம் நெஞ்சை அடைத் தது.

அதைக் கண்டு இரக்கம் மிகுந்த அந்த வர்த்தகர் ஹிதமான தொனி யில் "தேவி, துயரத்தை விடுங் கள். தங்களுடைய அருகினின் றுச் சென்ற கபில வஸ்துவின் இளவரசர் இப்போது ராஜாதி ராஜனைவிட சிரேஷ்டனாகி விட் டார். பல்கு நதிக் கரையிலுள்ள ஒரு ஆலமரத்தடியில் தங்களு டைய இறைவன் லோகரக்ஷண மான தர்மத்தை அறிந்தார். அவ ருக்கு நிழல் தந்த அந்தமரம்கூட 'போதி விருட்ச'மாகி விட்டது! அவரை அங்கு தொழுது வணங்கி தர்மமறிந்த எண்ணற்ற மானிட ரில் நானும் ஒருவன். தேவி, அவரையிழந்து நீங்கள் சோக முற்றீர்கள். அதன் விளைவாக அவருடைய வாக்கிலிருந்து பெரு கும் ஞானம்ருதம் மக்களுடைய அறியாமையை துவம்சம் செய்து அறிவைத் தருகிறது! ஒவ்வொரு இடத்திலும், முக்திக்கு வழிவிடும்

அவருடைய உபதேசங்கள், காற்றைத்தொடர்ந்து செல்லும் சருகு போலும், இடையனைத் தொடர்ந்து செல்லும் ஆட்டு மந்தை போலும், அவருடைய போத மார்க்கத்தைத் தேடி ஆயிர ஆயிர மானிட உயிர்கள் செல்லுகின்றன!......"

"அப்படியா! அவர் சுகத்தோடு இருக்கிறாரா?"

"அரசியே, என்ன கேட்கிறீர்கள்! எல்லாருக்கும் சுகத்தை அருளும் தங்களிறைவன் சுகம் என்ற செய்தியை நாங்கள் சொல்லி அறிய வேண்டுமா? ஆம், அமைதியோடுகூடிய அற்புத வாக்கைப் பெற்றுவிட்ட அந்த பகவானுடைய தரிசனத்தை சீக்கிரத்திலேயே காண விருக்கிறீர்கள்!" என்று சொன்னார் வர்த்தகர்.

யசோதரையின் சந்தோஷம் கரை மீறியது. ஆனந்த பாஷ்பம் சொரிய "க்ஷேமச் செய்தி கொண்டு வந்த உத்தமரே, உங்களுக்கு எந்நாளும் சுபமே சிந்திக்கட்டும் .இன்றுமொன்று; இப்பெரிய அற்புதம் எவ்வாறு நிகழ்ந்த தென்பதைத் தாங்கள் அறிவீர்களோ?"

"ஏதோ அறிந்த வரையில் சொல்லுகிறேன். புத்த பகவான் போதமறிந்த பிரதேசத்திற்கு அருகிலிருந்த ஜனங்கள் பல்லுகனென்ற என் தோழனுக்குச் சொன்ன செய்தியைத் தங்களுக்கு சொல்லுகிறேன்.

வெகுநாட்களாக, பலவித யோக வழிகளை அனுசரித்தும் தவம்புரிந்தும், தான் கண்டுபிடிக்க வேண்டியதைக் காண இயலாமல், மனதை தன்னுள் இழுத்துக் கொண்டு நிச்சலனராக விருட்சத்தடியில் அமர்ந்து விட்டார்.

நாட்கள் ஒவ்வொன்றாகக் கழிந்தன. சாக்கிய முனி அதை அறியவில்லை. அசைவற்ற பெருமோனத்தில் மெய்மறந்து ஈடுபட்டார். சரீரம் உலர்ந்தது. புலன்கள் அடங்கின. மனது உட்கார்ந்தது. சாக்கிய முனியின் சித்தத்தில் ஞான வெளி கண்டது அன்று! என்று? சொல்லுகிறேன்; பகவான் உண்மையை உணருவதற்கு முன்னிரவுகூட அவருடன் உலகத்தின் கோர விளைவுகள் கடைசி முறையாகப் போரிட்டனவாம்! இரவு நேரம், மாயையை ஒத்த பயங்கர இருள்! அவற்றினின்றும் பிறக்கும் பயம், காமம், குரோதம், கொலை முதலிய கோரச் செய்கைகளின் கூக்குரல்கள் போன்ற ஒரு காட்சி; இடையில் பூமியும், ஆகாயமும் ஒன்றாகும் ஊழிக்காற்று! இவற்றையெல்லாம் கண்டு கலங்காத அந்த சுத்த வடிவான பகவானை மாரனும்கூட கடைசி முறையாக அவரை சோதித்துப் பார்க்கத் துணிவு கொண்டு நின்றான். இரவின் ஒரு பகுதி மாரனுடன் போர் புரிந்து வெற்றிபெற்று, ஜயத்தின் நிச்சிந்தையில் அயர்ந்து விட்டார்.

பொழுது எழுந்தது, ஒளி பிறந்தது, ஒளியோடு ஒளியாக அந்தக் காலையில் பகவான் தான் வெகு பாடுபட்டு அடைந்த ஞான பிம்பத்தின் பூரணதேஜஸுடன், ஆனந்த வாரியில் ஆழ்ந்தவராக போதி மரத்தடியில் வீற்றிருந்தார் என்பதாக பல்லுகன் எனக்குச்சொன்னான்!

"எண்ணியதை நண்ணி விட்டார்! அவருடைய உத்தேசம் பயனுள்ளதாகி விட்டது! இளங் குழந்தை ராகுலனும், கிழத் தந்தையும், பிரிய மனைவியும், அவர் நினைவினின்றும் அகன்று விட்டோம்......"

"அரசியே, அது அவ்வாறன்று! சத்யவாக்கைப் பெற்ற அந்த ஞானமூர்த்தி உலகின் உய்வை நாடி முயன்று வெற்றி பெற்றிருக்கிருர்.

"வாஸ்தவம்! அவருடைய போதனையின் பலத்தால் உமக்கு இவ்வளவு சித்தித்து விட்டது!..."

"அது மட்டுமன்று, அவர் போத மடைந்தது ஒரு பேறு.

பாபச் செயல்களில் சட்டென்று ஈடுபடும் வண்ணம் அது மனிதரை மயக்குகிறது, அதன் வலையில் மனிதக் கூட்டம் அகப்பட்டு அல்லலுறுவதே சரியாகி விட்டது உலகில். ஆயிரமாயிரம் சூழ்ச்சிகள் செய்து சுகவாழ்வு பெற்று அக்ஞானத்தில் அழுந்தி கிடக்கும் மனித குலம் — அதிலிருந்து தப்பிவர வலிமையற்ற மானிடனுக்கு இந்த உயர்வுப் பாதையடைய எப்படி சாத்திய மாகும்? ஆசையின் அவத்திற்கு உதவுபடியாகத்தான் மானிட வாழ்வின் சூழ் நிலை முழுதும் அஞ்ஞான மயமாக இருக்கிறது! அப்ப! நான் தவிக்கவில்லையா என்ன — இன்பச் சிறையில் பொன் விலங்கு பூட்டிக்கொண்டு மனே விருத்திகளை, விகார சபலங்களை வெல்வதென்பது எல்லாருக்குமே சுலபமான காரியமா? உலகத்துக்கு ஒருவன்தான் அவ்வாறு பாடுபட்டு அதை லோகோபகார மாக மனித குலத்திற்கு நன்மை செய்ய வேண்டும்.

ஆனல் எனது இந்த புதிய மார்க்கத்தை யார் பின்பற்றுவார்கள் என்று ஓய்ந்து உட்கார்ந்து விடுவாராம்! பிறகுதான் உயிர்களின் மீது கருணை கொண்டவராக, அஹிம்ஸா தர்ம பிரசாரத்திலீடு பட்டு மக்களை உய்விப்பதா — அல்லது தான் கண்டதை அனுபவித்து சித்தி பெறுவதா — பெரும் போராட்டத்தில் அவருக்கு கொஞ்ச காலம் ஆகிவிட்டது.

நல்லதிற்கறிகுறியாக ஓரிரவில் ஒரு வியாகூல தொனி 'நான் கெட்டேன். உலகம் நசித்துப் போய் விட்டது' என்று புலம்பி நிறுத்திற்று.

சற்று நிசப்தம்.

உடனேயே பெருமூச்சோடு கூடிய ஒரு கருணைத் தொனி 'பகவன், உனது தர்மம் சொல்லப் படட்டும்' என்று ஓதிற்று!

அவ்வளவுதான்! உதறிக் கொண்டு எழுந்து விட்டாராம் புத்தபகவான். "நான் சொல்வதைச் சொல்லுகிறேன், அறிபவர்கள் அறியட்டும்" என்று கிளம்பி தாம் வந்த திசையை நோக்கி நடக்க ஆரம்பித்து சில நாட்களில் காசியை அடைந்தார்.

அவர் முன்புகண்ட அதே தவசிகள் ஐவரையும் அணுகிச் சென்று மனிதனுக்குத் தனது பழவினைகளே அனுபவத்திற்குள்ளது என்றும், அதைத்தவிர வேறு விதி இல்லையென்று விளக்கி, மனிதன் தனக்குத் தானகவேதான் பந்தத்தையோ, மோக்ஷத்தையோ சம்பாதிக்க வேண்டியவன் என்பதையும், மனேவிகாரங்களை அடக்குபவனுக்கு விடுதலை உண்டு என்று தெளிவாக்கி விட்டு ஜனன மரணத்தினின்றும் விடுபடுவதற்கு இவைகளே முக்கிய சாதனமென்றும் உபதேசித்தார்.

கௌண்டின்யர், பத்ரகர், அச்வஜித், பஸவர், மகாசாமர் என்ற அந்த ஐந்து முனிவர்களும் அப்பொழுதே பகவானுடைய தர்ம வழியைக் கடைப்பிடிக்க நினைத்து அவருக்கு சீடரானர்கள்.

மறுதினத்திலிருந்து நகரத்தின் உத்யானவனத்தில் வசித்துக் கொண்டு தர்ம போதனை நடத்திக் கொண்டிருந்தது கிரமமாக காசி தேசாதிபதி யசத் ராஜனுடைய சமூகத்திற்கும் எட்டிவிட்டது.

ஆச்சரியம் பாருங்கள்! பகவானுடைய வாக்சக்தி திருஷ்டிக்குப் புறம்பாக இருக்கும் மனிதர்களைக் கூட தன்னை நோக்கி இழுத்துச் செல்வதே அவருடைய மகத்துவத்தின் பிரதரிசனம்!

அரசன் தனது முக்கிய சகாக்களான ஐம்பத்து நான்கு தோழர்களுடன் பகவானுடைய தர்ம போதனையைக் காணவந்தார்.

மணல் மேட்டிலிருந்து உற்பத்தியாகி சிற்ருறு ஓடுகிறது. அந்த மணலிடத்தில் ஜீவனுண்டாகி, உடனே அங்கு பயிர் பச்சையும் புஷ்பங்களும் தோன்றி விடுகிறதோ, அவ்வாறுதான் அவருடைய வாக்கின் உயிர்ப்பில் வனித உள்ளங்களில் ஒரு சாந்தமும், நிறைவுற்ற அறிவும் உதயமாகி விடுகின்றன. அவ்விதமே அவருடைய தரிசனத்தையும், வாழ்க்கையும் கேட்க வந்த அரசனும், அவருடைய ஐம்பத்து நான்கு தோழர்களும் அன்றே பகவானுக்கு சீடரானர்கள்!

ஆகமொத்தம் அறுபதுபேர்.

பிம்பசார மன்னனுடைய நகரமான ராஜகிருஹத்திற்கு அடுத்த 'வேலுகவன'த்தை பகவானுடைய வாசஸ்தலமாக்கிக் கொடுத்தார்.

அந்தத் தோட்டத்தின் வாசலில் நடப்பட்டிருக்கும் ஒரு கல்லில்

"வாழ்வின் தன்மையையும், அதற்குக்காரணத்தையும் ததாகதர் அறிவித்தார். வாழ்வின் கஷ்டத்தினின்று நீங்கும் வழியையும் போதித்தார்"

என்று பொறித்திருக்கிறது!

அரசியே, பிரதிதினமும் கூட்டம் கூட்டமாக தர்ம போதனையைக் கேட்கவரும் மானிடர்கள், உடனுக்குடனேயே காவி தரித்து புத்த தேவருக்கு சீடராகி உத்தம தார்மிகர்களாகி விடுகிருர்கள்!

"ஆயிற்று" இந்த மழை காலம் தொடங்கு முன்பே அவர் இங்கு வந்து விடலாம்" என்ருர் வர்த்தகர்.

இதுகாறும் சிலைபோலமர்ந்து செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்த யசோதரை, தன்னுணர்வு பெற்று "அறநெறி கற்ற பெரியவரே, உங்களுடையவாக்கிலிருந்து பிறந்த ஜீவரஸம்என்னை உயிர்ப்பித்தது. மகத்தான உபகாரம் செய்து எந்நாளுக்கும் என் நன்றியைப் பெற்று நன்மை பெய்துவீராக. சொல்லுங்கள் மிகுதியையும், என் நாதன் என்று வருவார் — என்று நான் அவரைக் காண்பேன்?"

"அம்மணி, ஆயிற்று சிறிது காலமே, ராஜ கிருஹத்திற்கும், கபிலவஸ்துவிற்கும் இருக்கும் குறுக்கு வழியாக வந்தால் ஒரு மாதம்தான். நான் வந்தது அவ்வாறுதான். தேவி, வெகு நேரமாகி விட்டது, உத்திரவு......"

"திவ்யமாக! சிறந்த ஞான விருத்த, இதோ நான் தரும் இந்த தனராசிகள் நாளைக்கே மறைந்து விடக் கூடியவை. உங்களுடைய இந்த ஹிதவசனம் எனக்கு மறையாத நினைவு. சுகமாகச் சென்று வாருங்கள்" என்று யசோதரை பெரு அளவு தனத்தையும், ரத்னங்களையும் வெகுமானமாக அளித்தாள் வர்த்தகருக்கு!

197252

பாராட்டு

[டி. சி. ராமசாமி]

எல்லையற்ற பிரியத்தால் "தங்கக் கட்டி" என்று தாய் தன் குழந்தையை அழைப்ப துண்டு. ஆபரணங்களும் நாணயங்களும் செய்யக் கூடிய தங்கக் கட்டியை உருக்க உருக்க பிரகாசம் அதிகரிக்கிறது. அதுபோல், உயிருள்ள "தங்கக் கட்டியும்" உலகப் பட்டரையில் அனுபவச் சுத்தியால் தாக்கப்படும் பொழுது நசிந்து போகக் கூடாது. நிமிர்ந்து நிற்க வேண்டும். நிமிர்ந்து நிற்கும் தன்மை திடீரென்று ஏற்பட முடியாது; ஏற்பட்டாலும் நீடித்திருக்க முடியாது.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று சொல்வார்கள். (நம்மவர்கள் மகத்தான மனோ தத்துவ ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த வாக்கியமே போதுமானது) நிமிர்ந்து நிற்கும் பழக்கம் தொட்டிற் பழக்கமாயிருக்க வேண்டும். தொட்டிற் பழக்கங்கள் கடவுளைப் போல் ஆதியும் அந்தமும் இல்லாமல் எழுவதில்லை! பெற்றோர்களின் பழக்க வழக்கங்கள், சூழ் நிலை முதலியவற்றைப் பொருத்துத்தான் ஏற்படுகிறது.

ஒரு வீட்டில் மூன்று குழந்தைகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். (நமது தேசத்தில் ஒவ்வொரு வீட்டிலும் சராசரி 6 குழந்தைகளுக்குக் குறைவதில்லை!) மூவரும் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். பெற்றோர்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்.

முதல் குழந்தை 'சூட்டிப்பாக' விளையாடுகிறது. இரண்டாவது குழந்தை "ஒருமாதிரியாக" விளையாடுகிறது. மூன்றாவது குழந்தை "மக்கு." பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள்?

முதல் குழந்தையைப் பெரிதும் பாராட்டுகின்றனர். மற்ற குழந்தைகளைப் பார்த்து, "ஆகா, அவன் எவ்வளவு சமர்த்து! நீங்கள் இருந்து என்ன பயன்? என்று குறை கூறுகின்றனர். இது மட்டுமா? சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் "முதல் பையனைப்போலில்லையே!" என்று இடித்துக் காண்பிக்கின்றனர். வார்த்தைகள் விதைக்கும் விபரீதங்களைப் பற்றிப் பெற்றோர்கள் சிந்திப்பதேயில்லை! குற்றம் குறைகளைப் பாராட்டும் முறைகளைத் தெரிந்து கொள்வது மில்லை!

இதனால் பச்சிளங் குழந்தைகளின் மனம் படும் பாடு சொல்லும் தரமன்று. வாழ்க்கைப்பாதையில் உற்சாகமாய் முன்னேற்றம் அடையும் தெம்பை இழந்து விடுகின்றனர், முதல்வனை விட தாங்கள் எல்லா விதத்திலும் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் ஓங்கி வளர இடம் தருகின்றனர். தங்களுடைய பேச்சிலும் செயலிலும் நம்பிக்கை இழந்து விடுகின்றனர். இந்த உலகத்தில் தங்களுக்கு இனி வெற்றி என்பதே இல்லை யென்று நினைக்கின்றனர். சுருங்கச் சொன்னால், தோல்வி

மனப்பான்மை (Inferiarity complex) என்ற மனே வியாதிக்கு அடிமைகளாகி விடுகின்றனர். இவர்களால் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்படும் நஷ்டத்தை என்னென்பது?

இரண்டு கடிகாரங்கள் ஒரே மாதிரி யிருப்பதில்லை! மனிதர்களும் அப்படித்தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் வேறு பட்டவர்கள். இதனை மனதிலிருத்திக் கொண்டு தான், குற்றம் குறைகளைப் பார்க்க வேண்டும். குறைகளை நயமான முறையில் எடுத்துச் சொல்வதுடன், குணங்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும். அப்பொழுதான் உள்ளமும் உணர்ச்சியும் மலர்ச்சி பெறும்.

நம்மவர்களிடம் பாராட்டும் பழக்கம் மிகக் குறைவு. இந்த நிலைமை மாற வேண்டும்.

★

பணம்

பணம் தான் வாழ்க்கைக்குப் பிரதானம். பணத்தினல் சந்தோஷத்தைப் பெற முடியாது என்பது வாஸ்தவம். ஆனல் துன்பத்தை சௌகரியமாக அனுபவிக்கும் சக்தியைப் பணம் தருகிறது.

— ஜோட் —

★

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A, Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam

நகைகளில் பெயர் பெற்ற

PAR

இவர் நகைகளே சிறந்தவை

P.A. ராஜு செட்டியார் & பிரதர்

ராஜா. கோயமுத்தூர். 139.

ஜுபிடர் பிக்சர்ஸ்

Lessees of:

செண்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

★

இப்பொழுது தயாராகிவரும் படங்கள்:

ராஜகுமாரி விப்ரநாராயண அபிமன்யு அசோகமாலா கிருஷ்ண விஜயம்	— ஜுபிடர் பிக்சர்ஸ்
அசோகமாலா (சிங்களம்)	— சிலோன் தியேடர்ஸ் லிமிடெட்
உஷா	— ஸ்ரீ கார்த்திகேயா பிக்சர்ஸ்
சுதர்சன்	— ராயல் டாக்கி டிஸ்டிரிபூட்டர்ஸ்
பில்ஹணன்	- சேலம் ஷண்முகா பிலிம்ஸ்